
# சித்தர்களின் பூசா விதிகள்

த.கோவேந்தன்



# சித்தர்களின் பூசா விதிகள்

(செம்பதிப்பு)

பதிப்பாசிரியர்

**புலவர் த. கோவேந்தன்** இல.வல்

---

**சங்கர் பதிப்பகம்**

21, ஆசிரியர் சங்கக் குடியிருப்பு,

இராஜாஜி நகர் விரிவு,

வில்லிவாக்கம், சென்னை-600 049.

# நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | சித்தர்கள் பூசா விதிகள் |
| பதிப்பாசிரியர் | : | புலவர் த. கோவேந்தன் |
| மொழி | : | தமிழ் |
| நூல்வகை | : | வழிபாடு |
| உரிமை | : | பதிப்பகத்தார்க்கே |
| பதிப்பு | : | 11.11.2000 |
| இரண்டாம் பதிப்பு | : | அக்டோபர் 2001 |
| நூலின் அளவு | : | 1 X 8 கிரவுன் |
| எழுத்து | : | 12 புள்ளி |
| பக்கம் | : | 136 |
| தாள் | : | 10.9 |
| கட்டு | : | வல்லட்டை |
| விலை | : | ரூ 35/- |
| நூல் வெளியீடு | : | சங்கர் பதிப்பகம்<br>21, ஆசிரியர் சங்கக் குடியிருப்பு,<br>இராஜாஜி நகர் விரிவு,<br>வில்லிவாக்கம், சென்னை-600 049. |
| ஒளியச்சு | : | யுனிக் கிராபிக்ஸ்<br>183, பெரியார் பாதை, சூளைமேடு,<br>சென்னை -600 094. போன் : 4815602 |
| அச்சிட்டோர் | : | மலர் பிரிண்டர்ஸ், சென்னை - 34. |

# பூசா விதிகளுக்கு ஒரு முன்னோட்டம்

**செங்கதிர்** உதிப்பதற்கு இரண்டு மணிக்கு முன் எழுந்து கைகால் தூய்மை செய்து கொண்டு வெண்ணீறணிந்து இறைவனைத் தியானிக்க. பின்னர் அவசிய கருமங்கள், பல் துலக்குதல் நீராடல் என்பவைகளைச் செய்து தோய்த்துலர்ந்துள்ள ஆடை அணிந்து திருநீற்றினை உத்தூளனமாக அணிந்து கொள்க. அநுட்டான பாத்திரத்தை இரண்டு முறை அத்திர மந்திரத்தால் கழுவிச் சுத்தி செய்து இருதைய மந்திரத்தால் சுத்த சலம் பூரித்துத் தூய்மையான இடத்தில் சிறிது சலம்விட்டு அதன் மேல் பாத்திரத்தை வைத்து ஆசனத்திலிருந்து அநுட்டானம் பண்ணுக. குமிழி நுரை புழு முதலியவையில்லாது புனிதமுள்ள சலக்கரை யிலிருந்தும் அநுட்டானம் பண்ணலாம். போக காமிகள் கிழக்கு முகமாகவும் மோட்சகாமிகள் வடக்கு முகமாகவும் அமர்ந்து அநுட்டானம் பண்ணுக.

## *நிலத்தூய்மை*

தாமிருக்கும் நிலத்தை 'ஓம் அத்திராயபட்' என்று சலத்தினாலே புரோட்சிக்க. இதுவே நில சுத்தியாம்.

## *கணபதி, குரு வணக்கம்*

இருகை நடுவிரல் மூன்றையும் உள்ளே மடக்கி மற்றை விரல்களை நிமிர்த்துச் சிகாய முத்திரைக் கொண்டு

முட்டியாகப் பிடித்த இரண்டு கைகளினாலும் 'ஓம் மகா கணபதியே நம:' என்று மூன்று தரம் தலையின் உச்சி இரு பக்கத்திலுங் குட்டிக் கொண்டு இரு கையுங் கூட்டிப் பெருவிரல் இரண்டும் பிணைந்திட நமஸ்கார முத்திரையினாலே 'ஓம் சிவகுருவே நம:' என்று கும்பிடுதலாகிய இதுவே கணபதி குரு வணக்கமாம்.

## *நீர்த் தூய்மை*

வலக்கை விரல்களைச் சேர்த்து நீட்டிச் சிறு விரல் கீழாகப் பதாகை முத்திரையால் சலத்தை இடமும் வலமுமாக 'ஓம் அத்திராயப்பட்' என்று நீக்கி நிரீட்சணம், புரோட்சணம், தாடனம், அப்பியுட்சனம், தாளத்திரையம், திக்குபந்தனம், அவகுண்டனம், தேனு முத்திரையாகிய அட்டசங்காரஞ் செய்க.

**நிரீட்சணம்**

வலக்கைச் சுட்டு விரலையும் நடு விரலையும் மடக்கி மற்றை விரல்களை நீட்டிய நிரீட்சண முத்திரையினாலே பெருவிரல் அணிவிரல்களுக்கு நடுவே 'ஓம் சிவாய நம:' என்று சலத்தைப் பார்ப்பது நீரீட்சணம்.

இனி, வலக்கை அணிவிரல் பெருவிரல், நடுவிரல் மூன்றுஞ் சேர்த்து மற்ற விரல்களை நீட்டி அவ் இரு விரல்களின் நடுவே பார்ப்பது நீரீட்சணம் என்பர் ஒரு சாரார்.

இந்தப் பாவனை சலத்திலேயுள்ள அநுசிகத்தைச் சூரிய நேத்திரத்தால் உலர்த்தி அக்கினி நேத்திரத்தால் தகனப்படுத்திச் சந்திர நேத்திரத்திலிருக்கிற அமிர்தத் தினால் நனைந்து சலம் குளிரும்படி பார்ப்பது.

**புரோட்சணம்**

இனி வலக்கைச் சுட்டுவிரல் நுனியைத் துரட்டி போல் வளைத்து, நின்ற நால்விரலையும் மடக்கி அங்குச முத்திரையினாலே புருவ நடு விந்து அமிர்தத்தை 'இருதையாய வெளஷட்' என்று வாங்கிச் 'சிவாயநம:' என்று சலத்திலே வைப்பது புரோட்சணம்.

**தாடனம்**

வலக்கைச் சுட்டு விரலை நீட்டி மற்றைய நால்விரல்களையும் மடக்கிக் கீழ் நோக்கி அந்த விந்து அமிர்தம் தகர 'ஓம் அத்திராய பட்' என்று அடித்து நிரந்ததைச் சிவோதகமாகப் பாவிப்பது தாடனம். 'ஓம் அத்திராய ஓம் பட்' என்றடித்து அங்ஙவம் பாவிப்பது தாடனம் என்பாருமுளர்.

**அப்பியுட்சணம்**

பெரு விரலை உள்ளே மடக்கி மற்றை நால் விரலையுஞ் சேர்த்து நீட்டிய சுவத்திக முத்திரையால் அதாவது கவிழ்ந்த பதாக முத்திரையால் 'ஓம் கவசாயவெளஷட்' என்று அந்த அமிர்தம் சலத்திலே அமிழும்படி மூடுவது அப்பியுட்சணம்.

ஆக, நிரீட்சணம்,புரோட்சணம், தாடனம், அப்பியுட்சணமாகிய இவையே நாற்சுத்தி எனப்படும்.

**தாளத்திரையம்**

வலக்கைப் பெருவிரல் ஒழிந்த விரல்களினால் பதாகை முத்திரை கொண்டு இட உள்ளங்கையிலே 'ஓம்

அஸ்திராய பட்' என்று மூன்று தரந் தட்டுவது தாளத்திரையம்.

இட உள்ளங்கையில் வலக்கைச் சுட்டுவிரல் நடுவிரல் அணிவிரல் மூன்றையுஞ் சேர்த்து நீட்டி மற்ற இரு விரலையும் நீக்கிய கோவிடான முத்திரையால் 'ஓம் அஸ்திராய பட்' என இட உள்ளங்கையில் தட்டுதல் தாளத்திரையம் என்பாருமுளர்.

இத் தாளத்திரையம் விக்கினம் பண்ணுகிற இராட்சதரை ஓட்டுவது.

**திக்குபந்தனம்**

வலக்கைச் சிறுவிரல் முதலாகிய மூவிரலும் மடக்கிச் சுட்டுவிரல் நுனியால் பெருவிரல் அடிதொட்டுச் சோடிகா முத்திரையால் 'ஓம் அஸ்திராய பட்' என்று சலத்திலே கிழக்கு முதலான பத்துத் திக்கிலும் தெளிப்பது திக்குபந்தனம்.

இது அந்த அமிர்தம் எங்கும் பரவாமல் அக்கினிக் கோட்டையிட்டதாகப் பாவிப்பது.

**அவகுண்டனம்**

வலக்கைச் சுட்டுவிரலை நீட்டி மற்றைய நான்கு விரல்களையும் மடக்கிய அதீட்சண முத்திரையினாலே 'ஓம் கவசாய வெளஷட்' என்று ஒருமுறை வளையச் சுற்றுவது அவகுண்டனம்.

இது, அந்த அமிர்தத்துக்கும் கோட்டைக்கும் இரட்சையாகிய அகழியாம். இது பூதா அமிர்தம்.

**தேனுமுத்திரை**

இரு கரமும் கூட்டி எல்லா விரல்களையும் இடையிடையே கோத்துக் கொண்டு பெரு விரல் இரண்டையும் பிணைத்து, வலக்கைச் சுட்டு விரல் இடக்கை நடு விரலோடும், வலக்கைச் சிறு விரல் இடக்கை அணி விரலோடும் இடக்கைச் சிறுவிரல் வலக்கை அறிவிரலோடும், சேரச் செய்து நீட்டிக் கவிழ்த்த தேனுமுத்திரையால் 'ஓம் சிவாய வௌஷட்' என்று ஞானாமிர்தம் பொழிந்ததாகப் பாவிப்பதே தேனுமுத்திரை கொடுப்பது.

நாற்சுத்தியொடு தாளத்திரையம், திக்கு பந்தனம், அவகுண்டனம், தேனுமுத்திரையாகிய இந்நான்கும் சேர்ந்து அட்ட சங்காரம் எனக் கூறப்படும்.

பின்பு மகாமுத்திரை கொடுக்க, இங்ஙனஞ் செய்தலே சல சுத்தியாம்.

*அஸ்திர சந்தியோபாசனம்*

வலக்கை நடுவிரல் மூன்றுஞ்சேர்த்து நிமிர்த்து நடுவிரலால் சலத்தைத் தொட்டுக் கோமுக முத்திரையினால் சிரசிலே மூன்றுமுறை 'ஓம் அஸ்திராய வவுஷட்' என்று புரோட்சித்து இருகையுங் கூட்டிச் சுட்டுவிரல் மூலங்களில் பெருவிரல் நுனிகளைச் சேர்த்துத் தசாங்க முத்திரையால் 'ஓம் அஸ்திராய சுவாகா' என்று சூரியனிடத்திலிருக்கிற சிவனுக்கு மூன்று தர்ப் பணஞ்செய்து 'ஓம் அஸ்திராய நம:' என்று பத்துருச் செபித்து மீட்டுமொருமுறை 'ஓம் அஸ்திராய சுவாகா' என்று

தர்ப்பணஞ் செய்க. இதுவே 'அஸ்திர சந்தியோபாசனமாம்'. இந்த அஸ்திர சந்தியோபாசனம் ஸ்நானத்தின் போது பண்ணாதிருந்தால் இப்போது பண்ணுவதாம்.

## *ஆசமனம்*

வலக்கையை விரித்துப் பெருவிரலையும் சிறு விரலையும் பிரித்து விட்டுப் பெருவிரல் அடியில் சார்ந்த உழுந்து அமிழ்ந்துகிற பிரமாண சலமெடுத்துப் பிரம தீர்த்தமாகவெண்ணி ஓம் ஹாம் ஆத்ம தத்துவாய சுவதா, ஓம் வித்தியா தத்துவாய சுவதா, ஓம் ஹீம் சிவதத்துவாய சுவதா வென்று கையிற் பௌத்திரந் தரியாவிடில் இடையிடையே 'கவசாய நம:' வென்று கைகழுவி மூவகை முப்பத்தாறு தத்துவங்களும் சுத்தியாகும்படி அடிநாக்கு முதல் உந்தி வரைக்கும் ஒரு மயிரிழைப் பிரமாணமாக உட்கொள்ளு வதாகும்.

வலக்கைப் பெருவிரலை அடியிற் சேர வளைத்து மற்ற நால்விரல்களையும் சேர்த்துக் கோகன்ன முத்திரையினாலே உழுந்து அமிழ்ந்தும் பிரமாண சலமெடுத்து ஆசமிக்க என்பர் சிலர். ஏறக் கொள்ளுதல் சுராபானத்தையொக்கும். குறையக் கொள்ளில் வேதங்கள் பிரீதியடையா.

இந்த மூவகைத் தத்துவங்களுக்கும் அதிதேவர்கள் முறையே பிரமன் விஷ்ணு உருத்திரராகப் பாவிக்க.

## *அதர சுத்தி*

வலக்கை விரல்கள் ஐந்துஞ்சேர்த்து நீட்டிப் பதாகை முத்திரைக் கொண்டு பெருவிரல் அடியினால் 'ஓம்

அஸ்திராயபட்' என்று அதரம் இரண்டையும் இடமாக இரண்டு தரமும் உள்ளங்கை கொண்டு கீழாக ஒரு தரமும் துடைத்துக் 'கவசாய நம:' என்று கை கழுவுக.

கீழாக ஒரு தரம் துடைக்கும்போது 'ஓம் இருதையாய நம:' எனத் துடைத்தல் வேண்டுமெனக் கூறுவர் ஒரு சாரார்.

அதரமிரண்டையும் இடமாக இரண்டு தரந் துடைப்பது அட்டமா நாகங்களுக்குப் பிரீதியாம். பின்பு உள்ளங்கை கொண்டு கீழாக ஒருதரந் துடைப்பது கணபதிக்குப் பிரீதியாம்.

## தொடுமிடம்

பெருவிரலையும் அணிவிரலையும் கூட்டித் திவ்விய முத்திரையினால் ' ஓம் இருதையாய நம:' என்று கீழ்வாய் வலமூக்கு இட மூக்கு வலக்கண் இடக்கண் வலக்காது இடக்காது நாபி இருதையம் வலத்தோள் இடத்தோள் தலை என்னும் இப்பன்னிரண்டு தானங்களையும் வலம் முன்னும், இடம் பின்னுமாகத் தொடுக. இதுவே தொடும் இடமாம், 'ஓம் இருதையாய வௌஷட்' என்று தொடல் வேண்டுமென்பர் சிலர்.

அதர சுத்தி தொடுமிடம் இரண்டையும் ஆசமன விதியிலேயே அடக்கிக் கொள்க.

கீழ்வாயாகிய முகத்திற்குக் கங்கையும் வல மூக்கிற்குப் பிரணவமும் இட மூக்கிற்குப் பிராணனும் வலக் கண்ணுக்குச் சூரியனும், இடக் கண்ணுக்குச் சந்திரனும், வல இடச் செவிகளுக்கு அட்டதிக்குப் பாலகர்களும் நாபியாகிய கொப்பூழ்க்குப் பிரமாவும் இருதயமாகிய

மார்புக்கு உருத்திரனும், வல இடத் தோள்களுக்கு அச்சுவனித் தேவர்களும், சிரசுக்கு விஷ்ணுவுமாக அவ் வவ்விடங்கட்கு அதிதேவதைகளாய் அவ்வவ்விடங் களிலே வீற்றிருப்பார்கள். ஆதலால் தொடுமிடந் தொடுவது அந்தந்தத் தானங்களுக்கு சுத்தியும், அந்தந்த தேவர்கட்குப் பிரீதியுமாம்.

இவ்வாறு ஆசனமஞ் செய்த பின்பு கரசோதனை செய்க. 'ஓம் அஸ்திராய பட்' என்று இடக்கையினால் வலக்கையின் உள்ளையும் புறத்தையும் துடைப்பதே கர சோதனையாகும்.

## *விபூதி சுத்தி*

பத்ம சுத்தி எனவும்படும். வலக்கைப் பெருவிரல் நடுவிரல் அணிவிரல்களாகிய மூன்று விரல்களையுங் கூட்டி நீட்டி மற்ற இருவிரல்களையும் மேலாக நிமிர்த்து மிருக முத்திரையால் திருநீற்றை எடுத்து இடக்கையில் வைத்துக் கொண்டு இராட்சதர் நிமித்தமாக நிருதி கோணத்தில் 'அஸ்திராய வும் பட்' என்று தெறித்துப் பின்பு நாற்சுத்திசெய்து வலக்கையால் மூடிக் கற்பாதி திருநீற்றைச் சங்கீதா மந்திரமெனப்படும் ஈசானாதி பதினொரு மந்திரத்தினாலும் கற்பமுறையில் ஆக்கப்படாத திருநீற்றை நிவிர்த்தியாதி பஞ்சகலா மந்திரங்களினாலும் சங்கிதா மந்திரத்தினாலும் அபி மந்திரித்து இந்த விபூதிக்கு அதிதேவதை மூன்று சிரசும் ஒன்பது கண்ணும் மூன்று கையும் மூன்று பாதமுமாக இருக்கிற காலாக்கினி உருத்திரராகப் பாவிப்பதாகிய இதுவே விபூதி சுத்தியாம்.

## *விபூதி ஸ்நானம்*

இவ் விபூதி ஸ்நானம் மல ஸ்நானமெனவும் விதி ஸ்நானமெனவும் இருவகைப்படும். இவ் விரண்டனுள் முன்னர்த்தாகிய மல ஸ்நானஞ் செய்த பின்னர் விதி ஸ்நானஞ் செய்யத் தக்கது. மல ஸ்நானமாவது வலக்கை அணிவிரல் நடுவிரல் சுட்டுவிரல் பெருவிரல் நாலுங்கூட்டி நிரோதான முத்திரையால் சலமெடுத்து 'ஓம் இருதையாய வௌஷட்' என்று விபூதியில் விட்டுக் 'கவசாய நம:' என்று குழைத்து ''ஸள்'' என்னும் அத்திர பீசத்தால் உச்சி சரணாந்தம் திவ்விய முத்திரையால் பூசுவதாகிய இதுவே மல ஸ்நானமாம். பின்பு 'கவசாய நம:' எனக் கை கழுவுக.

இனியொரு சாரார் அஸ்திர மந்திரம் உச்சரித்து விபூதித் தூளியை வலக்கைப் பெருவிரல் அணி விரல்களால் எடுத்துச் சிரசு முதற் பாதம் ஈறாகப் பூசுதலாகிய மல ஸ்நானஞ் செய்தலினால் ஆன்மாவைப் பந்தித்த மூலமாகிய ஆணவமானது தனது சத்தி கெட்டொழியும் என்பர்.

இனி, விதி ஸ்நானமாவது விபூதியை முக்குறித் தொகுதியாகத் தரித்தல். இங்ஙனந் தரித்தல் ஆணவம் கன்மம் மாயையென்னும் மும்மலங்களையும் அழித் தொழிக்குங் கருத்தினாலாம்.

முன்புபோல விபூதியெடுத்து அபிமந்திரித்து அந்தப்படிச் சலம்விட்டுக் குழைத்து அணிவிரல் நடுவிரல் சுட்டுவிரல் ஆகிய மூவிரலுங் கூட்டித் திரிசூல முத்திரையால் பதினாறு தானங்களிலும் தரிப்பது உத்தமம், அணிவிரல் நடுவிரல் பெருவிரலாலுந் தரிக்கலாம். தரிக்கிற

அளவு- நெற்றி மார்பு தோள் இரண்டு- ஆக இந் நான்கு தானங்களுக்கும் அவ்வாறு அங்குல நீளமும் மற்றைத் தானங்களுக்கு ஒவ்வோரங்குல நீளமுமாகத் தரிக்க வேண்டும். தரிக்குந் தானங்களும் அத்தான மந்திரங்களும் அத் தானங்களின் அதி தேவதைகளுமாவன.

| *தானம்* | *மந்திரம்* | *தேவதை* |
|---|---|---|
| சிரசு | ஓம் ஈசான மூர்த்தாய நம: | சதாசிவம் |
| நெற்றி | ஓம் தற்புருஷ வத்திராய நம: | கந்தன் |
| மார்பு | ஓம் அகோர இருதையாய நம: | விஷ்ணு |
| நாபி | ஓம் வாமதேவ குய்யாய நம: | துர்க்கை |

இந்த நாலிடம் நீக்கி மற்றப் பன்னிரண்டு தானங்களுக்கும் மந்திரம் 'ஓம் சத்தியோ சாத மூர்த்தியே நம:' என்பதொன்றே யாகலான் அவ்வொன்றையே மற்று அவ்வொவ்வொரு தானங்களிலும் உச்சரித்துத் தரிக்க.

| | |
|---|---|
| முழந்தாள் இரண்டு | - சத்தமாதர்கள் |
| தோள்கள் இரண்டு | - தேவேந்திரன் |
| முழங்கை, முன்கை, செவிகள் | - சேடன் முதலிய நாகம் |
| முதுகு | - பிரமன் |
| கண்டம் | - அத்திரதேவதை |

என்று இவ்வாறு தியானிக்க.

நாபியில் தரித்த பின்பு வலமுழந்தாள் இடமுழந்தாள் வலப்புயம் இடப்புயம் வலமுழங்கை இடமுழங்கை வல

மணிக்கட்டு இடமணிக்கட்டு முதுகு வலக்காது இடக்காது கண்டம் ஆகிய இப் பதினாறு தானங்களிலும் திரிபுண்டரமாகத் தரிக்க. சிரசிலும் நெற்றியிலும் மார்பிலும் மும்மூன்று முறை தரித்தல் வேண்டும். மற்ற இடங்களில் ஒவ்வொரு முறை தரிக்க. முக் குறிகளின் இடைவெளி ஒவ்வொரங்குல அளவினவாயிருத்தல் வேண்டும். தரிக்கும்போது அடிக்கடி அத்திரத்தால் குழைத்துத் தரிக்க.

தரித்தற்குச் சொன்ன முக்குறிகளின் அங்குலப் பிரமாணம் ஏறினால் ஆயுள் சீரணிக்கும். குறைந்தால் செய்த தவம்போம். பதினாறு தானங்களில் தரிக்கும் நடுநடுவே 'அத்திராயபட்' என்று அஸ்தசுத்தி செய்ததாகப் பாவித்துக் குழைத்துச் சாத்துக. இது ஆக்கினேய ஸ்நானம். விபூதி தரிக்கும் அளவு பிராமணருக்கு ஒரு நிட்சகமும், மற்றவர்க்கு இரண்டரை நிட்கமும் ஆம். நிட்கம் - ஒரு கழஞ்சு.

எஞ்சிய விபூதியோடு கூடிய கைநிறையைச் சலம் விட்டுக் கொண்டு கும்பமுத்திரையாகப் பிடித்து 'ஓம் ஈசானமூர்த்தாய நம:' என்பது முதலிய நமோந்தப் பஞ்சப் பிரமங்களை யுச்சரித்து 'ஓம் சிவாய வௌஷட்' என மூல மந்திரத்தால் சிரசிலே புரோட்சித்துவிட்டு 'ஓம் கவசாய நம:' வெனக் கை கழுவுக. இதுவே மந்திர ஸ்நானம். விபூதி தரிக்கும் போது கீழே சிந்தின விபூதியை 'ஓம் அத்திராய பட்' என்று தாளத் திரையஞ்செய்து மகா முத்திரையினாலே அணைத்து வாரியெடுத்து 'இருதையாய நம:' வென்று இருதையத்திலே வந்ததாகப் பாவித்து ஒடுக்கிக் கொண்டு பின்பு முன்புபோல ஆசமனம் அதரசுத்தி தொடுமிடம் செய்து மூலமந்திரத்தைத் தியானித்துப் பிரமரந்திரத்தி லிருந்து பரம வியோம ரூப சத்தியின் இடமாகக் கடைக்

காலில் பால்பொங்கி விழுகிறதுபோல விழுகிற அமிர்தத்தினாலே சர்வ அங்கமும் நனைந்ததாகப் பாவிப்பது மானத தீர்த்தம். இது எத் தலத்திலும் அசூசி பொருந்தின இடத்திலே பண்ணச் சுத்தியாம். பின்னர் கரசுத்தி செய்து சகளீகரணம் பண்ணுக. (கர நியாசமும் அங்க நியாசமுமாகிய இரண்டிற்கும் சகளீகரணம் எனப் பெயர்; நியாசம் என்னுஞ் சொல், வைப்பு அல்லது கிரியையெனப் பொருள்படுமாதலால் ஏற்பது கொள்க.) கரநியாசம் செய்த பின்னர் அங்க நியாசம் செய்யத்தக்கது.

கர சுத்தி

கர சுத்தியாவது வலக்கை நடுவிரல் மூன்றுஞ் சேர்த்து மற்றைய இரு விரலையும் நிமிர்த்த சாண் முத்திரையினாலே 'ஓம் அத்திராயப்பட்' என்று சுசியாயிருக்கிற வலக்கையால் இடக்கை அகங்கையில் இரண்டு தரமும், புறங்கையில் ஒரு தரமும் துடைத்துச் சுசியான இடக்கையினால் வலக்கை அகம் புறம் ஒவ்வொருதரம் துடைத்து ஞானாக்கினியாலே தகனப் பட்டதாகப் பாவிப்பதாகிய இதுவே கரசுத்தியாகும்.

கர நியாசம்

இரு கையுங்கூட்டி இரண்டு பெரு விரல்களையும் உள்ளே மடக்கி வளைத்துச் 'சிவாசனாய நம:' 'சிவ மூர்த்தியே நம:' என்று வைத்து 'ஈசான மூர்த்தாய நம:' என்று பெரு விரல்களிலே சுட்டு விரலினாலே துடைத்துச் சுட்டுவிரல் முதலாகச் சிறுவிரல் ஈறாக நான்கினும் அங்குட்டங்களினாலே 'தற்புருட வத்திராய நம:' 'அகோர இருதையாய நம:' ' சத்தியோசாத மூர்த்தியே நம:' என்று

முறையே துடைத்து உள்ளங் கைகளிலே பெருவிரல்களை 'வித்தியா தேகாய நம:' என்று வைத்து நடுவிரல் ஆறையும் உள்ளங்கைக்குள்ளே 'நேத்திரேப்பியோ உம் பட்' என்று மடக்கி வைத்துப் பெரு விரல்களை உள்ளங் கைக்குள்ளே கை முழுதும் வைக்கிறதாகப் பாவித்து மூல மந்திரத்தை உச்சரித்து வைத்துச் சிறுவிரல் முதலாகப் பெருவிரல் ஈறாக ஐந்திலும் 'இருதையாய நம:' 'சிரசே சுவாகா- சிகாய வெளஷட்- கவசாய வெளஷட்- அத்திராப்பட்' என்று முறையே துடைத்துக் கவசத்தினாலே கைகளைச் சுற்றி இரண்டு கைகளையுஞ் 'சிவாய வெளஷட்' என்று கூட்டவும். இதுவே கர நியாசமாகும்.

இனி, இருகையுங் கூட்டிக் கூப்பிப் பெருவிரல் இரண்டும் உள்ளே வளைத்துச் சின்முத்திரையால் 'சத்தியோ வெளஷட்' என்று தகனப்பட்ட கரங்களை அமிர்தத்தினாலே நனைந்ததாகப் பாவிக்க. பின்பு அங்கங்களுக்குள்ளே கையும் ஒன்றானாலும் விசேடித்துச் சிவார்ச்சனைக்கு ஏதுவாய்ச் சத்திமயமும் சிவ மயமுமாயிருத்தலால் இருகையுங் கூட்டிப் பத்மாசனமாகப் பாவித்து அதிலே சிவனை ஆவாகனம் பண்ணுகிறதாகப் பாவித்துக் கிருகத்தன் சிருட்டிக் கிரமமாகவும் பிரமசாரி திதிக்கிரமமாகவும் வானப்பிரத்தனும் சந்நியாசியும் சங்காரக் கிரமமாகவும் செய்யக்கடவர். சிருட்டிக்கிரமமான கரநியாசம் இரண்டு பெருவிரல் நுனியும் அணிவிரல் மூலங்களில் வைத்த அதிட்டான முத்திரையால் சிவாசனாய நம: சிவமூர்த்தியே நம: என்று ஆசனமூர்த்தி கற்பித்துப் பெருவிரல் மூலங்களிலே 'சுட்டுவிரல் நுனிகளை உட்டணீக முத்திரையால் ஈசான மூர்த்தியே நம: என்று

வைத்துப் பெருவிரல்களின் நுனியால் சுட்டுவிரல் நுனிகளைச் சின்மய முத்திரையாலே தற்புருட வத்திராய நம: என்று வைத்துப் பெருவிரல்களின் நுனியால் நடுவிரல் நுனிகளை யோக முத்திரையால் அகோர இருதையாய நம: என்று வைத்துப் பெருவிரல்களின் நுனியால் அணிவிரல் நுனிகளைத் திவ்விய முத்திரையினாலே வாமதேவ குய்யாய நம: என்று வைத்துப் பெருவிரல்களின் நுனியால் சிறுவிரல் நுனிகளை ஆக்கிர முத்திரையினால் சத்தியோசாத மூர்த்தியே நம: என்று வைத்து இவை சிவனுக்கு ஐந்து திருமுகமாகப் பாவித்துப் பெருவிரல்களின் நுனியால் அணிவிரல் மூலத்தில் அதிட்டான முத்திரையால் வித்தியாதேகாய நம: என்று தேகத்தையும், இருகை நடுவிரல் மூன்றும் உள்ளே மடக்கிப் பெருவிரல் சிறுவிரல்களை நிமிர்த்து இருகையுங்கூட்டிக் கிடா முத்திரையால் 'நேத்திரேப்பியோ நம:' என்று இச்சாஞானக் கிரியா சொரூபமாகப் பாவித்து நேத்திரங்களைக் கொடுத்து அதிட்டான முத்திரையால் சிவாய நம: என்று சிவனை ஆவாகனம் பண்ணிப் பெருவிரல்களின் நுனியால் சிறுவிரல்களில் இருதையாய நம: அணிவிரல்களில் சிரசே நம: நடுவிரல்களில் சிகாயை நம: சுட்டு விரல்களில் கவசாய நம: என்றுஞ் சுட்டுவிரல் நுனிகளால் பெருவிரல்களில் அத்திராய நம: என்றும், சிவனுக்கு இருதையாதிகாறும் நியாசம் பண்ணி இருகைப் பெருவிரல்கள் சிறுவிரல்களை நீட்டி நடு மூன்று விரல்களையும் வளைத்து வலக்கை மேலும் இடக்கை கீழுமாக ஆத்மலிங்க முத்திரையால் கவசாய நம: வென்று ஒருதரம் கையை வளையச் சுற்றி நமக்கார முத்திரையால்

சிவாய வௌஷட் என்று கொடுப்பது கர நியாசம் என்பாருமுளர்.

### அங்க நியாசம்

வலக்கைப் பெருவிரல் அணிவிரல்களினாலே இருதையத்திலே 'சிவாசனாயே நம: சிவமூர்த்தியே நம:' என்று வைத்துக் கையை முட்டியாகப் பிடித்துப் பெருவிரலினாலே சிரசில் ஈசானத்தை உச்சரித்து வைத்துப் பெருவிரலைச் சுட்டிவிரல் முதலாக நான்கு விரலினும் கூட்டி நெற்றி இருதையம் நாபி பாதங்கள் எனும் இவ்விடங்களில் தற்புருஷ- அகோர- வாமதேவ சத்தியோசாதம் இவைகளை நமோந்தமாக உச்சரித்து முறையே வைத்து இருதையத்திலே பெருவிரல் அணிவிரல்களை வித்தியா தேகம் உச்சரித்து வைத்து நேத்திரத்தினாலே நேத்திரங்கள் மூன்றும் நாலும் நடுவிரல் மூன்றையும் வைத்துப் பெருவிரல் அணிவிரல்களினாலே மூலத்தை உச்சரித்துத் தேகமெங்கும் வைத்ததாகப் பாவித்து இருதையத்திலே வைத்து இருதையஞ் சிரசு சிகை இந்த மந்திரங்களை உச்சரித்துப் பெருவிரலினாலே சிறுவிரல் அணிவிரல் நடுவிரல்களை வைத்து முறையே தொட்டுக் கவச மந்திரத்தினாலே சுட்டுவிரல்களை நீட்டி இரண்டு புறமுங் கழுத்தைச் சூழ்ந்து மேலே தொடுத்துக் கீழே இறக்கி முலை மார்பு மட்டும் கொண்டுவந்து வைத்து, உள்ளங்கைகளிலே அத்திராய மந்திரத்தினாலே வலமிடமாக அணிவிரல்களை வைத்து 'அத்திராய வும் பட்' என்று தாளத்திரயமும் சோடிகா முத்திரையினால் திக்குபந்தனமும் பண்ணிக் 'கவசாய வௌஷட்' என்று அவகுண்டம் செய்து 'சிவாய வௌஷட்' என்று

அடிமுடியளவாக மகாமுத்திரை கொடுக்க. இதுவே அங்க நியாசமாம்.

இனி அங்கமெல்லாஞ் சிவபாவனையாக்கும் வலக்கைப் பெருவிரல் அணிவிரல் கூட்டிய திவ்விய முத்திரையினால் மார்பிலே சிவாசனாயநம; என்று வைத்து உந்தியினின்றும் இருதையாந்தமான வெண்டாமரை ஆசனமாகப் பாவித்துத் திவ்விய முத்திரையால் மார்பில் சிவமூர்த்தியே நம: என்று ஆசனத்துக்கு மேலே மூர்த்தி கற்பித்து வலக்கை முட்டியாகப் பிடித்து அணைத்த பெருவிரல் நுனியால் உட்டணீக முத்திரையால் சிரசில் ஈசான மூர்த்தியே நம: சின்மய முத்திரையால் புருவநடு விந்துத் தானத்தில் தற்புருஷவத்திராய நம: யோக முத்திரையால் மார்பில் அகோர இருதையாய நம: திவ்விய முத்திரையால் உந்தியில் வாமதேவகுய்யாய நம: ஆக்கிர முத்திரையால் இரண்டு முழந்தாள்களிலும் சத்தியோசாத மூர்த்தியே நம: என்று வைத்து இவை சிவனுக்கு ஐந்து திருமுடிகளாகப் பாவித்துத் திவ்விய முத்திரையால் மார்பில் வித்தியா தேகாய நம: என்று தேகத்தையும் வலக்கைச் சிறு விரல் கீழும் பெருவிரல் மேலுமாக மடக்கி வளைத்து மற்ற நடுவிரல் மூன்றும் தேங்காய்க் கண்போல நிமிர்த்த ஆக்கிரக்கண்ட முத்திரையால் இச்சா ஞானக்கிரியா சொரூபமாகப் பாவித்து நேத்திரேப்பியா நம: என்று தன் வலக்கண் இடக்கண் நெற்றிக்கண் இந்த மூன்றிடத்திலும் திரிநேத்திரம் கொடுத்துத் திவ்விய முத்திரையால் சிவாய நம: என்று மார்பிற் சிவனை ஆவாகனம் பண்ணி ஆக்கிர முத்திரையால் சிரசே நம: என்று சிரசிலும் யோக முத்திரையால் சிகாய நம: என்று பிடரியிலும் வைத்து இரு

கை விரல்களையும் மடக்கிச் சுட்டு விரலினை நீட்டி நாராச முத்திரையால் கவசாய நம: என்று கழுத்தைத் தன் மார்பளவாகச் சூழ்ந்து வலக்கை அணிவிரல் நுனி அலவுள்ளங்கையிலும் முட்டி முத்திரையால் அத்திராய் நம: என்று சிவனுக்கு இருதையாதிகாறும் நியாசம் பண்ணிக் கோவிடான முத்திரையால் அத்திராயப் பட் என்று தாளத் திரையமுஞ்செய்து சிரசைச் சூழ்ந்து பத்துத் திக்கிலும் சோடிகா முத்திரையால் தெறிப்பது திக்குபந்தனமாகிற அக்கினிக் கோட்டையாகவும், அதிதீட்சண முத்திரையால் கவசாய நம: என்று சிரசிற்கு மேனோக்கி வளைப்பது அவகுண்டனமாகிற அகழாகவும் பாவித்து இரண்டு பாரிசமும் இரு கரமும் விரித்துப் பாதாதிகேசாந்தம் மேல்நோக்கி மகாமுத்திரையால் சிவாயவௌஷட் என்று கொடுத்து மந்திரங்களெல்லாம் சரீரத்திலே பொருந்தின தாகப் பாவிப்பது அங்கநியாசமாம்- என்பாரும் உளர்.

## *பிராணாயாமம்*

வல நாசியைப் பெருவிரல் கொண்டு மூடி அத்திர மந்திரத்தினாலே இடநாசியைச் சோதித்துப் பின் இட நாசியை அணி விரலினாலே மூடி அம் மந்திரத்தினாலேயே வல நாசியைச் சோதித்துப் பிரம சத்திரிய வைசியராகிய இம் மூவர்க்கும் பிரணவத்தினாலும் நாலாம் வருணத்து ஆசாரியர்க்கும் சாதகர்க்கும் முக் கலைப் பிரணவ பஞ்சாக்கரத்தாலும் விசேடிக்கும் சமயிக்கும் சங்கிதா மந்திரமாகிய பதினொரு மந்திரத்தாலும் பண்ணுவதும் செபிப்பதும் முறைமையாம். வலக்கைச் சுட்டுவிரலும் நடுவிரலும் மடக்கிப் பெருவிரலினாலே வல நாசியை மூடி இட நாசியாலே வாயுவைப் பதினாறு மாத்திரையளவும்

பதினொரு மந்திரத்தையும் உச்சரித்துப் பூரகம் பண்ணி, அணிவிரலால் இட நாசியை மூடிக் கொண்டு இருபத்தினாலு மாத்திரையளவுஞ் சங்கிதையை உச்சரித்து வராக முத்திரையால் கும்பகம் பண்ணிப் பெருவிரலை விட்டு வல நாசியால் வாயுவை விடுகிறபோது பன்னிரண்டு மாத்திரையளவும் சங்கிதையை உச்சரித்து இரேசகம் பண்ணுகிறது மூன்றாம் பட்சம். இதற்கு இரட்டிமாத்திரை மத்திம பட்சம். இப்படிப் பூரகம் ஆதியாகச் செய்கிறது போகத்தைக் கொடுக்கும்.

இனி இரேசகம் ஆதியாகச் செய்யும் விதம்.அந்த முத்திரையினாலே இட நாசியை மூடி உள்ளேயிருக்கிற வாயு அசூசி ஆகையாலே பன்னிரண்டு மாத்திரை அந்த மந்திரத்தை உச்சரித்து வல நாசியாலே விட்டு இரேசகம் பண்ணி வலநாசியை மூடி இட நாசியினாலே புறவாயுவைப் பதினாறு மாத்திரையளவும் உள்ளேயேற்றிப் பூரகம்பண்ணி இரண்டு நாசியும் மூடி வராக முத்திரையால் இருபத்துநாலு மாத்திரையளவும் கும்பகம் பண்ணுவது முத்தியைக் கொடுக்கும். இந்த மாத்திரை மூன்றாம் பட்சம், இரட்டி மாத்திரை மத்திம பட்சம் மூன்று மடங்கு மாத்திரை உத்தம பட்சம்.

இந்தப் பிராணாயாமம் பண்ணுகையில் விடப்பட்ட மலினங்கள் சுத்தியாகும் பொருட்டு வலக்கையைக் கோகர்ண முத்திரையால் மூலமந்திரம் உச்சரித்து அக்கினி முதலான தேவதைகள் இருக்கிற வலச் செவியில் வைக்க. இவ்வாறு பிராணாயாமஞ் செய்வது சரீரத்திலுண்டான மலினங்களெல்லாம் போய்ப் பரிசுத்தமாகும் பொருட்டென்றும் பின்பு சந்தியா தேவதைகளை

மனமொன்றித் தியானிக்கும் பொருட்டென்று அறிக.

### சிவதீர்த்தகரணம்

இனிச் சிவதீர்த்த கரணம் செய்க. வலக்கையை முட்டியாகப் பிடித்துப் பெருவிரலோடு சேரச் சுட்டு விரலை மட்டும் நீட்டி நுனியை யானைத் துரட்டி போல வளைத்து அங்குச சுத்திரையால் புருவ நடு விந்துத்தானத்திலிருக்கிற அமிர்தத்தை 'இருதையாய வௌஷட்' என்று உச்சரித் தெடுத்துச் சலத்திலே வைத்துச் 'சிவாயநம:' வென மூல மந்திரத்தினாலே அபி மந்திரித்து வலக்கைச் சுட்டுவிரலை நீட்டி மற்ற நால்விரல்களையும் மடக்கிக் கீழ் நோக்கி ' அத்திராயப் பட்' என்று அந்த விந்து அமிர்தம் தகர அடித்து நிரந்தரதைச் சிவோதமாகப் பாவித்துச் சுவத்திக முத்திரையால் 'கவசாய வௌஷட்' என்று அந்த அமிர்தம் சலத்திலே அமிழும்படி மூடித் திக்குபந்தனம் அவகுண்டனம் தேனுமுத்திரை மகாமுத்திரை கொடுக்க. இதுவே சிவதீர்த்த கரணமாம்.

### சந்தியா தேவதைகள் தியானம்

காலையில் சரசுவதி எனப்படும் பிராமியையும் மத்தியானத்தில் இலக்குமி எனப்படும் வயிணவியையும் மாலையில் உருத்திரி எனப்படும் ரௌத்திரியையும் தியானிக்க.

### பிராமியின் தியானம்

பண்ணுவது சந்தியாவந்தனம்பின் முன்னர் பாணிநியா
தம்பண்ணிப் பேணுமனத் தினனாய்க்

கண்ணிவரு காலையிற் சிறந்தஅயன்தேவி கரநான்கு
முகநான்கும் இருநான்கு கண்ணும்

எண்ணுசெபஞ் சிருக்குவலங் கமண்டலமுந் தண்டும்
இளஞ்சடையும் புரிநூலும் இளமையொடுஞ்
சிறந்த
வண்ணஉருவுந் துகிலுஞ் செய்யஅன்ன வாகனபத்
மாசனியை மருவிதைய மலர்க்கே.

## *வயிணவியின் தியானம்*

மருவுதிரு முகமொன்று கரங்கள் நான்கில் வலத்தபயந்
தண்டுஇடத்து வலம்புரிசக் கரநல்
பொருவில்திரு மேனிசுக்கில வன்னந் தருணம்
பொருந்தும் ஒளிதரும் புரிநூல் புகழ்துளப மாலை
பெருகுமொளி தருமணிப்பூண் பிறங்குமார்பிற்
பேரொளிவெண்
பட்டல்குல் சீக்கருடன் மீதே
வருகமல வாசினியைப் புருவத்தினிடையே மத்தியா
னந்தன்னில் வணங்கிடாயே.

## *ரௌத்திரியின் தியானம்*

வணங்குவதந்தியிற் பிரமரந்தரத்தே
சோதிவளர்வதனம் ஒன்றுதிரு நயனங்கள்
மூன்றா
இணங்குதிருக் கரநான்கிற் செபஞ்சூலம் வலத்தால்
இடத்தபயஞ் சத்தியுமா இளம்பிறையுஞ் சூடிப்
பிணங்குசடா முடிநீல நிறத்தினளாய் அழகு பிதிரிடப
வாகனபத் மாசனியைப் பேணும்
அணங்கிவர்மூ வருங்கருணா கரருமாய்க் கன்ம
மனைத்தினுக்கும் அருங்கரியா ரவரென்றிங் கறியே.

என்னும் இத் திருவிருத்தங்களிற் கூறியபடியே நட்சத்திரப் பிரகாசம் மழுங்கி வருகிற பிராதகாலத்திலே சந்தி செய்பவர்கள் இருதைய கமலத்திலே அன்ன வாகனத்து மேலே பத்மாசனமும் நாலு முகமும் எட்டுக் கண்ணும் சிவந்த சடையும் சிவந்த வடிவும் சிவந்த ஆபரணாதிகளும் பூணூலும் நான்கு கையும் வலக் கையிரண்டினும் உருத்திராக்க வடமும் சிருக்கு முத்திரையும் இடக்கையிரண்டினும் தண்டுங் கமண்டலமும் எட்டு வயதான வாலைப்பருவமும் சாத்விக குணமும் பிராமி என்னும் நாமகரணமும் உடைய தேவியை அந்தச் சந்தியில் செய்யும் கன்மங்களுக்கெல்லாம் சாட்சியாகத் தியானிக்க.

இனி மத்தியான சந்தி செய்பவர்களான நிருவாண தீட்சை பெற்றவர்கள் புருவ மத்தியாகிய விந்துத் தானத்திலே கருட வாகனத்தின் மேலே கமலாசனமும் ஒருமுகம் இரண்டு கண்ணும் நாலுகையும் அவற்றில் வலக்கை இரண்டினும் அபயமும் தண்டாயுதமும் இடக்கை இரண்டிலும் வலம்புரிச்சங்கும் சக்ராயுதமும் பூணூலும் துளப மாலிகையும் வெள்ளைநிறமும் வெள்ளை ஆடை ஆபரணாதிகளும் பதினாறு வயதுடைய யௌவனமும் இராட்சத குணமும் வயிணவி என்னும் நாம கரணமும் உடைய தேவியை அந்தச் சந்தியிற் செய்யும் கன்மங்களுக் கெல்லாம் சாட்சியாகத் தியானிக்க.

இனிச் சாயுங்காலமாகிய மாலையிற் சந்தி செய்பவர்கள் பிரமரந்திரத்திலே இடபவாகனத்தின் மேலே பத்மாசனமும் ஒருமுகமும் மூன்று கண்ணும் பாலசந்திரனைத் தரித்திருக்கிற சடாபாரமும் நாலுகையும் அவற்றுள் வலக்கையிரண்டினும் வேலாயுதமும்

செபமாலையும் இடக்கையிரண்டினும் நீலோற்பலமும் அபயமும் முப்பத்திரண்டு வயதுடைய நீலநிறத் திருமேனியும் தாமத குணமும் ரௌத்திரி என்னும் நாம கரணமும் உடைய தேவியை அந்தச் சந்தியிற் செய்யும் கன்மங்களுக்கெல்லாம் சாட்சியாகத் தியானிக்க. இந்த மூன்று சத்திகளையும் கிருஷ்ணாசினந் தரித்திருக் கிற வராகவும் செம்மை வெண்மை கருமை நிறங்களை உடையவர்களாகவும் தாமரை நூல் போன்ற திருமேனியை உடையவராகவும் மூன்று காலத்திலும் மூன்றிடத்திலும் சமயி முதலான மூவருந் தியானம் பண்ணுக.

நிசியில் அர்த்த சாமத்திலே மானத சந்தி செய்து துரியை என்னும் நாமகரணத்தையுடைய சத்தியை அருவமாயும் கரிய நிறமுடையவளாகவும் வைத்துத் துவாத சாந்தத்திலே ஆசாரியன் தியானிக்க. இந்த நாலு சந்தியிலும் நாலிடத்திலும் அந்தந்த சிவசத்திகளை யேகாக்கிற சித்தனாக இருந்து தியானம் பண்ணிப் பின்னர் மந்திராபிஷேகம் செய்க.

## *மந்திராபிஷேகம்*

முன்சொன்ன தேவியுடைய கோட்டத்துக்குள்ளே தானிருக்கிறதாகப் பாவித்துக் கொண்டு கையிலே சலத்தை வைத்துக் கும்பக முத்திரையாகப் பிடித்துக் கொண்டு ஈசானம் முதலிய பதினொரு மந்திரங்களால் அபிமந்திரித்துச் ‘சிவாய வௌஷட்’ என்று சிரசிலே அமிர்த குடம் பொழிந்ததாகப் பாவித்துத் தெளித்து அபிஷே கித்தலே மந்திராபிஷேகமாகும்.

## *மார்ச்சனம்*

சலத்திலே வலக் கையை வைத்துச் சங்கிதையால் அபி மந்திரித்து வலக்கையாற் சலமெடுத்து இடக்கையில் வைத்துக் கொண்டு அவ் இடக்கை விரல்களினிடையாகக் கீழே விழுகிற சலத்தை வெளஷடு அந்தமான சங்கிதை மந்திரத்தினாலே வலக்கைக் கோமுக முத்திரையாற் சிரசிற் புரோட்சிப்பதே மார்ச்சனமாகும்.

## *அகமர்ஷணம்*

இம் மார்ச்சனத்தில் இடக்கையிற் சேடித்திருக்கும் புனலை வலக்கையில் வாங்கித் தன்ம சொரூபமாகவும் பரிசுத்தமாகவும் பாவித்து இடைகலையாகிய இடநாசியிலே வாயுவினாலே ஏற்றிப் பூரித்துப் பின் கும்பகஞ்செய்து அந்த வாயுவுடனே இந்தச் சலம் உள்ளே புகுந்து அக் கும்பகத்திலே வாயுவும் தானும் கூடி உள்ளேயிருக்கிற பாவங்களையெல்லாம் அரித்துத் தகித்துக் கொண்டும் அந்தப் பாவம் மைக்குழம்பு போலப் பிங்கலையாகிய வலநாசி வழியே இரேசகத்தால் கழியச் செய்து கொண்டும் வந்ததாகப் பாவித்து அக்கினி வச்சிரசிலை எனப்படும் வலக்கால் பெருவிரற் காலாக்கினியிலே புருவ நெறிப் பாகிய கோபக்குறியுடனே ' அத்திராய வும் பட்' என்று விட்டு அந்தப் பாவம் அவ் அக்கினியினாலே பொடிபட்டு ஒழிந்ததாகப் பாவிப்பதாகிய இது அகமர்ஷணமாகும்.

## *கவச வேஷ்ணம்*

பின்பு முன்புபோல ஆசமனம் அதர சுத்தி தொடுமிடம் கர நியாசம் அங்கநியாசம் பண்ணிக் கொண்டு **கவச வேஷ்ணம்** செய்க. வலக்கையிலே சலத்தை

அள்ளியெடுத்து முட்டியாகப் பிடித்துச் சுட்டுவிரல் நிமிர்த்த பரிகை முத்திரையினாலே 'ஓம் கவசாய நம:' எனத் தன்னை வலமாகச் சுற்றுக. இதுவே கவச வேஷ்ணமாம்.

இனிச் சதாசிவத் தியானமும் காயத்திரி செபமும் செய்த பின் தர்ப்பணம் செய்க.

## *சதாசிவத் தியானம்*

சூரிய மண்டலத்திலே இருக்கிற சதாசிவ மூர்த்தியை உச்சியிலே ஈசானமுகம் படிகநிறமாய் இளமை வயதாய் நிருதி திசை நோக்கி இருப்பதாகவும் தற்புருஷ முகம் கோங்கம்பூ நிறமாய்த் தருணவயதாய் மேற்குத் திசை நோக்கி இருப்பதாகவும், அகோரமுகம் கருமை நிறமாய் விருத்த வயதாய்த் தாடியுள்ளதாய் வடதிசை நோக்கி இருப்பதாகவும், வாமதேவ முகம் சிவந்த நிறமாய் ஸ்தீரீ முகமாய்த் தென்திசை நோக்கி இருப்பதாகவும், சத்தி யோசாதகமும் பால்நிறமாய் பால வயதாய்க் கீழ்த்திசை நோக்கி இருப்பதாகவும் முகங்கள் தோறும் முக் கண்ணும் சடாம குடத்தில் கொன்றைமாலை அர்த்த சந்திரனும் திருமேனியெல்லாம் சுத்தமான படிக நிறமுமாயிருப்பதாகவும் வலக்கை ஐந்தில் வேல் அபயம் சூலம் கட்டங்கம் தமருகமாகிய ஐந்தும் இடக்கை ஐந்தில் வரதம், மாதுளங் கனி, சர்ப்பம், செபமாலை, நீலோற்பலமாகிய ஐந்தும் இருப்பனவாகவும் பதினாறு வயதும் முப்பத்திரண்டு இலட்சணமும் இரண்டு ஸ்ரீபாதங்களும் உடையவராகவும் வைத்துப் பத்மாசனத்திலே எழுந்தருளி இருக்கிற அவதாரமாய் இருதையத்திலே தியானம் பண்ணுக.

## சிவகாயத்திரி செபம்

இப்படிச் சதாசிவ மூர்த்தியைத் தியானம் பண்ணாவிடில் சிவகாயத்திரியைப் பொன்னிறமான திருமேனியை உடையவளாய் ஒரு முகமும் மூன்று கண்ணும் நான்கு கைகளும் அந் நான்கு கைகளில் வரதமும் பயமும் செபமாலையம் கமண்டலமும் உடையவளா யிருக்கிற பரையை எப்போதும் உள்ளவராகவும் சிவ சமயத்தை ஸ்தாபிக்கிறவராகவும் தியானித்துக் கையில் பௌத்திரம் தரித்துக் கொண்டு இருகையுங் கூட்டிச் சுட்டுவிரல் மூலங்களில் பெருவிரல் நுனிகளைச் சேர்த்த சங்க முத்திரையால் விரல் நுனிகளால் சலமெடுத்துத் திரும்பவும் அவ்விரல் நுனிகளின் வழியாகச் சலம் விழும்படி 'ஓம் தந்ம கேசாய வித்மகே வாக் விசுத்தாய தீமகீ தந்நோ சிவப்பிர ஜோதை யாது' என்னுஞ் சிவகாயத்திரியை மூன்றுமுறை உச்சரித்து மூன்றுமுறை அர்க்கியம் கொடுப்பதாய்த் தர்பித்துப் பத்துருவாவது ஏழுருவாவது அச் சிவகாயத்திரி மந்திரத்தைச் செபித்து மீட்டுமொரு முறை அந்த மந்திரங்கொண்டு தர்ப்பிக்க.

## தர்ப்பணம்

சங்கிதையாகிய பதினொரு மந்திரங்களினாலே சுவாகாந்தமாக ஒவ்வொருகால் தர்ப்பித்து, மந்திரங் களுக்கும் தேவர்களுக்கும் ரிஷிகளுக்குமாக நமாந்தமாய்ச் சர்வேப்பியோ மந்திரேப்பியோ நம: சர்வேப்பியோ தேவோப்பியோ நம: சர்வேப்பியோ ரிஷிஷ்ப்பியோ நம:" என விரல் இறையால் தர்ப்பித்து மனுஷர்களுக்குக் கராங்குல மூலவழியாகப் பெருவிரல் மூலத்தால் சுவாகாந்த மூலமாகச் 'சர்வேப்பியோ மனுஷேப் பியோ சுவாகா' என்றும்

மாதிரு ஞாதிரு ஆசாரியர்களுக்குச் சுட்டுவிரல் மூலத்தாற் சுவவிதந்தமாக 'சர்வேப்பியோ மாதிருப்பியோ சுவாகா சர்வேப்பியோ ஞாதிருப்பியோ சுவாகா சர்வேப்பியோ ஆசாரியப்பியோ சுவாகா என்றும் தர்ப்பணம் செய்யும்போது மூலாசாரியரிலிருந்து தம் உபதேசாசாரியார் வரைக்கும் அவ்வாறாகவே தனித்தனி சர்வேப்பியோ என்று சொல்லிக் கூட்டித் தர்ப்பித்துக் கணபதி கந்தன் மனோன்மணி தட்சணாமூர்த்தி கேத்திரபாலர் சிவகுரு சிவசூரியன் சண்டேசுரராகிய இவர்களுக்கெல்லாம் விரல் நுனியினாலே 'ஓம் மகா கணபதியே சுவாகா கந்தாய சுவாகா கேத்திர பாலாய சுவாகா சிவகுருவே சுவாகா சிவசூரியாய சுவாகா சண்டேசுராய சுவாகாவென்று தர்ப்பித்துத் தர்ப்பணம் முடிக்க. இவ்வாறு தர்ப்பணம் செய்தல் ஆதீன சம்பிரதாயமாம்.

இனி, பௌத்திரம் தரித்துத் தர்ப்பைபிடித்து இரு கையுங் கூட்டிச் சுட்டுவிரல் மூலங்களில் பெருவிரல் நுனிகளைச் சேர்த்த சங்க முத்திரையால் விரல் நுனிகளால் சலமெடுத்துத் திரும்பவும் அவ் விரல் நுனிகளின் வழியே சலம் விழும்படியாகத் சிவகாயத்திரியால் மூன்று தரந் தர்ப்பித்துப் பத்துருவாவது ஏழுருவாவது அந்த மந்திரத்தினாலே செபித்துப் பின்பு ஒருகால் அந்த மந்திரங்கொண்டு தர்ப்பித்துச் சிவாய சவாகா என்று முக்கால் தர்ப்பித்துப் பத்துருச் செபித்து மறுத்தொருதரம் தர்ப்பித்துப் பதினொரு மந்திரத்தினாலுஞ் சுவாகாந்தமாக ஒவ்வொரு தரம் தர்ப்பித்துச் 'சர்வேப்பியோ மந்திரேப் பியோ சுவாகா சர்வேப்பியோ தேவேப்பியோ சுவாகா' என்று இதுவரையும் விரல் நுனியாலே சங்கமுத்திரைகொண்டு

தர்ப்பித்துப் பின்னர் பூணூல் கழுத்திலே மாலிகைபோலத் தரித்து விரலிறையால் திருமுத்திரையினாலே அதாவது இருகையும் இணைத்து விரல்களின் இடைவெளியினாலே 'சர்வேப்பியோ ரிஷிப்பியோ' என்றும் சிறு விரல்களின் அடியால் சடாமுத்திரையால் சர்வேப்பியோ மனுஷேப் பியோ வௌஷட் என்றும் இருகையும் இணைத்து மணிக்கட்டால் ஆற்பணான முத்திரையால் தனக்கு எதிராகச் 'சர்வேப்பியோ பூதேப்பியோ வௌஷட்' என்றும் தர்ப்பித்துப் பின்பு பூணூல் இடமிட்டு இருகையும் சேர்த்து சுட்டுவிரல் அடிகளில் பெருவிரல் நுனிகளைச் சேர்த்த கண்டின முத்திரையால் வலக்கைப் பெருவிரல் அடியால் எள்ளுடனே 'சர்வேப்பியோ பிதிருப்பியோ சுவதா சர்வேப்பியோ மாதிருப்பியோ சுவதா' என்று மேற்படி கண்டின முத்திரையால் சுட்டுவிரல் மூலத்தால் எள்ளுடனே 'சர்வேப்பியோ ஞாதிருப்பியோ 'சுவதா சர்வேப்பியோ' ஆசாரியப்பியோ சுவதா' என்றும் தர்ப்பித்துத் தன்னிடது பாரிசமான நீர்க்கரையிலே சங்க முத்திரையினாலே 'அத்திராயப்பட்' என்று குசையுஞ் சலமுங்கூட இறைத்துப் பின்பு பூணூல் வலமிட்டு இட்டகாமிய மந்திரங்கள் செபிக்கில் அந்தந்த மந்திரங்களினாலே சுவாகாந்தமாகச் சங்க முத்திரையால் தர்ப்பித்துக் குசை நீத்து ஆசமனம் கரநியாசம் பண்ணுக. என்று ஆதீனப் பிரதியல்லாப் பிரதியில் இருப்பது இல்லறத்தார்க்குச் சொன்ன விதி என்றறிக.

பின்பு ஆசமனம் அதர சுத்தி தொடுமிடம் கரநியாசம் அங்கநியாசம் பண்ணித் தீர்த்தோப சங்காரஞ் செய்க. அதாவது முன்பு விந்துத் தானத்திலிருந்து எடுத்துச்

சலத்தில் வைத்த அமிர்தத்தை இருசுவப் பிராசாத மந்திரமாகிய "அக அம்" என்பதை உச்சரித்து அங்குச முத்திரையால் எடுத்துப் புருவ நடுவில் ஒடுக்குதலே தீர்த்தோப சங்காரமாம்.

இனி, இருதைய மந்திரத்தால் எடுத்துப் புருவ நடுவில் ஒடுக்குக என்பர் ஒரு சாரார்.

## *சூரியோபஸ்தானம்*

கை நிறையச் சலமெடுத்துப் பிடித்துக் கொண்டு சங்கிதா மந்திரம் பதினொன்றும் உச்சரித்து உற்பவ முத்திரையினாலே சூரிய மண்டல மத்தியில் விளங்கும் சதாசிவ மூர்த்தியைத் தியானித்து அம் மூர்த்தியினிடத்திலே மூல மந்திரத்தை உச்சரித்து அந்தக் கர்ம பலத்தைக் கொடுத்தலே சூரியோபஸ்தானம் ஆகும்.

பின்பு சுகாசனமாக இருந்து பிராணாயாமம் சகளீகரணம் செய்து மூலமந்திரத்தைச் செபமாலையா லாயினும், இல்லாதவர் வலக்கைப் பெருவிரல் நுனியால் அணிவிரல் நடுவிறை முதற்கொண்டு பெருவிரல் அடிவரையிலும் பத்துரு இருபத்தைந்துரு ஐம்பதுரு நூறுரு இவற்றுள் இயன்ற மட்டும் ஏகாக்கிர சித்தனாக இருந்து வாய்திறந்து நாவால் பல்அடிபடாமல் அந்தக் கரணம் வழுவாமல் செபித்துப் பிரணாயாமம் சகளீகரணம் பண்ணி அட்டதிக்குப் பாலரை அவ் அத்திசை நோக்கி நமாந்தமாக அவ்வவர் நாமமூல மந்திரங்களினாலே வந்தனஞ்செய்து தோத்திரம் பண்ணி 'ஓம் பார்வதி பரமேசுவராய நம:' என வடக்கு நோக்கி நமஸ்காரஞ் செய்து எழுக.

அநுட்டானம்- சூரியன் உதிக்கும் முன்பு நட்சத்திரம் காணவும், மாலையிலே நட்சத்திரம் காணும் முன்னும் பண்ணுக, இக் காலம் தப்பிச் செய்தால் சங்கிதாமந்திரம் ஒருமுறை செபிக்க.

காலையில் சரஸ்வதியை இருதையத்திலும், மத்தியானத்தில் இலட்சுமியைப் புருவநடுவிலும், மாலையில் ரௌத்திரியைத் துவாத சாந்தமாகிய சிரசு உச்சியிலும் வைத்துத் தியானிக்க.

சைவ அநுட்டானவிதி முற்றிற்று.

நன்றி : திருவாவடுதுறை ஆதீனம்

## சைவ அநுட்டான மந்திரங்கள்

*கணபதி சிவகுரு வணக்க மந்திரங்கள்:*

ஓம் மகா கணபதயே நம:

ஓம் சிவ குருவே நம:

*பஞ்ச பிரம மந்திரங்கள்:*

ஓம் ஈசான மூர்த்தாய நம:

ஓம் தத்புருஷ வக்த்ராய நம:

ஓம் அகோர இருதயாய நம:

ஓம் வாமதேவ குஹ்யாய நம:

ஓம் சத்தியோஜாத மூர்த்தயே நம:

*ஷடங்க மந்திரங்கள்:*

இருதயம்- ஓம் இருதயாய நம:

சிரசு - ஓம் சிரசே நம:

சிகை - ஓம் சிகாயை நம:

கவசம்- ஓம் கவசாய நம:

நேத்திரம் - ஓம் நேத்ரெப்யோ நம:

உள்ளங்கை - ஓம் அஸ்த்ராய நம:

பஞ்சபிரம, ஷடங்க மந்திரங்கள் பதினொன்றும் சம்கிதா மந்திரங்கள் ஆகும்.

*ஆசமன மந்திரங்கள் :*

ஓம் ஆத்ம தத்வாய சுவதா

ஓம் வித்யா தத்வாய சுவதா

ஓம் சிவ தத்வாய சுவதா

*பஞ்சகலா மந்திரங்கள் :*

ஓம் நிவிர்த்தி கலாயை நம:

ஓம் பிரதிஷ்டா கலாயை நம:

ஓம் வித்யா கலாயை நம:

ஓம் சாந்தி கலாயை நம:

ஓம் சாந்த்யாதீத கலாயை நம:

*ஆசன மூர்த்தி மந்திரங்கள் :*

ஓம் சிவாமநாய நம:

ஓம் சிவமூர்த்தயே நம:

ஓம் சிவாய நம:

**சிவ காயத்திரி :**

ஓம் ஹாம் தன் மஹேசாய வித்மஹே வாக்

விசுத்தாய தீமஹி

தன்னோ சிவ ப்ரசோதயாத்

*சப்தகோடி மகாமந்திரம் :*

1. நம:
2. சுவாகா
3. சுவதா
4. வஷட்
5. வௌஷட்
6. ஹூம்
7. பட்

குறிப்பு: மந்திரங்களை இங்குக் காட்டியுள்ளபடி உச்சரிக்கவும்.

# பூசையும் வழிபாடும்

"நினைவதும் வாய்மை மொழிவதும் அல்லாமல்
கனைகழல் ஈசனைக் காண அரிதாம்" என்றார் திருமூலர்.

கடவுளைத் - தெய்வத்தைப் - பரம்பொருளை நம் செம்பொருளை நம் நெஞ்சம் முழுவதையும் கொண்டு தேடினால் அவ் வாழ்முதலை உறுதியாகக் காண்போம்.

என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போல் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்பொடு உருகி அகக் குழைவார்க்கு அன்றி
என்போல் மணியினை எய்த ஒண்ணாதே -திருமூலர்.

எனவே கடவுளிடத்தில் அன்பு செய்வதே வழிபாடு, ஆசையை எரிப்பதே ஆராதனை. இந்நிலை முழுமைநிலை.

முழுமை நிலை அடைவது ஒரே தாவாகத் தாவுவதன்று. படிநிலைகள் பல உள்ளன. அன்பு பாராட்டி, அன்பால் ஆட்கொள்ளப்பட்டு, அன்பால் வாழப்பிறந்தவர்கள் நாம் என்றாலும் அன்பு (இறையருள்) தேடிப் பெறுவதிலும் நாடி வருவதே நன்று. மனிதன் அகத்தே உள்ளது தெய்வீகம்.

மனிதனை மாமனிதனாக்குவதில் ஆன்றவிந்தடங்கிய சான்றோர்களுக்குப் பெரும் பங்குண்டு. அவர்களுள் அடங்குபவர்களே சித்தர்கள். அவர்கள் பொறுப்பு மக்கள் அறிவைத் தெளிவுப்படுத்தி, விரிவாக்கிப் பரப்புவதோடு நில்லாமல், உள்ளுயிரின் (ஆன்மா) உணர்வின் உண்மை யான உயிர் உயர்வுக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர்கள் அவர்கள். எல்லா உலக மக்களுக்கும் வழிகாட்டுவதே அவர்கள் தலையான பொறுப்பு என்றுணர்ந்தனர்.

உண்மையான சமயப்பற்று கொண்டவர்கள் சித்தர்கள்; 'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்' என்று மெய்யுணர்வும் மெய்யறிவும் பெற்றவர்கள். செருக்கும் தற்பெருமையும் அறவே அற்றவர்கள். அவர்கள் பணி வுடைமையும் அடக்க முடைமையும், அருளுடைமையும் பரிவிரக்கமும் ஒருங்கே கொண்டிருப்பவர்கள். தம் கடன் பணிசெய்து கிடப்பதே என்று பணிவில் பயிற்சி அளிப்பதே அவர்தம் கல்வி. அதாவது இறையை வழிபடக் காட்டும் நெறி.

பல சித்தாந்தக் கோட்பாடுகளும் மெய்ப்பொருள் கொள்கைகளும் வெவ்வேறாக விளங்குவது ஒரு மரத்தின் நாற்றிசைக் கிளைகளைப்போல. கடவுட்கு நாம் சூட்டும் பெயர்கள் பற்றியும் அச் செம் பொருளை நம் சிந்தையில் பொருத்த உள்ள வழிகள் பற்பல. ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு வழி முறைகளைப் பின்பற்றும். சேரும் இடம் ஒன்றே.

சித்தர்கள் கூறும் பூசா விதிகள் ஒவ்வொன்றிலும் ஓர் அறிவியல் கூறு பொதிந்துள்ளது. மனக்கோயில் எழுப்ப உதவும் சாரக்கட்டுகள்தாம் விதிகள். நெஞ்சக்கோயில் நிறைவடைந்தபின் அவை பிரித்துவிடத் தக்கவை.

சித்தத்தைச் செம்பொருள்பால் ஈடுபாட்டுடன் நாம் எந்த அளவில் ஆண்டு செயல் முறையில் நின்று உள்ளம் உரையைச் செலுத்துகிறோமோ அந்த அளவுக்குச் சாதனைகளைச் செய்ய முடியும். முழு மனத்துடன் ஒன்றிணைந்து தூய்மையை வளர்ப்பதின் மூலம் அறிவுத் தெளிவைப் பெருக்கி, ஆருயிர் அனைத்தும் நாம் என ஆழப்படுத்த முடியும். அந்நிலையை எய்தவே பூசாவிதிகள்.

உலகப் பெரும்புடவி அனைத்தும் ஒரு விதிக்குள் இயங்குபவையே. அவ் விதியைக் காட்டும் சித்தர்கள் செம் மனத்தினர். உலகில் சமயம் என்பது சித்தாந்த உய்த்துணர்வு களிலும் வெறும் ஆசார அனுட்டான - சடங்குகளிலும் அடங்கியதில்லை. அகத்தெளிவும், உள்ளுயிர் நுண்பேரறிவும் சமுதாய மனச் சான்றின் எழுச்சியும் தான் சமயம் என்பதை வலியுத்துவதே சித்தர்களின் பூசா விதிகள்.

சித்தர்களின், நூல்கள் பதிப்பித்த எவரும் இப் பூசா விதிகளைத் தனித்து எண்ணியதும் இல்லை. பதிப்பித்ததும் இல்லை. அருமை நண்பர் ஆ. கோமதிநாயகம். பல சித்தர்களின் பூசாவிதிகளைத் தொகுத்தளிக்கக் கோரினார். தொகுத்துப் பார்க்கையில் சைவத்தைச் சாத்தத்தைச்

சார்ந்திருந்தாலும் சித்தர்கள் மெய்ப்பொருளைக் காணும் வழி வகைகளைக் கூறுகையில் ஒவ்வொரு மனிதனும் பிறவிப் பயன் எய்தக் கூறும் அன்பு நெறியை - அருளாட்சியை எண்ணி எண்ணி வியக்கத் தக்கவையாய் உள்ளன கண்டு, உயர்வு எய்துக. உய்தி பெறுக.

"நெஞ்சமே கோயில், நினைவே சுகந்தம், அன்பே
மஞ்சனநீர், பூசைகொள்ள வாராய் பராபரமே!"

அன்புடன்
த. கோவேந்தன்.

உ

பரமபதி துணை

## அகத்தியர் திருவாய் மலர்ந்தருளிய

# சிவலிங்க பூசா விதி 13

கேளப்பா புலத்தியனே ரசத்திற் போதம்
        கெடிபடாச் சிவனைப்போல் வார்த்துக் கொண்டு
தாளப்பா பூசைசெய்யக் கைலாச போதம்
        தப்பாமற் சதகோடி காலமாகும்.
தேளப்பா கொட்டினதோர் விடத்தைப்போலத்
        தேரிடது ரசத்தினுட குளிகை வேகம்
வாளப்பா புலத்தியனே நாவினுள்ளே
        வாயடக்கஞ் செய்துகொள்ள யோகமாச்சே. 1

ஆச்சப்பா புலத்தியனே சூதங் கட்ட
        ஆராலும் முடியாது அறிவான் சித்தன்
பேச்சப்பா அக்கினியில் செயித்ததானால்
        பேரண்டம் கிழிந்தாட வேதையாகும்
நீச்சப்பா குளிகைகட்ட வகையைக் கேளு
        நீதிபெற எவருக்கும் அரிதாமப்பா
ஏச்சப்பா இதனுடைய வர்மம் சொல்வேன்
        என்தனுக்குப் பரையீசன் ஈந்தான் தானே. 2

தானென்ற புலத்தியனே வகையைக் கேளு
        தயங்காமற் சொல்லுகிறேன் வகைதானப்பா
கோனென்ற வராட்டியனும் எனுக்குச் சொன்னார்
        குறிப்பாக மனந்தேறிக் கூறிச் சென்றேன்
ஏனென்றால் புலத்தியனே உனக்கு யானும்
        இன்பமுடன் சொல்லிவிட்டேன் கருத்தானப்பா
ஊனென்ற சூதமொன்று வெள்ளை ஒன்று
        உத்தமமாம் போகமணிச் சாத்திலாட்டே. 3

ஆட்டப்பா கருவூமத் தஞ்சாறுவிட்டு
        அதுநன்றாய் கடிகைபட வாட்டிக் கொண்டு
நீட்டப்பா ரவியினுட கிண்ணம் தானும்
        நிலைக்கவே நாலுவிரல் அங்குலத்தால்
மூட்டப்பா ஒட்டிலிட்டிச் சீலை செய்து
        மூதண்டக் குக்குடத்திற் புடத்தைப் போடு
கோட்டப்பா மேலேறிப் பதங்கங் காணுங்
        குமரவழிக் காரமிட்டு உருக்கிக்கொள்ளே. 4

கொள்ளப்பா மணியதுபோல் உருகி ஆடும்
        குருகிமுகம் ஒளிவான கருப்பதாகும்
மெள்ளப்பா அதினுடைய வேதை மார்க்கம்
        வெட்டவெளிக் குருடனுக்கு மெய்கோலப்பா
உள்ளப்பா இதுகொண்டு சனங்கள் செய்வார்
        உலகத்துள் நரகத்தே கிடந்து மாய்வார்
தள்ளப்பா இதுவல்லோ காய சித்தி
        தாண்டவமே புரியசிவ பூசை பண்ணே. 5

பண்ணப்பா ஓராண்டு செய்தாயானால்
பராபரமே உனக்குவந்து ஏவல்செய்யும்
விண்ணப்பா ஒருவருக்கும் நீசொல்லாதே
மேதினியில் நரகத்துள் கிடந்து மாள்வாய்
கண்ணப்பா உனக்கேத்த பிள்ளையானால்
கைமுறையாய்ச் செய்து அவன் குணத்தைப் பாரு
ஒண்ணப்பா கருவைத்தான் ஒளிக்கவில்லை
உற்றுணர்ந்து மனந்தேறிப் பாரு பாரே. 6

பாரப்பா இதுக்குக் கைலாசம் உண்டாம்
பாடாமற் சித்தரிதை மறைத்துப்போட்டார்
ஆரப்பா எனைப்போலே திறந்து சொல்வார்
ஆச்சரியம் இதுனுடை வேகமப்பா
ஊரப்பா இதினாலே யோக சித்தி
உத்தமனே சிவபூசை பண்ண நன்று
காரப்பா இதுதனக்குப் பூசை செய்து
கருவாக அர்ச்சனைசெய் பதங்கம் செய்யே. 7

செய்யப்பா இப்படியே பூசை கொண்டு
திறமாகச் செய்யவல்லோ பலத்தைக் கேளு
மெய்யப்பா அவனுடைய பிதிர்களெல்லாம்
மிகக்கோடி நரகசென்மம் அல்ல அல்ல
பொய்யப்பா சொல்லவில்லை தேர்ந்து பாரு
புலத்தியனே உன்தனுக்குக் கருவைச் சொன்னேன்
வைப்பா பூசையிலே என்னை வைத்து
மவுனமாய் சிவனை வைத்து நோக்கு நீயே. 8

நீயென்றும் நானென்றும் வேறுமில்லை
நிராகரன்போல் உன்தனுக்குத் தோணுந் தோணும்
நாயென்னுஞ் சென்மத்தைத் தாண்டி எத்தும்
நாய்செ.ன்மம் அல்லஅப்பா சித்தன் சித்தன்
பாயென்று கூடுவிட்டுக் கூடு கொள்ளும்
பதறாமல் இருந்து கொள்ளக் கெவுனம் சாடும்
நோயென்ற வறுமையெல்லாம் அகன்றுபோகும்
நுண்ணிமையாய்ச் சிவலிங்க போதந்தானே. 9

தானென்ற குளிகை செபமாலை செய்து
தாக்கப்பா பதினாறு நடுத்தான் ஒன்றும்
மானென்ற மதியானை வட்டஞ் செய்ய
மகமேரு போலல்லோ ஒளியுங் காணும்
கோனென்ற அவன்ரூபங் குறிக்கப் போகா
கோடிரவி ரூபமவன் சொல்லக் கேளு
தேனென்ற மனோமணியாள் சிவனும் அங்கே
சிந்தித்த போதெமெல்லாம் தெளியுந் தானே. 10

## தாளகவித்தை

தானென்ற அரிதாரம் தேவி நாதம்
தாக்கப்பா புலத்தியனே நீதான் கேளு
ஏனென்ற அவ்விடைதான் சூதங் கூட்டி
இதமாக அரக்கம்வேர் சாத்திலாட்டி
ஊனென்ற ரவிகிண்ணி யாலே மூடி
உத்தமனே சீலைசெய்து புடத்தைப் போடு
வானென்ற கிண்ணியிலே பதங்கமேரும்
வழித்துநன்றாய் உருக்கிடவே மணியுமாமே. 11

*ஆமப்பா புலத்தியனே இதுவாம் லிங்க*
*அர்ச்சனையே செய்தவர்க்கு யோகஞ் சித்தி*
*தாமப்பா இதினாலே சொர்ணம் செய்வார்*
*சண்டாள மாண்பரங்கே கெடுப்பார், ஐயோ*
*ஓமப்பா குழிக்கிரைதான் தேரும் புல்லர்*
*உற்றுணர்ந்து பாராமல் கெர்வஞ் செய்வார்*
*நாமப்பா புலத்தியனே பூசை செய்து*
*நவகோடி காலமெல்லாம் நடந்திட்டாரே.* **12**

*பாரென்ற உலகத்தின் மாண்பர் எல்லாம்*
*இக்களிகை செந்தூரஞ் செய்துகொண்டு*
*ஊரென்ற செம்பிலிட்டு மதியிலிட்டு*
*உதரத்துச் சீவனங்கள் பண்ணுவார்கள்*
*ஆரென்றால் இதினாலே தோடமில்லை*
*ஆச்சரியம் பரதேசிக்கு அன்னம் இட்டு*
*வாரென்ற தேவியுட யோக பூஜை*
*வகுத்தவனே சமுசாரி யோகி ஆச்சே.* **13.**

உ

பரமபதி துணை

அகத்தியர் திருவாய் மலர்ந்தருளிய

# தேவியின் பூர்வட்சப் பூசா விதி 16

அகரவுரு வாய்எங்கும் அமர்ந்து நின்ற
அன்னை மனோன் மணி பதத்தை அகத்துட் கொண்டே
இகமதனில் நீதிவர்க்கம் தனைத் தெரிந்தே
இயம்புகிறேன் சோடசத்தை இன்ப மாகத்
தகவுடனே இதை அறிந்து பூசிப் போர்கள்
சம்பத்து மிகப்பெற்றுத் தரணி மீதில்
துகளகற்றி அட்டாங்க யோக ராகிச்
சொல்லரிய பேரின்பம் பெறுவார் தாமே. 1

அம்மாவா சியுமான அரூபித் தாயே,
அகண்டபரி பூரணியே அமல சத்தி,
நம்மாலே பாடரியேன் உனது பேரில்
நாவிலே வந்தருள் செய் நாயே னுக்குத்
தம்மாலே சோடசஞூத் திரம்பி ளங்கத்
தயவுசெய்து நின்பதத்திற் அறிந்து கொள்வாய்,
சும்மாநீ இருக்காதே என்னைக் கண் பார்
சோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே. 2

பிரதமையில் பிரவிடையாய்க் கலைவே றாகிப்
பிங்கலைபிட் டிமைகலையில் பிறந்த கன்னி
உறவாகி ரவிதனைவிட்டு அகலா நிற்கும்
உமையவளே, இனிப்பிறவி ஒழியச் செய்வாய்.
இறவாத மருந்தாகி இன்பமாகி
இட்டமுட ன் அட்டசித்தி எல்லாம் நல்கிச்
சுருதியுத்தி அனுபவமாய் நின்ற ஞான
சோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே. 3

துதிகைதனில் உபயமெனும் இடைபின் என்னும்
சொர்க்கமெனும் நகரமெனும் சொல்லப் பெற்ற
மதிரவியாய் அடிமுடியா ய் உயிருமாகி
வாழ்வான பெண்ணாக வந்த தாயே
விதிதுலைந்து வினை துலைந்து வெட்கங் கெட்டே
வீம்புபயம் ஆசை துக்கம் விட்டே யோடச்
சகன்முகத்தைப் பாரம்மா சூட்சா சூட்சா
சோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே. 4

திரிதிகையில் சுத்த மற்றுச் சுத்தமாகிச்
சிற்சொரூபமாய் எங்குஞ் சிறந்த தேவி
உறுதியுடன் உனதுபதம் அகலாச் சிந்தை
உறவெனக்கு நீதருவா ய் உமையே தாயே
அருவிபோல் இருகண்ணீர் பொழிந்தே உன்தன்
அடியினையைத் துதிக்கின்ற அடியே னுக்குச்
சுருதியாய் வந்தெனது துயரம் தீர்ப்பாய் சோதி
மனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே. 5

சதுர்த்தியிலே நாதமெனும் வர்ம பூசை
தரவேணும் தயவாக அடியேனுக்கு
மதித்தபடி வரம் அருள்வாய், வாலை அம்மா
வானவெளி யேவாசி மவுனத் தாயே
பதித்துனது பாதத்தில் என்தன் சென்னி
பரிதிமதி அகன்றாலும் அகலா மற்றான்
துதித்தபடி நின்சரணம் எனக்குத் தந்தாய்
சோதிமனோன் மணித்தாயே சுமுனை வாழ்வே. 6

பஞ்சமியில் பெற்றெடுத்தாய் பாலன் அன்னைப்
பால்கொடுத்தாய் பதநடனஞ் செய்தாய் அம்மா
கொஞ்சமொரு காரியத்திற் தவக்கம் செய்தால்
குப்பைவளர் பயிர்கூரை ஏறு மோதான்
தஞ்சமென்ற நின்னடியைச் சார்ந்தேன் அம்மா
தன்னைத்தான் அறிந்துமுன்னைத் தொண்டு செய்து
துஞ்சாமல் இருக்கவுந்தான் துணைசெய் வாய்நீ
சோதிமனோன் மணித்தாயே சுமுனை வாழ்வே. 7

சட்டியெனுஞ் சடாசட்ரத்துட் சதாசி வத்தின்
சைதன்ய போதத்திற் தானாய் நின்றாய்
அட்டதிக்குப் பாலகரும் பெரியோர் வானோர்
அயன்திருமால் முதலான சித்தர் யாரும்
கிட்டிவந்து அருள்தந்தாய் அடியேனுக்குக்
கிடைத்ததுவும் உனதுடைய கிருபை அம்மா
சட்டியுடன் ரவிமதியுந் தரித்து வந்த
சோதிமனோன் மணித்தாயே சுமுனை வாழ்வே 8

சத்தமியாஞ் சபைதனிலே நடன மாடிச்
சப்தரிடி சப்தகன்னி பணிந்து போற்ற
அத்தனிடப் பாதமதாய் முக்கோ ணத்தில்
அமர்ந்திருந்த பேரின்பம் ஆதித் தாயே
இத்தினத்திற் படுந்துயரம் காணார் போலே
இருந்து விட்டால் ஆதரிப்பார் ஆர்கண் பாரு
சுத்தஇ ரவிகலந்தே ஒளியாய் நின்ற
சோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே. 9

அட்டமியில் அட்டகலை அட்ட நாகம்
அட்டகிரி அட்ட கய மாக இன்னம்
இட்டமுடன் எங் கெங்கும் தானாய் நின்றாய்
என்தாயே நின்னடியை இறைஞ்சு கின்றேன்
திட்டமுடன் அன்பர்களும் பெரியோர் வானோர்
செப்பரிய தெள்ளமுதே தெவிட்டாத் தேனே
துட்டர்களை அடக்கி அன்பர் தன்னை ஆண்ட
சோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே. 10

நவமியிலே நவரத்தின மகுடஞ் சூட்டி
நவகோடி சித்தர்கள்வந்து உனைப்ப ணிந்து
தவம்பெருக ஈராறுகலையும் தாண்டி
சாசுவத மானபதம் தரிசித் தோர்க்குச்
சிவகாமி நின்னுடைய கிருபை யாலே
செகமதனில் அப்படியே சித்தம் வைப்பாய்
சுவர்ணமய மாய்விளக்குங் கருணை யாலே
சோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே. 11

தெசமியிலே சாகரத்திற்கு அப்பால் ஏறி
சிலம்பொலிக்கும் உன்னுடைய திருத்தாள் போற்றி
நிசமாகத் தூலசூக் குமத்தில் ஒன்றாய்
நிட்களத்தில் நீ நானும் ஒன்றா யாகி
அசையாத ஆனந்த மாயவற்றுள்
அருள்வெளியாய் வரமருள்வாய் அகண்ட ரூபி
சுசியாகப் பிள்ளையை உன் தொண்ட னாக்கும்
சோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே. 12

ஏகாத சியுமான தானத்துள்ளே
இருந்த நா தம்பரத்தில் ஏறிச் சென்று
சாகாத காலறிந்து ஓடிச் சென்று
தப்பாமல் பிடித்தபின்பு எங்கே போவாய்?
வேகாத தலைகண்டு வெளியிற் செல்ல
வேறேதான் அவை அல்லால் எனக்கிங் காரு?
தோகாய்என் னுள்ளத்தே இனிக்குந் தேனே
சோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே. 13

துவாதசியாய்த் தானிருந்தே முக்கோ ணத்திற்
சொலமனத்திற்கு எட்டாத துரிய மாகித்
தவமுடிவில் நடஞ்செயுமுன் சரணங் காணச்
சந்ததமும் ஞானக்கண் தருவாய் அம்மா
புவியதனில் எடுத்த என்தன் தேகம் போமுன்
போதமுறவே என்னைப் புனித னாக்கிச்
சுவையாகியே அறிவிற் சேர்க்குந் தாயே
சோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே. 14

*திரியோத சியாயிருந்தே இடைபின் மையம்*
*சேர்ந்து வர ஆதாரந் தன்னில் ஏறிக்*
*குறியறியு மாக்கினையைக் கடந்து மேவிக்*
*குருவுருவிற் குருவாக விளங்கும் அன்னை*
*அறிவைஅறி வாலறிந்து அனுப வித்து*
*அறிவிலே மனமிருக்கத் துணைசெய் யாத்தாள்*
*சுருதிமுடிவு அறிந்த எந்தன் தாயே காப்பாய்*
*சோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே. 15*

*சதுர்த்தசியில் லானவொரு நான்காய் நின்ற*
*தற்பரையே சிற்பரையே சட்கோ ணத்திற்*
*குதித்தோடிப் போகாமல் வெட்டிற் சேர்ந்து*
*கும்பகத்திற் தம்பனமாய்க் கூட்டி அம்மா*
*மதிப்பான உன்பதத்திற் சேர்த்து அணைத்து*
*மனங்கலங்கி வாடாமல் மதிப்பால் ஈந்து*
*சுதன்முகத்தைப் பாரம்மா துரியா தீத*
*சோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே. 16*

**தேவியின் பூசாவிதி**

**முற்றிற்று**

உ

பரமபதி துணை

அகத்தியர் திருவாய் மலர்ந்தருளிய

# தேவியின் அமரபட்சப் பூசா விதி 17

நிரஞ்சனமாய் நிராமயமாய் நினைவே யாகி
நீங்காத பெருவாழ்வே லோக மாதா
பரஞ்சோதி யானபூ ரணியே தாயே
பாற்கடலே எனைஈன்ற பரமே, சத்திச்
சரமாகி உலகமெலாம் வளர்க்குந் தேவி
சங்கரியே பௌர்ணமியின் வடிவங் காட்டி
துறவான ரிடிமுனிவர் பணியச் செய்த
சோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே. 1

சேமமது தருவதற்கு நேரே வந்த
திரிபுரையே சாம்பவியே மனப்பூ வாணிக்
காமனையும் வாமனையும் படைத்த தாயே
கன்னியே வளர்பிறையே கனக மாகி
நீமறைவாய் நின்றதென்ன நினைவே அம்மா
நீடூழிக் காலமெலாம் உலகத் தோர்க்குச்
சோமகலை போலாகி உருவங் காட்டும்
சோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே. 2

வாழ்வான உலகமெலாம் நீயே அம்மா
மண்டலங்கள் எங்குமே வளர்ந்த சோதி
தாழ்வேது உனையடைந்த சித்தர்க் கெல்லாம்
தங்கமய மாயிருந்த தேவி ரூபி
பாழ்போன வாக்குநல்ல சித்தி தந்து
பாக்கியமாய் அடங்காத அண்டத் தோடே
சூழ்ந்திருந்து மகிழ்ந்தென்னைப் பெற்ற மாதா
சோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே. 3

மதியான நாலு கலையான ரூபி
மாதாவே வரப்பிரசா தங்கள் தந்து
கெதிபெறவே செய்தபூ ரணியே அம்மா
கிருபையுடன் தவநிலையைக் காட்டி வைத்தாய்
பதிவான கலைநாலும் பாழ்போ காமற்
பாக்கியங்கள் தந்தருளும் பரையே சித்தர்
துதிதனையே பெரிதென்று நினைக்குந் தேவி
சோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே. 4

பஞ்சமியில் உலகமெலாம் பெற்ற மாதா
பரப்ரம்ம மாதொரு பாக்ய ரூபி
தஞ்சமென்ற சித்தர்களைக் காக்குஞ் சத்தி
தமியேனை ஈடேறச் செய்த தாயே
பஞ்சையாந்தொண் ணூற்றாறு தத்து வத்தைப்
பறக்கடித்த சுமங்கலையே ரிடிகள் தம்மைத்
துஞ்சுதலில் லாமற்தான் இருக்கச் செய்தாய்
சோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே. 5

உன்னுடைய கிருபைவைத்துத் தவத்தைப் பெற்றே
ஒன்றாகி இரண்டாகி ஆறு மாகித்
தன்னுடைய தீட்சைவைத்து ஞானம் தந்த
சங்கரியே சாம்பவியே சாகாக் காலே
கன்னிகையே மதுரரச மான தேவி
கற்பகமே கனகபிர காச மான
துன்னதிருச் சுழிமுனையில் ஆடுந் தேவி
சோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே. 6

பந்தவினை போக்கிடும் என் அருமைத் தாயே
பாக்யவதி பூரணியே பருவ மாதே
வந்துநீ சுருள் பெருக எனை வளர்த்த
மாதாவே சுடரொளியாய் வழக்கப் பெற்ற
எந்தனையும் அகத்திய எனப் பெயரும் இட்டு
எட்டுடெழுத்தில் மூன்றெழுத்தாய் விளங்கிநின்ற
சுந்தரியே கன்னிகையே அகண்ட ரூபச்
சோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே. 7

திங்களொளி யாய்அமர்ந்த சப்த கன்னி
தேவர்களுக்கு அமுதளித்த சிறுபெண் ணாத்தாள்
அங்கசத்தி ரீங்காரி அனந்த ரூபி
அண்டரெலாம் போற்றஅவ தரித்த தேவி
மங்களமாய் நவராத்திரிப் பூசைக் காக
வந்தமர்ந்த திரிசூலி மகிலங் காரி
துங்கமய் மானஆ னந்தித் தாயே
சோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே. 8

நீதமுடன் உருவாகி அரூப மாகி
நிட்களமாய் நிராமயமாய் நின்ற நீலி
வேதமுடி வாகிநின்ற விமலித் தாயே
விண்ணொளியாய்ப் பரவெளியாய் அகண்ட சத்தி
பாதமதிற் சிலம்புகலீர் கலீர்என் றோதப்
பத்தருக்காய்ப் பிரசன்ன மான ரூபி
சோதனையாய்ச் சோமகலை யாக வந்த
சோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே. 9

காலான சந்திரகலை நாலுங் காட்டி
கண்மூடித் திறக்குமுன்னே சோதி காட்டி
மாலான அரிதனையும் அங்கே காட்டி
மறைந்துநின்ற சுயரூபந் தன்னைக் காட்டி
பாலான சோமகலைப் பாலும் ஊட்டி
பாங்குடனே எனைவளர்த்த பருவ மாதா
சூலான தாய்வயிறில் சொரூபந் தந்த
சோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே. 10

அண்டரண்ட புவனமுந்தான் நீயே யானாய்
அம்புவியில் சோதிமனோன் மணியும் ஆனாய்
கண்டதொரு காட்சிகளைச் சொல்லப்போமோ
காரணியே பூரணியே கன்னி யாளே
விண்டதொரு மகிமைகளை வெளிவி டாமல்
வேண்டியதோர் தீட்சைகளை முடித்துக் கொண்டேன்
தொண்டனைநீ எப்போதும் ஆள்வா யம்மா
சோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே. 11

சொல்லவென்றால் சோதிமய மான தாயே
சுந்தரியே உன்பாதங் கொடுப்பாய் அம்மா
நல்லதொரு திருநடனம் ஆடுந் தேவி
நாதாக்கள் பணிகின்ற வாம ரூபி
வல்லசித்தர் மனதில் உறை மகிமைத் தாயே
வாலைதிரி புரையெனக்கு வாக்குத் தந்து
தொல்லுலகத்து ஆசைகளை மறக்கச் செய்து
சோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே.12

பாசவலை தனிற்சிக்கி அலையா மல்தான்
பண்புடனே அஞ்ஞானம் அதனைப்போக்கி
நேசமுடன் சதுரகிரி மலையி லேதான்
நித்தியமும் நடனமது புரிந்த நீலி
பேசரிய ஞானமதை எனக்க ளித்த
பேரான சுமங்கலையே பெரியோ ருக்குத்
தோசமது வாராமற் காக்குந் தேவி
சோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே. 13

பத்துடனே நாலாகி எங்குந் தானாய்
பராபரியே பரஞ்சோதிப் பருவ மாகிச்
சித்தாகி உலகமெங்கும் மயக்குந் தாயே
திருவருளே திரிபுரையே தேவி அம்மா
வித்தாகி முளைத்தெழுந்த சுடரே தீப
விமலியே குண்டலிஓங் காரசத்தி
சத்தான அண்டமெலாம் நிறைந்து நின்ற
சோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே. 14

*பிரியமுடன் பதினைந்து கலையு மாகிப்*
*பேசரிய தீபவொளி ப் பிரமை யாகி*
*உரியதொரு நந்தியொளி தீபங் காட்டி*
*ஓங்கார ரீங்காரச் சத்தி யாகி*
*சரியென்று மதித்திடவே என்முன் வந்த*
*சங்கரியே சாம்பவியே சர்வ ரூபி*
*துரியதுரி யாதீதத் தமர்ந்து நின்ற*
*சோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே. 15*

*எட்டெடுக் கலையாகி உருவமாகி*
*எங்கெங்குந் தானாகி அரூபி யாகி .*
*விட்டுவிட்ட குறையிருந்தோர்க்கு உபதே சித்து*
*வேண்டியதோர் வரங்கொடுத்தே அவர்களுக்குக்*
*கட்டுமெட்டாய்ச் செல்வமதைத் தான்கொடுத்துக்*
*கனிவான வரைதனிலே இருக்க வைத்தாய்*
*தொட்டுந்தன் பாதமைதத் தொழுதேன் அம்மா*
*சோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே. 16*

*பறையான உன்தனையும் பணிந்தேன் அம்மா*
*பட்சமொடு வரம் அருள வேண்டுந் தாயே*
*நிறையான செல்வமது கொடுத்துக் காத்தாய்*
*நிச்சயமாய்ச் சுழிமுனையைக் காட்டித் தந்தாய்*
*வறையான எட்டிரண்டுந் தெரிவித்து என்னை*
*வாழ்வித்தாய் கற்பமுறை வழியுஞ் சொல்லித்*
*துறைதெரியச் செய்துவைத்த இமயவல்லி*
*சோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே. 17*

## தேவியின் அமரபட்சப் பூசாவிதி

## முற்றிற்று

உ

குருவே துணை

## இராமதேவர் திருவாய் மலர்ந்தருளிய

# பூசா விதி 10

ஆதியென்ற மணிவிளக்கை அறிய வேணும்
அகண்டபரி பூரணத்தைக் காண வேணும்
சோதி என்ற துய்யவெளி மார்க்கம் எல்லாம்
சுகம்பெறவே மனோன்மணிஎன் ஆத்தாள்தன்னை
நீதியென்ற பரஞ்சோதி ஆயி பாதம்
நிர்க்குணத்தில் நின்றநிலை யாருங் காணார்
வேதியென்ற வேதாந்தத் துள்ளே நின்று
விளங்குவதும் பூசையிது வீண் போகாதே. 1

போகாமல் நின்றதோ ரையா நீதான்
பூரணத்தின் ஆனகலை ஐந்தும் பெற்று
ஆகாமம் ஆனந்த வல்லியாலே
அடிமுடியும் நடுவாகி ஆறுக்குள்ளே
வாகாமல் வாலையுட மூலத்தாலே
வழிதோன்றும் மூன்றெழுத்தை உரைக்க வேணும்
சாகாமல் சாகுமடா இந்த மூலம்
சதிர்வட்டம் நடுகோண முக்கோணந்தான். 2

முக்கோண மூலசுழி கோணமாகி
முதலான மூலமணி வாலை தன்னில்
நற்கோண நாலுவரை நயந்து காக்க
நாயகியாள் பரஞ்சோதி நாட்டம் உற்றுத்
திக்கோண திக்குதிசை இருந்த மாயம்
தேர்ந்திடவே உரைத்திட்டேன் விபரமாகத்
தக்கோண விட்டகுறை வந்த தென்றால்
தனியிருந்து பார்த்தவனே சித்தானாமே. 3

சித்தான மூன்றெழுத்து செயலாஞ்சோதி
சீரிவரும் ஐயும்-கிலியும் சவ்வுமாகி
முத்தான லட்சமுரு செபிக்கச் சித்தி
முற்றிடுமே எதிரியென்ற பேய்கட்குத்தான்
வித்தான வித்தைமுட் டாடும் பாரு
விரிவான முக்கருவும் சிலையில் வைத்துச்
சத்தான அதன்கருவும் சிலையில் வைத்துச்
சதிரான இதுவிபரம் அறியக் கேளே. 4

கேளப்பா பலிகொடுத்துப் பூசைசெய்து
கிருபையுள்ள உருவேற்றத் திட்டமாக
வாளப்பா சுடுகாட்டின் சாம்பல் தன்னில்
வளமாகப் புதைத்துவிடு நடுசாமத்தில்
ஆளப்பா அடியற்று மரணமாகி
ஆண்டிருந்த தவசுநிலை தான்குலைந்து
காளப்பா கண்மணியே வீழ்வான் பாவி
கறைதெரியச் சொல்லுகிறேன் இன்னம்பாரே. 5

இன்னமின்னங் கண்முன் சோதனையுமாகும்
ஈடேற வேணும் என்றால் இதனிற் சூட்சம்
அன்னமின்னா அயிற்கட்டை தேவதாரம்
அறிவுடைய முளைசீவி சிங்களத்தில்
வன்னமின்னார் பேர்சொல்லி நசிஎன்றேதான்
வலுவான நூற்றெட்டு உருவும்போடு
சன்னமின்னா மரத்தடியில் இருந்துகொண்டு
சதிராக ஆணிகொண்டு அடித்திடாயே. 6

அடித்தமுளை பிடுங்கிவைத் திறுக்கப்போடு
ஆனந்த உருக்குலைந்து பட்டுப்போகும்
தொடுத்தமுதல் நாலாநாள் கண்டு தானும்
தொகைமுடித்து விட்டதடா இந்தப்போக்கு
விடுத்தபின்பு விடமேறி கருவிப்போகும்
விரித்துரைத்தேன் பூட்டிதுவே வீண் போகாது
தடுத்துவிடு நரகத்தில் அடித்துப் பாரு
தட்டழிந்து உயிர்முதலாய்ச் சேதமாமே. 7

ஆமப்பா அடிதரித்த சிங்களத்தில்
அதிசயங்காண் கண்டவர்க்கு அடைக்கலம்போல்
வீமப்பா வெளிதிறந்து சொன்னேன் பாரு
விளையாட்டு இல்லையடா இந்தப் போக்கு
சோமப்பா சுத்தியுடன் நிலையும் மூழ்கி
சுருக்கெனவே தியானிப்பாய் ஆத்தாள் மூலம்
தாமப்பா சத்தியமே சொன்னோம் பாரு
தவறாது இராமனுட வாக்யந்தானே. 8

தானென்ற மூலமுடன் சித்தி பண்ணு
　　தனதான நூற்றெட்டுக் குள்ளே சித்தி
ஆனென்ற அண்டர்பதி யெட்டும் ஆடும்
　　அறுபத்து நால்மூலி எல்லாம் ஆடும்
கோனென்ற கோடிசித்து கணத்தில் ஆடும்
　　குணமாக ரேவதிநாள் செய்ய நன்று
வளர்பிறையிற் செய்தவனே யோகியாமே. 9

யோகிகளாய் ஆவதற்கு உனக்குச் சொன்னேன்
　　ஓகோகோ முன்னுரைத்த மூலத்தாலே
ஏகிகளாய் ஏகாந்த வல்லியாட்டு
　　ஏட்டிலே எழுதினதா எல்லாமாச்சு
தாகிகளாய் தாயுடைய கிருபையாலே
　　தவமாகும் அவமாகும் சுபமுண்டாகும்
மோகிகளாய் மூலபூசா விதிபத்தாலே
　　முத்திபெறச் சித்திவிளை பத்துமுற்றே. 10

**இராமதேவர் அருளிச் செய்த பூசாவிதி முற்றிற்று.**

உ

கணபதி துணை

## உரோமரிஷி திருவாய் மலர்ந்தருளிய

# பூசா விதி 7

ஆதியென்ற வாலைமனோ மணியைப்போற்றி
அருள்நிறைந்த பூசைவிதி ஆறும் சொல்வேன்
சாதியென்ற சரசுபதியாள் பாதங் காப்பு
சச்சிதா னந்தமென்ற தாயே காப்பு
சோதியென்ற சுடரொளியின் சூட்சங் காப்பு
சொரூபமணி வேதாந்தம் அருளே காப்பு
பாதிமதி அணிந்தருளும் பரமே காப்பு
பரமசிவ செகசோதி பாதங் காப்பே. 1

காப்பான கருவூர் போக நாதர்
கருணையுள்ள அகத்தீசர் சட்டை நாதர்
மூப்பான கொங்கணரும் பிரம சித்தர்
முக்கியமாம் மச்சமுனி நந்திதேவர்
கோப்பான கோரக்கர் பதஞ்சலியார்
கூர்மையுள்ள இடைக்காடர் சண்டிகேசர்
வாப்பான வாதத்திற்கு ஆதியான
வாசமுனி கமலமுனி காப்புதானே. 2

தானென்ற தத்துவத்தை அறிய வேணும்
தன்மையுள்ள பூரணத்தைச் சார வேணும்
பானென்ற பாணமதைக் கொள்ள வேணும்
பருவமென்ற பரமநிலை அறியவேணும்
நானென்ற ஆணவத்தை நீக்கவேணும்
நன்மை என்ற காரியங்கள் செய்யவேணும்
வானென்ற வாக்கியமே உரோமன் வாக்யம்
மலரான பொருளிலேதான் வாய்க்கும் பாரே. 3

பாரப்பா பரைபூசை செய்யத் தானும்
பாங்காகச் சொல்லுகிறேன் பரிவாய்க் கேளு
சாரப்பா சக்கரங்கள் தன்னைக் கீறிச்
சாங்கமாய் மூன்றெழுத்தை மாற்றிப்போடு
சீரப்பா கணபதியும் வடுகன் பீசம்
சீக்கிரத்தில் வாலையதை நடுவே வைத்துக்
காரப்பா நந்திவடி வேலன்பீசம்
கருணையாஞ் செயவீரர் பீசம் போடே. 4

போடுவது முன்னறையில் பத்தும் போடு
புகழான பின்னறைபன் னான்கு போடு
நீடவது மூன்றறையில் பதினெட்டாகும்
நேரான நாலறையில் மூன்றே லக்கம்
நாடுவது அஞ்சான அறையில் தானம்
நன்மையுள்ள ஆறதனை நயந்து போடு
கூடுவதுக்கு இருபத்தஞ் சறையும் நன்றாய்க்
கூர்மையுடன் மாறியிடக் கூறினேனே. 5

5

கூறினேன் ஐஞ்ஞூற்றின் பொருளை எல்லாம்
குறுக்கியே ஐம்பதிலே நன்றாய்ச் சொன்னேன்
பாரிலே கிடையாது கிடைத்ததானால்
பரமகுரு நீயெனவே பகரலாகும்
நாரிலே பூச்சொரிந்த வாறுபோலே
நாயகியாள் உனதுபக்கம் நலமாய் நிற்பாள்
ஆறாகச் சொன்னதொரு சூத்திரந்தான்
அப்பனே ஆதியென்ற பூசை முற்றே. 6

முத்தான பூசைவிதி ஆறுஞ் சொன்னேன்
முழுதுமிதை பார்த்தவர்கள் மவுனமாகிக்
கத்தரான பெரியோர்கள் இதனைப் பார்த்துக்
கைகண்ட பொருளெனவே மனதில் எலெண்ணிச்
சத்தான வித்தையிது பொருளென்றெண்ணிச்
சதம்பெறவே மெய்ஞ்ஞானத்து அருளை நோக்கிப்
பத்தான சூத்திரந்தான் முன்னே சொன்னேன்
பாங்கான பூசைவிதி ஆறும் முற்றே. 7

**உரோமரிஷி பூசாவிதி**

**முற்றிற்று.**

கடவுள் துணை

உரோமரிஷி திருவாய் மலர்ந்தருளிய

# பூசா விதி சக்கரம் 14

அண்டத்தைப் பார்த்தால் அழியாதுன் தேகம்
பிண்டத்தில் ஆன்மா பிலத்திடும் மூலத்தில்
அண்டம்போ லாகும் அறுகோணத்தி னுள்ளே
குண்டலி யாகும் முக்கோணத்தின் உள்ளே. 1

உள்ளூறும் சோதி ஓங்கார பூரணி
வள்ளலான் மாவே மாயைக்க ணேசனாம்
தெள்ளிய சிந்தை திடங்கொண்டு ஊதிட
வள்ளலே வாசி வளர்கின்ற நந்தியே. 2

நந்தி இருக்குமேல் முக்கோணத்து உள்ளே
உந்திப் பிறைக்குள் ஒளியான அங்கிஷம்
சிந்திச் சதாசிவன் தேவிம னோன்மணி
சந்தேகம் இல்லை சதானந்தி நாமமே. 3

நாமங்கீ மூலநல் திரிகோணத் துள்ளே
வாமியாம் பார்வதி மாலெட் சுமியெனத்
தாமமாம் மாயன் தான்மன் மதனெனக்
காமம் மமகாரங் கலவிக்குள் ரங்கென்றே. 4

ரங்கென்ற மாபிறைக் குள்ளுற வாகிச்
சங்கென்று எழுத்த தலைகீழ் முனையிலே
மங்கென்று எழுந்தது முக்கோண மேலே
சிங்கென்று இடைகலை மேலேமுக் கோணமே. 5

முக்கோணத்து உள்ளே முழங்குமுக் கோணந்தான்
அக்கோணம் குண்டலி யான்மா கணேசனாம்
தக்குமோங் காரந் தானாம் பராபரன்
இக்கோணங் காண்பார் இடைகலைக் கீழே. 6

கீழேமுக் கோணம் பிரமநிலை யந்தான்
கேளாய் வயிரவன் கெடியாக நின்றான்
வாளாய் நகாரம் வளருநாற் கோணத்துள்
ஆளஅங் கேசுரன் அங்காம் முனக்கே. 7

முனையான பிங்கலை முக்கோணத் துள்ளே
நினைவறு கோணத்தில் நின்றசண் முகனாம்
மனையா மகேஸ்வரி வாழ ரெண் டாகத்
தனமாயம் என்னச் சார்ந்தங்கு இருந்ததே. 8

இருந்த வகாரஞ் சங்கு என்று எழுந்தது
வருந்தவன் சுப்பிர மணியன் சொரூபமாய்
இருந்த முனையில் எழுந்த வகாரம்
பெருந்தவம் அப்பா பிங்கலை கீழே. 9

கீழாந் திரிகோணங் கெடியான முக்கோணம்
ஆனாம் முளையில் ஆண்ட உகாரம்
வாளான ருத்திரன் மால்வடி வாகித்
தேளாய் அக்கினியில் சிறக்கின்ற சிங்கியே. 10

சிங்கென்று முட்டித் தெளிந்திடும் குண்டலி
நங்குரு பூசை நாயகர் பூசை
மங்கென்று எழுந்த மவுனத்தில் அட்சயஞ்
சங்கோலச் சூட்சத்தில் சாத்திய வாறே. 11

வாறான குண்டலி வளருமுக் கோணத்துள்
பேராம் மதிவட்டம் பேசிடுஞ் சிங்கியாம்
கூரான சத்திக் கொழுந்தியாம் வல்லபை
ஆறான வீடும் அவளாய் இருப்பவளே. 12

இருப்பாள் இவள்தான் சிங்கா சனத்தில்
இருப்பாள் பரத்தில்நாற் பத்துமுக் கோணத்து
இருப்பாள் அமுதக் கலையில் ஒன்றாக
இருப்பாள் இவள்நந்திக் கன்னிகை என்றே. 13

கன்னிகை என்றே கலந்தாள் புரியட்ட
மன்னிய பூரணம் வளர்ந்தது கெட்டிது
உன்னிய தீட்சை யோகத் துறவாம்
பொன்னாம் பூரணம் பூண்டிடு முத்தியே. 14

உரோமரிஷி பூசாவிதிச் சக்கரம்
முற்றிற்று.

உ

குமரன் துணை

காலாங்கிநாதர் திருவாய் மலர்ந்தருளிய

# ஞான பூசா விதி 80

ஆதியிலே அமைத்தவிதி எழுத்தினாலே
அருள்பெருகும் திருமூலர் பாதம் போற்றி
நீதியுடன் பூசைவிதி தன்னை மைந்தா
நேர்மையுடன் கைமுறையாய்ப் பாடுதற்குப்
போதமென்னும் ஞானபூ ரணமே காப்பு
பூரணமாய் நின்றமனோன் மணியே காப்பு
சோதி எனுங் கருணைவிழி மலர்க்கண்ணான
சுதந்திரமாய் நின்றகண பதி காப்பாமே.

ஆமப்பா பூசைவிதி மார்க்கந் தன்னை
அன்புவைத்துக் கைமுறைகள் அதிகஞ் சொன்னேன்
ஓமப்பா கை முறைகள் அதிகஞ் சொன்ன
உண்மையுள்ள பூசையது நுணுக்கம் மெத்த
வாமப்பா லகிரியினால் சித்தர் கூடி
வந்தார்கள் திருமூலர் பாதந் தன்னிற்
சோமப்பா லுண்டுவந்த கெதியைப் பார்த்துத்
தொழுதுநின்ற காரணம் என்றார் பாரே. 1

என்றமொழி தனையறிந்து சித்தரெல்லாம்
என் குருவே பூசைவிதி முறைகள் மெத்த
அன்றண்டர் பதந்தெரியச் சூட்சமாக
அன்புவைத்துக் கடாட்சியும் என்றடி பணிந்தார்
நின்றுபதம் பணிந்தவகை அறிந்து கொண்டு
நேமமுடன் பூசைவிதி சுருக்கமாகக்
கண்டுகொண்ட வகை அறிந்து சொன்னேன் அப்போ
கயிலாயச் சித்தரெல்லாம் வணங்கினாரே. 2

வணக்கமுடன் பூசைவிதி சுருக்கமாக
வகையுடனே சொன்னவகை தன்னைக் கேளு
இணக்கமுடன் மூலமதில் வாசி பூட்டி
ஏகாந்த உருத்திரரைக் கண்டுபோற்றித்
தனக்குறுதி யான ரவி மதியைக் கண்டு
சதாசிவனார் மனோமணியைத் தியானம்பண்ணி
எனக்குறுதி உனதுபதந் தாயே என்று
ஏகாந்த மாகவேநீ இருந்து கொள்ளே. 3

இருந்துகொண்டு நவகோணம் நன்றாய்ச் செய்து
ஏகாந்த நவகோணம் தன்னிலேதான்
வருந்தினதோர் அட்சரத்தைச் சொல்லக் கேளு
மறவாதே ஐயுங்கிலியுஞ் சவ்வென்றேதான்
அருந்தவமாய்ச் சிவயநம அஞ்சுங் கூட்டி
ஆகவஞ்சும் முன்றும்டா எட்டுமாச்சு
விரிந்ததொரு எட்டெழுத்து எண்கோணத்தில்
விபரமுடன் தானெழுதி நடுவே கேளே. 4

கேளப்பா நடுவான முக்கோ்ணத்தில்
கெணிதமுடன் விந்தெழுதி விந்துக் குள்ளே
சூளப்பா ஓங்காரம் அதனுட் போடு
சுழித்தநடுச் சுழியெழுது உயிரும் ஆச்சு
காலப்பா கட்டான நவகோணந்தான்
கருணையுள்ள நவக்கிரகம் ஒன்று பேரு
மேலப்பா நவக்கிரக மேலாகத்தான்
விந்துவென்ற வளையமது மூன்றுபோடே 5

போடப்பா முதல்வளையம் இதழ்தான் எட்டு
புகழான மறுவளையம் பதினாறாகும்
நாடப்பா அதன்மேலே இருபத்தேழு
நன்மையுள்ள இதழைம்பத்து ஒன்றுமாச்சு
தேடப்பா இதழைம்பத்து ஒன்றிலேதான்
திருவான அட்சரத்தைச் செப்பக் கேளு
சூடப்பா அட்சரந்தான் ஐம்பத் தொன்றும்
சுத்தமுடன் தானெழுதி இன்னங் கேளே. 6

கேளடா நால்வாசற் கோட்டை கட்டிக்
கிருகையுள்ள பஞ்சகர்த்தாள் காவலாகத்
தேளடா அச்சுரத்தைத் தியானம் பண்ணிச்
சிவகளை உண்டாகச் செபமேசெய்து
வாளடா சக்கரந்தான் உறுதியாச்சு
மகிமையுள்ள நவக்கிரக மான வீடு
மீளடா அவ்வீட்டுச் செதிராகத்தான்
மேன்மைபெறும் ரசிதமென்ற கும்பம் பாரே. 7

பாரப்பா கும்பத்தில் நூலணிந்து
பத்தியுடன் கெங்கைபூ ரணமாய் விட்டுத்
தேரப்பா மாங்குளையும் தேங்காய் சாத்தி
சிவசிவா நாற்புறமும் சவாது அணிந்து
சேரப்பா அச்சதையும் அதனிற் சாத்தித்
திருவிருந்த கும்பமதை மைந்தா கேளு
நேரப்பா பச்சரிசி நிரப்பி மைந்தா
நேர்மையுள்ள கும்பமதை வைத்துக் கேளே. 8

கேளப்பா களஞ்சிதங்கத் தகடு அடித்துக்
கெட்டியாய் அதனிலொரு விந்துபோட்டுக்
கேளப்பா விந்துவதின் நடுவிலேதான்
கிருபையுடன் ரீங்காரஞ் சுழியுஞ் சாத்திக்
கேளப்பா அத்தகட்டைக் கையிலேதான்
கேள்மகனே சிவசிவா வென்று மைந்தா
கேளப்பா கும்பமதி னுள்ளே போட்டுக்
கெணபதியும் மஞ்சள் ளினால் அறுகு சாத்தே. 9

சாத்தியதோர் கணபதிக்குச் சொர்ண புட்பம்
சாத்திநின்றாய்க் கும்பமதின் அருகே வைத்து
மூர்த்திகர மாவதற்கு மைந்தா கேளு
மூத்திபெறும் அட்சதைஓ மென்று சாத்திப்
பாத்திபனே சுழிமுனையில் மனக்கண் வைத்து
பத்தியுடன் வாசியினால் மூலத்தேகி
மூத்துமத்துக்கு உயிரான குருவைப் போற்றி
அமுதரச வர்க்கம்பால் பழமும் வையே. 10

வையப்பா தாம்பூலங் கமலம் மீதில்
மார்க்கமுடன் வசிகரஓம் என்று மைந்தா
கையாரத் தானெடுத்து முன்னே வைத்துக்
கருணைபெற அட்சதையும் மலர்கள் வாரி
மெய்யப்பா ஓம்சிவா சிவாவென்றேதான்
விருப்பமுட அர்ச்சனைகள் செய்துகொண்டு
செய்யப்பா தேங்காய்கள் பெலிகொடுத்துச்
சிந்தைமனது ஒன்றாக அறிவில் நில்லே. 11

அறிவான மனதுடனே சிம்சிம்மென்று
அப்பனே தூபமுடன் தீபங் காட்டிக்
குறியான உபசாரஞ் செய்துகொண்டு
குணமாக மணியோசை சங்கின் ஓசை
விரிவான சேகண்டி ஓசைசெய்து
மெய்த்தவமாய்ப் பத்தியுடன் மைந்தா நின்றால்
நெறியான புருவநடு சுழியைப் பார்த்து
நின்றிலங்குங் கற்பூரத் தீபந்தானே 12

தானான தீபமொடு சிலம்பின் ஓசை
தன்னகத்தில் காணுமடா உண்மையாகக்
கோனான பஞ்சகர்த்தாள் சத்தியோடு
குணமாகக் கவனிப்பார் முன்னே நின்று
தேனான அமுதரசம் ஈவார் மைந்தா
செம்மையுடன் அவர்பதத்தைப் பூசை செய்து
ஊனான தேகமடா முத்தியாக
உறுதியுடன் வாசியினால் மூலம் பாரே. 13

பாரப்பா வாசியினால் மூலம் பார்த்துப்
பதிவான உருத்திரனார் பதியிற் சென்று
நேரப்பா பூரணமாய் மலர்க்கண் சாத்தி
நின்று இலங்கும் சுழிமுனையை நீதான் பாரு
மேரப்பா அண்டரண்ட பதங்கள் காணும்
மேன்மைபெறச் சியோகத் திருந்துகொண்டு
காரப்பா கண்டமதில் அங்கென்று ஊறுணிக்
கருணையுடன் ஷடாட்சரத்தை அறிந்த போதே. 14

ஓதுவது சாடாட்சரந்தான் என்னவென்றால்
உண்மையுடன் சொல்லுகிறேன் நன்றாய்க் கேளு
ஓதுவது ஓம்ஓம் சிவயநமவென்று
உண்மையுடன் நூற்றெட்டு உருவே செய்து
ஓதுவது புருவநடுக் கமல மீதில்
ஒழுங்கான வாசிமலர் உருகந்து சாத்தி
ஓதுவது பூரணமே தாயேயென்று
உண்மையுடன் தோத்திரங்கள் உகந்து செய்யே. 15

உகந்துநின்ற தோத்திரங்கள் செய்தாயாகில்
உண்மையுள்ள நவக்கிரகம் உறுதியாகும்
அகந்தெளிந்து நவக்கிரகம் தன்னில் நின்று
அன்புடனே நவக்கிரக பூசை செய்தால்
செகந்தெளிந்த குருவருளைக் காணலாகும்
சிவசிவா சிவபூசை கோடிக்கொடுக்கும்
முகந்தெளிந்த குருபரனைக் காணலாகும்
முத்தியென்ற வாசியினர் யோகம் பாரே. 16

பாரப்பா சிவயோகத் திருந்துகொண்டு
பத்தியுடன் நவக்கிரக பூசைசெய்தால்
நேரப்பா நின்றஅனுக் கிரகம் தோன்றும்
நினைவாக அனுக்கிரகத்து உள்ளே சென்றால்
மேரப்பா அண்டபதந் தன்னிலேதான்
மெய்ஞ்ஞான தீபமடா கண்ணிற் காணும்
காரப்பா தீபமதைக் கண்ணினாலே
காத்ததினாற் சொற்கபதங் காணலாமே. 17

காணவே சொற்கபதம் என்னவென்றால்
கருவான முக்கோணஞ் சிகார வீடு!
தோணவே அவ்வீட்டிற் காணவென்றால்
துருவமுடன் நவக்கிரகப் பூசைசெய்து
பூணவே மூலமதில் வாசி பூட்டிப்
புத்தியுடன் ரவிமதியைக் கண்டு தேறிப்
பேணவே அனுக்கிரகங் கண்டாயானால்
பெரிதான சொற்கபதம் அதுதான் பாரே. 18

பாரான மூலமதைக் காண வேணும்
பதிவான வாசிதனை அறிய வேணும்
நேரான வாசிதனை அறிந்துகொண்டு
நேமமுடன் சிவயோகஞ் செய்ய வேணும்
கூரான சாத்திரங்கள் பார்க்க வேணும்
குறியான தொடுகுறியைக் காக்கவேணும்
பேரான மூலமடா ஆறாதாரம்
பெருமையுள்ள நவக்கிரகப் பூசை பண்ணே. 19

பண்ணப்பா நவக்கிரக பூசை தன்னில்
பதிவான மானதமாம் பூசை கேளு
விண்ணப்பா தானோக்கி மலர்க்கண் சாத்தி
மேலான இடதுகையில் விபூதி வைத்துக்
கண்ணப்பா விபூதியைநீ நிரப்பி மைந்தா
நலமான நவகோணம் நன்றாய்க் கீறி
முண்ணப்பா நடுவான முக்கோணத்தில்
முதலான விந்துஓங் காரம்போடே. 20

போடப்பா ஓங்காரம் அதனுள் மைந்தா
பொருந்திநின்ற சுழியெழுதிப் போதமாக
நாடப்பா அஞ்செழுத்தில் மூன்றுங் கூட்டி
நன்றாக உருச்செபித்து நாட்டி உன்னிக்
கூடப்பா வாசியினால் மூலம் பார்த்துக்
குருவான பதிநோக்கித் தியானம் செய்து
ஊடப்பா வாசிநின்ற விடத்திலேதான்
உண்மையுடன் ரேசகபூ ரகமும் பண்ணே. 21

பண்ணப்பா கும்பகத்தில் மனத்தை வைத்துப்
பதிவான சுழிமுனையைப் பத்தியாக
நண்ணப்பா குருவருளால் பார்த்தாயாகில்
நடுநின்ற தீபமடா தோணுந் தோணும்
உண்ணப்பா நின்றதொரு தீபங் கண்டால்
உத்தியுள்ள நிறைந்ததொரு மோன பூசை
வேதாந்த மானதமாம் பூசைதானே. 22

தானென்ற மானதமாம் பூசைசெய்து
தன்மையுள்ள பூதியைநீ சாந்தமாகக்
கோனென்ற குருவருளால் பூச மெய்யில்
குணமாகப் பணவிடைதான் உள்ளே கொண்டால்
நானென்ற ஆணவங்கள் அகன்றுபோகும்
நாதாந்த தேகமது மத்தியாகும்
தேனென்ற அமுதரசம் சித்தியாகும்
சிவசிவா சிவயோகத் திருந்து பாரே. 23

பாரப்பா இன்னமொரு கருவைக் கேளு
பரியான தகட்டில்நவ கோணமிட்டு
நேரப்பா நடுவான முக்கோணத்தில்
நிறைந்துநின்ற சுழி எழுதிச் சிகாரம்போட்டுப்
பேரப்பா அஞ்செழுத்தில் மூன்றுங் கூட்டிப்
பிலமாக நூற்றெட்டு உருவே செய்து
காரப்பா அத் தகட்டைக் குறிசத் தூட்டிக்
கருணையுடன் கைதனிலே கட்டிப் பாரே. 24

கட்டிநன்றாய் விபூதியைநீ பூசினக்கால்
கலந்துநின்ற ரோகமெல்லாங் காணாதோடும்
இட்டமுடன் தேகவச்ர காயமாகும்
ஏகாந்தத் தோடம் எல்லாம் எடுபட்டோடும்
சட்டமுடன் நவக்கிரகச் சார்பினாலே
சகலபிணி விடமுதலாய்த் தானே தீரும்
திட்டமுடன் நவக்கிரகந் தேகந் தேகம்
திருவான அனுக்கிரகங் குருவின் வீடே. 25

வீடான நவகோணம் இட்டுக்கொண்டு
விபரமுடன் நடுவான முக்கோணத்திற்
சூடான அட்சரத்தின் பெருமை கேளு
சுபமுண்டாங் காரியத் தகட்டிலேதான்
வாடாமற் தானெழுதி மைந்தா கேளு
வரிசையுடன் எட்டு எழுத்தைத் தியானம் பண்ணித்
தேடாகச் சிசுக்களுக்குக் கட்டினாக்கால்
செகத்தினிலே நின்றபல தோடம்போமே. 26

போமப்பா இன்னமொரு கருமானங்கேள்
புத்தியுடன் தாம்பூரத் தகட்டிலேதான்
தாமப்பா தன்நிலையைத் தியானம் பண்ணிச்
சங்கையுடன் நவகோணம் இட்டுக்கொண்டு
ஓமப்பா அட்சரந்தான் எட்டெழுத்தை
உறுதியுடன் தான்எழுதி நடுக்கோணத்தில்
ஆமப்பா ஓம்கிலி ரீங்என்றேதான்
அழுத்திமிகத் தானெழுதி அந்தம் பாரே. 27

அந்தமென்ற சுழிமுனையில் மனக்கண்ணாட்டி
அன்புடனே சடாட்சரத்தை உருவே செய்து
சொந்தமுடன் அத்தகட்டைத் தியானம் பண்ணிச்
சுருக்காக மானிடர்க்குக் கட்டினாக்கால்
பெந்தமென்ற மயக்கமொடு பித்தும் தீரும்
பிசாசுமுதற் பில்லிசூ னியமுந் தீரும்
பந்தமுள்ள சாமுதற் சிலவிடங்கள்
பறக்குமடா நவக்கிரகப் பதிவதரலே. 28

பதிவாக இன்னுமொரு கருமானங்கேள்
பரித்தகட்டில் நவகோணம் இட்டுக் கொண்டு
கெதியாக எட்டெழுத்தைச் சுத்திப்போட்டுக்
கிருபைபெறும் நடுவான முக்கோணத்தில்
விதியான அட்சரந்தான் ஓம்றீங்கென்று
விபரமுடன் தானெழுதி விண்ணை நோக்கி
மதியான ரவிமதியைச் சுழினைக்கேற்றி
மார்க்கமுடன் சற்குருவைத் தியானஞ் செய்யே. 29

செய்யப்பா எந்திரத்தைக் குளிசம் செய்து
திருவான பெண்களுக்குக் கட்டினாக்கால்
மெய்யப்பா சொல்லுகிறேன் கெற்பரோகம்
மெய்யான தேகமாம் பாய்வு தீர்ந்து
கையப்பா உதவுவது போலே மக்காள்
காரிகைக்குக் கற்பமுண்டாங் கண்ணைக் காண்பாள்
பொய்யப்பா போகாது மெய்யெ நிற்கும்
புத்தியுடன் நவக்கிரக பூசை பண்ணே. 30

பண்ணுவது இன்னமொரு கருமானங்கேள்
பார்மகனே வெள்ளியத் தகட்டிலேதான்
தண்ணுறவாய் நின்றநவ கோணமிட்டுத்
தன்மையுடன் எட்டெழுத்தைச் சுத்திப் போட்டுக்
கண்ணுமனக் கண்ணிதனால் முக்கோணத்திற்
கருணையுடன் சிவாசிவா ரீங்கென்றிட்டு
உண்ணுவது சடாட்சரத்தை உருவே செய்து
உறுதியுடன் மனத் தறிவாற் தியானம் பண்ணே 31

பண்ணப்பா குருபரனைத் தியானம் பண்ணிப்
பதிவான எந்திரத்தைக் குளிசமாடி
நண்ணப்பா வயல்களிலே அழுத்தினாக்கால்
நன்றாகக் கோளன்றி விளையும் பாரு
பெண்ணப்பா திரளாமல் குருபேதித்தாற்
பெண்களுக்குக் கட்டினால் நன்மையாகும்
எண்ணப்பா நிறைந்தஅனுக் கிரகத்தாலே
இகத்திலுள்ள அதிசயங்கள் இன்னங் கேளே. 32

இன்னங்கேள் கருமானஞ் சொல்வேனையா
ஏகாந்தத் திருமூலர் கடாட்சத்தாலே
சொன்னமொழி தவறாமல் மனக்கண்ணாலே
சோதியென்ற ரவி மதியைச் சுழினைக்கேற்றி
முன்னமே சொன்னதொரு முக்கோணத்தில்
முத்திதரும் வாசியினால் புருவத்தேகி
நன்னயமாம் நவக்கிரக பூசைபண்ணி
நன்மைபெற வனக்கிரக கடாட்சம் பாரே. 33

பாரப்பா தங்கம்வெள்ளி செம்பு மூன்றும்
பதிவாக உருக்கியதைத் தகடாய்த் தட்டி
நேரப்பா தகட்டில்நவ கோணமிட்டு
நேர்மையுடன் எட்டெழுத்தும் நினைவாய் நாட்டி
ஆரப்பா அறிவர்நடுக் கோணந் தன்னில்
ஆதியென்ற விந்தும் ஓங் காரம்போட்டுக்
கூரப்பா ஓங்காரந் தன்னில் மைந்தா
குறியான சுழியதிலே குணமாய்ப்போடே. 34

போட்டதொரு சக்கரத்தை வைத்து நன்றாய்ப்
புனிதமுடன் பூசித்து மைந்தா கேளு
நாட்டமுடன் உருச்சிலைகள் அடியில் வைக்க
நன்மையுடன் சத்தி வளர்ந் திருக்கும் பாரு
தேட்டமுடன் நவக்கிரகச் சித்தினாலே
சிவகளையும் உண்டாச்சு தெறிவுமாச்சு
ஆட்டமென்ற ஆட்டமெல்லாம் எட்டெழுத்தாம்
ஆதியென்ற அட்சரந்தான் மூலமாமே. 35

ஆமப்பா எட்டெழுத்து மூலமாச்சு
ஆதியென்ற மூலமதைச் சொல்லக் கேளு
ஓமப்பா அஞ்செழுத்துச் சிவமுமாச்சு
உறுதியுள்ள மூன்றெழுத்து சத்தியாகும்
தாமப்பா சத்திசிவ மொன்றாய்க் கூடிச்
சகலகரு மாந்திரிகம் இதுதான் பாரு
காமப்பால் கனற்பாலைக் கொண்டோர்க்கெல்லாங்
கருவான எட்டெழுத்துஞ் சித்தியாமே. 36

சித்தியுள்ள எட்டெழுத்துந் தினமே ஓதிச்
சிவசிவா குருபதியில் சேர்ந்தாயாகில்
முத்தியுள்ள தேகமது சித்தியாகும்
மூர்க்கமுள்ள வாசியது அகலாதையா
புத்தியுடன் ரவி மதியைத் தினமும் நோக்கிப்
புண்ணியனே நடுவான சிகார வீட்டில்
நித்தியமும் நினைவாக நேமமானால்
நின்தேகம் அமுதமென்ற தேகமாமே. 37

ஆமப்பா இன்னமொரு கருவைக் கேளு
ஆதியென்ற எட்டெழுத்தின் அருமை தன்னைத்
தாமப்பா தன்னிலையில் மனக்கண் வைத்துத்
தயவாக மூன்றெழுத்தைத் தியானம் பண்ணி
ஓமப்பா பிணியாளர் வந்து நின்றால்
உத்தமனே பூரித்து உண்மையாக
நாமப்பா விபூதியைநீ கடாட்சித்தக்கால்
நாடிநின்ற பிணிகள் எல்லாம் நசித்துப்போகும் 38

போகுமடா பொல்லாத நோய்களெல்லாம்
புத்தியுடன் பூரணமாய் இருந்துகொண்டால்
ஆகுமடா நவக்கிரகஞ் சித்தியாகும்
ஆதியென்ற மூலமதில் வாசி பூட்டி
வாகுடனே புருவமதில் மலர்க்கண் சாத்தி
வரிசையுடன் ஓம்கிலியும் சவ்வென்றோத
ஏகுமடா பில்லிமுதல் விடங்களெல்லாம்
ஏகாந்த நடுவணையில் இருந்து பாரே. 39

பாரப்பா சித்துவகை திலதம் சொல்வேன்
பார்தனிலே மானிடர்க்குப் பகர வேண்டாம்
தேரப்பா மனதறிவால் தெளிந்து கொண்டு
சிந்தைமனது ஒன்றாகத் திரமாய் நின்று
நேரப்பா நின்றதொரு சல்லி மூலம்
நிசமான மூலமதை யார்தான் காண்பார்?
பேரப்பா பேசாத மூலந் தன்னைப்
பெருமையுள்ள மவுனமதாய்ச் சொல்லக்கேளே.40

கேளப்பா மூலமென்றால் உந்திப் பூடு
　　கெணிதமுள்ள தாமரைநற் கொடியால் மைந்தா
தாளப்பா தாமரையோர் இதழின் பூடு
　　தன்னகத்தில் நடுவாகி நின்ற மூலம்
கோளப்பா இல்லாத சல்லி மூலம்
　　கொடியான மூலமடா முதலாம் மூலம்
ஆளப்பா அந்தரமாய் நின்ற மூலம்
　　அடிமுடிக்கும் நடுவான ஆதியாமே. 41

ஆதியென்ற முலமதிற் பிரம தேவர்
　　அடங்கிநின்று தவசிருந்தார் அறிந்து கொள்ளு
சோதியென்ற குருவருளால் மைந்தா நீயும்
　　சொல்லாதே தாமரையின் கொடியை வாங்கி
நீதியுடன் நன்மையதாய்க் கரிக்கிக் கொண்டு
　　நிச்சயமாய்க் கலவமதில் வைத்து மைந்தா
சாதியென்ற ஆவினுட நெய்யாலாட்டிச்
　　சவாதுடனே புனுகுபச்சை சரியாய்ச் சேரே! 42

சேர்த்துநன்றாய் அரைத்துவொரு சிமிழில் வைத்துச்
　　சிவசிவா சற்குருவைத் தியானம் பண்ணிப்
பார்த்திபனே ரேசகபூ ரகமுஞ் செய்து
　　பதிவான கும்பகத்தில் மனத்தை வைத்துக்
காத்துநன்றாய் ரவிமதியைச் சுழினைக்கேற்றிக்
　　கருணையுடன் மைச்சிமிழைக் கரத்தில் ஏந்திச்
சூத்திரமாய் அஞ்சனா தேவி தன்னைச்
　　சும்சும்சி வாயமென்று தொழுது நில்லே. 43

தொழுதுகொண்டு பணவிடைதான் மையெடுத்துச்
சோதி என்ற புருவமதில் திலதம் போட்டுத்
தொழுதுகொண்டு எட்டெழுத்தை உருவே செய்து
சுந்தரம்போல் நீயிருக்கும் போதில் மைந்தா
தொழுது உன்றன் சமூகமதைக்கொண்டோர்க் கெல்லாம்
சூழ்வினையும் பழவினையும் சுத்தமாகும்
தொழுதுநின்று பிசாசுதலை விரித்தேயாடும்
தோணாத ஏவல்பில்லி தொலைந்து போமே. 44

போமப்பா சகலபிணி பிசாசுயெல்லாம்
பொருந்திநின்ற மையுறுதி கண்டதாலே
நாமப்பா சொல்லுகிறோம் தூர திட்டி
நன்றாகத் தோணுமடா நாட்டம் பாரு
தாமப்பா நவக்கிரகச் சித்தினாலே
தன்மையுடன் இன்னமொரு கருவைக் கேளு
நாமப்பா சொன்னமொழி தவறாது ஐயா
நடுவான் காலங்கி வாசி தானே. 45

வாசியென்ற அண்டமடா பேரண்டத்தில்
மார்க்கமுடன் ஞானியண்டக் கருவை வாங்கி
நேசமென்ற அண்டமதின் ஓட்டிற் பூசி
நினைவாக ரவிதனிலே காய வைத்துப்
பாசமென்ற கமலையுடன் நெய்யால் மைந்தா
பத்தியுடன் தீபமது பதிவாய் வைத்து
வாசமென்ற அண்டமதில் ஓட்டிலேதான்
மையேத்தி மை எடுத்த வரிசைதானே. 46

வரிசையுடன் மை எடுத்துச் சவாது கூட்டி
மார்க்கமுடன் ரேசித்து வைத்துக் கொண்டு
உரிசையுடன் சற்குருவைத் தியானம் பண்ணி
உண்மையுடன் புருவமதில் திலதம் போட்டுப்
பரிசமுடன் வாசியினால் மூலம் பார்த்துப்
பத்தியுடன் சியோகத்து இருந்தாயாகில்
கரிசனமாய் உன்சமுகங் கண்டபேர்க்குக்
கருத்தில்வெகு பயஞ்செனிக்குங் கருவைப் பாரே 47

பாரப்பா கற்பவிதி யொன்று கேளு
பக்தியுள்ள கண்மணியே பதிவாய் நீயும்
ஆரப்பா அறிவார்கள் அண்டக் கூறு
ஆதியென்ற ஞானியடா அண்டந் தன்னில்
நேரப்பா நின்றகரு ஞானி யண்டம்
நிசமான அண்டமடா முதலாம் வைப்பில்
காரப்பா அகப்பட்ட அண்டம் வாங்கிக்
கருவாகக் கட்டுதற்கு வகையைக் கேளே. 48

வகையான கைபாகஞ் சொல்லக் கேளு
மார்க்கமுள்ள அமுரியது படிதான் ஒன்று
தகையாகப் பசுவின்பால் படிதான் ஒன்று
தகரான வெள்ளையின்பால் படிதான் ஒன்று
திகையாதே இளநீர்தான் படிதான் ஒன்று
செம்மையுடன் நாலும் ஒன்றாய்ப் பாண்டத்திட்டு
நகையாதே கருஞானி அண்டந் தன்னை
நாட்டமுடன் அதிற்போட்டு அவித்திடாயே. 49

அவித்திடவே அண்டமெல்லாங் கட்டிப் போகும்
அப்பனே தானெடுத்து வைத்துக் கொண்டு
குவித்ததொரு அண்டமதின் தோடு போக்கி
குறியொன்று சொல்லுகிறேன் நன்றாய்க் கேளு
செவித்ததொரு வெள்ளைமஞ்சட் கருவிரண்டுஞ்
செம்மையுடன் வெவ்வேறே பதனமாகத்
தவித்துமிக வாடாதே பீங்கான் தன்னில்
சாதகமாய் வைத்துமறு சேதி கேளே. 50

சேதியென்ன மலைத்தேனை வாங்கி நன்றாய்ச்
செம்மையுடன் பீங்கான்தன் கருவில் விட்டு
ஆதியென்ற சவிமுகத்தில் நவநாள் வைத்து
அப்பனேதானெடுத்துப் பார்த்தாயாகில்
பேதியா தேயிருக்குஞ் சோதி போலே
பிலமான பதியினால் பதனம் பண்ணிச்
சோதியென்ற சற்குருவைத் தொழுது போற்றித்
துருவமென்ற பதிதனிலே இருந்து கொள்ளே. 51

கொள்ளுகிற விதமென்ன வென்றால் மைந்தா
குணமாக உதயாதி தன்னிலேதான்
நள்ளுறவாய் வெள்ளையென்ற கருவிலேதான்
நன்மையுடன் பணவிடைதான் எடுத்துக்கொண்டு
உள்ளுறவாய்க் கொண்டதின்மேல் மைந்தா கேளு
உண்மையுடன் மாலையிலே சொல்லக் கேளு
விள்ளுகிறேன் மஞ்சளென்ற கருவிலேதான்
விரைவாகப் பணவிடைதான் எடுத்துக்கொள்ளே 52

எடுத்துநிதம் அந்திசந்தி கொண்டால் மைந்தா
ஏகாந்தத் தேகமது இறுகிக் கட்டும்
தொடுத்துநின்ற வாசியது நுடங்காது ஐயா
தொடுகுறியில் தீபமது துலங்கும பாரு
அடுத்துநின்ற விந்துவது இறுகிப் போகும்
ஆனந்த மதிஅமுத அருவி பாயும்
கடுத்துநின்ற காலன் அவன் விலகிப் போவான்
கயிலாசத் தேகமதாய் இருக்கும் பாரே. 53

இருக்கின்ற வெள்ளைமஞ்சட் கருஇரண்டும்
ஏகாந்த நாதவிந்து என்றப் பேராம்
உருக்கமுடன் தினந்தோறுங் கொண்டுவந்தால்
உறுதியென்ன தேகம்வச்ர காயமாகும்
பெருக்கமுள்ள நாதவிந்தால் எடுத்த தேகம்
பேசாதே அண்டமதால் கெட்டியாச்சு
திருக்கருத்து மனத்துரிமை யாகக் கொண்டால்
திரமான பஞ்சகர்த்தாள் தீர்க்கமாமே. 54

தீர்க்கமுள்ள மூலமடா ஆறாதாரம்
திருவான நவக்கிரக மான தேகம்
மார்க்கமுள்ள நவக்கிரகந் தனக்கு மைந்தா
மகத்தான அனுக்கிரகம் அதிகமாகும்
மூர்க்கமுள்ள அதிகமடா சோதி சோதி
முனையான சுழியை அடா தீப வீடு
ஏர்க்கையுடன் அத்தீப வீட்டிலேதான்
இருக்குதடா மதி அமுதம் அறிந்துகொள்ளே. 55

இருந்துகொண்டு வாசியினால் மூலம் பார்த்து
எழுந்ததொரு வாசியினாற் புருவத்தேகி
அருந்தவமாய் முக்கணனைக் கண்டு போற்றி
ஆதியென்ற நவக்கிரக பூசை பண்ணித்
திருந்தியதோர் பூசையினால் குருவைக் கண்டு
சிவசிவா அடிமுடியே தென்றேன் அப்போ
வருந்திமிகக் கேட்டதினால் மூல நாயன்
மார்க்கமுடன் நாதவிந்து என்றார் பாரே. 56

பாரப்பா நாதவிந்து அண்டமாச்சு
பதிவான அண்டமடா பிண்டம் பிண்டம்
நேரப்பா அண்டபிண்டம் ஒன்றாய்க் கூடி
நிலைத்ததொரு முட்டையென்ற பேருமாச்சு
காரப்பா அண்டமென்ற முட்டை தன்னைக்
கருக்குருவாய்க் கண்டுநிதங் கொண்டாயானால்
ஆரப்பா உனக்கீடு சொல்லப்போறேன்
அண்டரண்ட பதங்கடந்த சித்தனாமே. 57

சித்தமென்ற செபதபத்துக்கு உறுதி என்ற
சிவசிவா சிவயோக நிட்டையாகும்
முத்திதரும் நிட்டைதனக்கு உறுதியான
மூர்க்கமுள்ள கற்பமடா அண்டக் கூறு
பத்தியுடன் அண்டமென்ற கற்பங் கொண்டாற்
பாலகனே நவக்கிரகம் பதிவாய் நிற்கும்
சுத்தமுடன் நவக்கிரகம் பதிவாய் நிற்கும்
தோணுமடா அனுக்கிரக சோதி தானே. 58

சோதியென்ற செகசோதி சோதிசோதி
துருவமென்ற புருவநடுக் கமல மீதில்
ஆதியென்ற விந்துவடா கமலத்துள்ளே
அடங்கிநின்ற போதமதை என்ன சொல்வேன்
சாதியென்ற சராசரத்துக் குறுதியான
சார்வான வாசியடா ஆவி யாவி
நீதியுடன் ஆவியடா பிராணன் ஆச்சு
நிசமான பிராணனடா நாத விந்தே. 59

விந்தான நாதவிந்து ஒன்றாய்க் கூடி
மேலான நவமணிபோற் திரண்டதையா
சந்தான மானநவ மணியே மைந்தா
தாரணியிற் காண்பவர்கள் ஆரும் இல்லை
சிந்தாமற் சிதறாமல் வாசி தன்னைத்
தீர்க்கமுடன் கட்டியொரு மணியாய் வாங்கிப்
பந்தானந் தழைக்கவொரு மணியாய் வைத்துப்
பத்தியுடன் நவக்கிரக பூசை பண்ணே. 60

பூசையிலே மனத்துறுதி யாகவேணும்
புத்தியுடன் அமுதரசங் கொள்ள வேணும்
நேசமுடன் வாசியிலே நிலைக்கவேணும்
நிலைத்தாலும் நிருவிகற்ப சமாதிவேணும்
வாசமுடன் சமாதியிலே நிலைத்தாலுந்தான்
மணிநாதச் சிலம்போசை கேட்க வேணும்
பாசமுடன் சிலம்போசை கேட்டாலுந்தான்
பத்திகொண்டு குருபத்திற் பதிவாய் நில்லே. 61

பதியான பதியதுதான் புருவ மத்தி
பாலகனே ஆவியது ஒடுங்கும் வீடு
விதியான ஆவியது சொலிக்கும் வீடு
வேதாந்த உருத்திரனார் பதியைப் பார்த்துக்
கெதியான பதிஇதுவென்று அறிந்து கொண்டு
கேள்மகனே அப்பதியில் நாட்டமாக
மதியான ரவி மதியின் செயலினாலே
மார்க்கமுடனிருந்து கொண்டு யோகம் பாரே 62

பாரப்பா இன்னுமொரு கருவைக் கேளு
பதிவான தாமரையின் கொடியை வாங்கிக்
காரப்பா தேனதிலே ஊறப்போட்டுக்
கருணையுடன் எட்டாநாள் எடுத்து மைந்தா
தேரப்பா கண்ணீரால் கழுவிப்போட்டுச்
சிவசிவா ரவிதனிலே காய்ந்த பின்பு
நேரப்பா சுழிமுனையில் மனத்தை வைத்து
நேமமுடன் நிறைய அவாய் நறுக்கிக்கொள்ளே. 63

நறுக்கியே நன்றாகக் குளிசம் பண்ணி
நாட்டமுடன் நறுக்கினதோர் மூலம் வைத்து
இருக்கிநன்றாய் நவகோணந் தன்னில் வைத்து
இன்பமுடன் செபதபங்கள் செய்து கொண்டு
பெருக்கமுடன் அக்குளிசம் எடுத்து மைந்தா
பெலமான மவுனத்தின் தியானம் பண்ணி
உருக்கமுடன் சாம்பிராணித் தூபங் காட்டி
உண்மையுடன் வலதுகையில் அணிந்துகொள்ளே. 64

அணிந்துகொண்டு பூரணமாய் இருந்து மைந்தா
அன்புடனே குருபரனைத் தியானம் பண்ணிக்
கனிந்துன்றன் கரமதனால் மேலே தொட்டால்
கடிதான விடசுரமுங் காணாது ஓடும்
துணிந்துவரும் பிசாசுகளை உன்றன் வாயால்
தூரப்போ என்றுசொன்னால் ஓடிப் போகும்
பணிந்துதன் பாதமதைக் கண்டோர்க்கு ஐயா
பலபிணியும் விடசுரமும் பாழாய்ப் போமே. 65

பாலான முப்பாலை அறிய வேணும்
பருதிமதி சுடரொளியைப் பார்க்கவேணும்
காலான வாசியில்சென்று ஏறவேணும்
கற்பூரத் தீபமதைக் காண வேணும்
மேலான மதியமுதங்கொள்ள வேணும்
வேதாந்தச் சாத்திரங்கள் பார்க்க வேணும்
நூலான நூல்முறைகள் பார்த்தாலுந்தான்
நுணுக்கமுடன் அறிவுபூ ரணமாய் நில்லே. 66

நில்லப்பா பூரணமாய் நின்று கொண்டு
நிசமாக இன்னுமொரு கருவைச் சொல்வேன்
செல்லப்பா சாதிக்காய் சாதிப்பத்ரி
திருவான வால்மிளகு கிராம்பு கூட்டி
மெள்ளப்பா இளவருப்பாய்ச் சூரணித்து
விசையான ஆனந்த மூலி வாங்கிக்
கொள்ளப்பா நெய்யாலே வறுத்து இடித்துக்
குணமான சூரணமாய்ச் செய்து கேளே. 67

கேளப்பா முன்பொடிக்கி நாலில் ஒன்று
        கிருபையுடன் மூலிகையைக் கூட்டி மைந்தா
கேளப்பா இருபொடியும் ஒன்றாய்க் கூட்டிக்
        கெணிதமுடன் சர்க்கரையும் வெல்லஞ் சேர்த்துக்
கேளப்பா அதுக்குரெட்டி ஒன்றாய்க் கூட்டிக்
        கிருபையுடன் தானிடிக்கும் போதிலேதான்
கேளப்பா மெழுகதுபோற் திரண்டுபோகும்
        கேள்வியென்ன பூரண லேகியமும் ஆச்சே. 68

ஆச்சப்பா பணவிடை லேகியமுங்கொண்டு
        அருளான புருவமையம் பார்க்கும்போது
மூச்சப்பா அறிவுபூ ரணமாய் நின்று
        முனையான சுழிமுனையில் வாசி ஏறிப்
பேச்சப்பா பேசாத வாசியாலே
        பெருகிநின்ற தீபமது கண்ணிற் காணும்
காச்சப்பா அத்தீபச் சுடரிலேதன்
        காச்சினாற் தேகமது கசடுபோச்சே. 69

போச்சப்பா வாய்வோடு மூலச் சூடு
        பொல்லாத நெஞ்செரிவு பொருமல் காந்தல்
நீச்சப்பா நீர்த்தோடங் கபாலக் குத்து
        நினைவுகெட்ட வயிற்றுவலி நீங்கிப் போகும்
மூச்சப்பா முன்னிலையாய் அடங்கும் வீட்டில்
        முத்திகொண்டு நவக்கிரக பூசை செய்தால்
பேச்சப்பா பேசாத மவுனங் காணும்
        பேரான குருபதியிற் பெலமாய் நில்லே. 70

பெலமான நவகிரக பூசை பண்ணப்
 பேருலகெல் லாம் உனது வசமே ஆகும்
தலமான நடுமனையாம் முக்கோணத்தில்
 சார்ந்துகொண்டு வாசியினால் மூலத்து ஏகி
நலமான புருவநடுக் கமல மீதில்
 நாட்டமுடன் நின்றுகெதி கொண்டாயானால்
குலமான நவக்கிரக வீட்டிலேதான்
 குருவான ஆதாரந் தோணும் பாரே. 71

தோணுமடா ஆதாரம் மூலாதாரம்
 துருவமென்ற ஓங்காரம் மேலாதாரம்
காணுமடா கருணைவிழிக் கண்ணாற் பாரு
 கமலமென்ற ஆயிரத்தெண் மலருக்குள்ளே
தேனுடனே அமுதரசம் வடியும் அப்பா
 தெகிட்டாதே நீ இருந்து கொண்டு தேறு
ஊனுடனே உயிர் சேர்ந்து சித்தியாகும்
 உத்தமனே பத்தியுடன் உகந்து காணே. 72

காணப்பா நவகோணந் தன்னை வைத்துக்
 கருணையுடன் மானதமாய்ப் பூசை செய்து
பேணப்பா மூலமதிற் சிம்சிம்மென்று
 பிலமான வாசியினால் மூலம் பார்த்தால்
கோணப்பா இருந்தஇடங் கண்ணிற் காணும்
 குருவான திருமூலர் பாதம் போற்றிப்
பூணப்பா கண்டமதில் அங்கென்றூறு
 புருவமையம் முக்கணனைப் போற்றிக்காத்தே. 73

காத்துநீ மனத்துரிமையாக மைந்தா
கருணைபெற ரேசகபூ ரகமுஞ் செய்து
போத்திமிகக் கும்பகத்தில் நின்று கொண்டு
புத்தியுடன் மனத்தறிவால் மைந்தா நீயும்
ஆத்துமத்துக்கு உயிராகி நின்ற மூலம்
ஆதார மூலமடா முக்கோணத்திற்
பாத்திபனே ஓம்கிலியுஞ் சவ்வென்றேதான்
பதிவாகச் செபிக்க அனல் பத்துந் தானே. 74

தானென்ற அனல்மீறி முதுகு ஓரந்
தானேறிப் பாதாதி கேசமட்டும்
ஊனென்ற தேகமெல்லாஞ் சொலிக்கும் பாரு
ஓங்கும்பஞ் சாக்கினியென்று உறுதிகொண்டு
கோனென்ற புருவமையச் சுழிமேல் நின்று
குருவான பதிநோக்கி நின்றாயானால்
வானென்ற அண்டமதிற் தீபங் காணும்
மாதமாந் தீபமதில் மகிழ்ந்து நில்லே. 75

நில்லப்பா அய்யுங்கிலியுஞ் சவ்வென்றேதான்
நேமமுடன் மனத்தறிவால் நின்றால் மைந்தா
ஒல்லப்பா நினைத்த தெரி சனமும் ஆகும்
உலகத்தின் நடத்தையெல்லாம் உள்ளங் காணும்
செல்லப்பா ஆதார மூலந் தோன்றும்
சிவசிவா திருநடனஞ் செவியிற் கேட்கும்
வில்லப்பா அந்தவொலி சிலம்பின் ஓசை
வேதாந்த ஓசையடா நாதந் தானே. 76

தானென்ற நாதவிந்தால் எடுத்ததேகம்
தன்னறிவால் தன்னையறி யாத பாண்டம்
வீனென்ற பாண்டமடா நிலையாக் கேணி
விசையில்லா நீர்க்குமிழி யான தேகம்
ஊனென்ற ஆசையிலே ரவியோ தேய்ந்து
உ..ழன்றமதி மேலாகி உறுதி கெட்டுப்
பூனென்ற போக்குவரத்து அறியாமற்றான்
புத்திகெட்ட சடமதனைப் போத்துவாயே 77

போத்துவது பூரணத்தால் போற்ற வேணும்
பொருந்திநின்ற நவக்கிரகம் பார்க்கவேணும்
காத்துநின்று வாசியில் சென்று ஏறவேணும்
கற்பூரத் தீபமதைக் காண வேணும்
ஆத்துமத்து நிலை அறிந்து கொள்ள வேணும்
அந்தநிலை பொன்றுமிடம் அறிய வேணும்
பூத்தமலர் வாசனைப்போற் புருவ மீதிற்
புத்தியுடன் நீ இருந்து பூசை பண்ணே. 78

பண்ணப்பா பூசைவிதி சக்கரந்தான்
பதிவான நவகோண முத்தி மோட்சம்
கண்ணப்பா மோட்சமது புருவ மத்தி
கருவான ரவிமதிசென்று இருக்கும் வீடு
விண்ணப்பா மேலான பிரம வீடு
மேலான வீடதுதான் முப்பாழாகும்
உண்ணப்பா ஒன்றாகி முன்பின்னாகி
உத்திதரு மணிவீடு மோட்ச வீடே. 79

வீடான வீடதுதான் மோட்ச வீடு
        வேதாந்த அமுதரசம் இருக்கும் வீடு
நாடான நவக்கிரகம் பொருந்தும் வீடு
        நாதாந்த திருநடனம் ஆடும் வீடு
கூடான வீடுகுடி இருந்த வீடு
        குடிபெலத்து இருந்ததொரு குருவின் வீடு
மேடான அண்டமடா அண்ட வீட்டில்
        விண்ணொளியும் தன்னொளியும் மேவ முற்றேம். 80

**காலங்கிநாதர் ஞான பூசாவிதி**

**முற்றிற்று**

உ

குருவே துணை

சுந்தரானந்தர் திருவாய் மலர்ந்தருளிய

# பூசா விதி 37.

ஆதிபரா பரமான மூல நாயன்
அறுமுகவன் இருபதத்தை அன்பாய்ப் போற்றி
வீதிநடு வீதிதனில் நின்ற சோதி
விளங்கிநின்ற சரசுபதியாள் பாதம்போற்றி
பாதிபிறை விமலருமை திருமாலோடு
பார்தனிலே லெட்சுமிதன் பாதம் போற்றி
சோதிமய மாகிநின்ற பூசை தன்னைச்
சொல்லுகிறேன் கணபதியின் பாதங் காப்பாம். (1)

கேளடா நவகோணந் தன்னை நன்றாய்க்
கீறுவேன் ஆறுமுக பாதம் போற்றி
தாளடா இடைரேகைக் குறுக்கே கீறி
சாற்றுகிறேன் ஒருநெல்லு நீளமப்பா
வாளடா பிங்கலையின் ரேகை கீழே
வயணமாய் நாலுநெல்லு நீளங் கீறு
நீளடா சுழிமுனையின் ரேகை கீறி
நிகழ்த்துகிறேன் மூன்றுநெல்லு நீளங் கீறே. (2)

கீறியே இடைஇடையே ரேகை ரெண்டுங்
கீழாகப் பிங்கலையின் மையங் கூட்டி
ஆறியே சுழிமுனையின் ரேகையின்கீழ்
ஆச்சரியம் கீழ் வாங்கி மேலே ஏத்தித்
தூறியே சுழிமுனையின் ரேகை ரெண்டில்
திறமாகப் பாச்சியபிங் கலையைக் கேளு
மாறியே இரண்டுநெல்லு நடுவே நிற்கும்
மைந்தனே இரண்டுநெல்லும் கடசி நிற்க. (3)

கடசிநெல்லும் நடுநெல்லும் பொருந்தும்மேலே
கடினமில்லை என்றொருநெல் மேலே வைத்து
துடசியுடன் நெல்நுனியின் விரலை ஊன்றிச்
சுகமாகப் பிங்கலையின் கீழே வாங்கி
நடசியென்று சுழிமுனைமேல் பொருத்தி வைத்து
நன்றாகக் கீழ்வாங்கி நிற்க ரேகை
விடசியடா பிங்கலையின் ரேகை ஒன்று
விதமாக அதையும் இப்படியே கீறே. (4)

இப்படியே தான் வாங்கிச் சுழியின் கீழே
இதமாக முன்ரேகை நடுவில் ஏத்தி
இப்படியே அதின்சரியாய் வாங்கிக்கொண்டு
இயம்புகிறேன் நுனிரண்டும் ஒன்றாய்ச் சேர்த்தால்
இப்படியே ஆனந்த நிர்த்தம் செய்வாள்
இதற்கீடு உலகமெல்லாம் நலமோ இல்லை
இப்படியே கீறிலைந்து கோனஞ்சும் நவசியோணஞ் சூழ்ந்து
இருக்கும்நடு கோணமென்றே இயம்பக் கேளே. (5)

இயம்புகிறேன் நடுவீட்டிற் கிடையாம் வீட்டில்
என்மகனே மஞ்சலிடு பிங்கலையில் கேளு
நயம்புகிறேன் பச்சையடா கீழாம் வீட்டில்
நன்றாக வெள்ளையிடு மூன்று மாச்சு
தயம்புகிறேன் மேல்மூன்றின் சிகப்புக் கேள் பின்
தயவாகக் கீழ்கறுப்பாய்ச் சாற்றிக்கொண்டு
வயம்புகிறேன் பஞ்சவர்ண மைந்தும் ஆச்சு
வாகாக அட்சரத்தை வகுக்கக் கேளே. (6)

கேளப்பா மேல்மூன்றில் நடுக்கோணத்திற்
கிருபையுடன் றிங்கிலியும் ஓம்மென்று நாட்டு
நாளப்பா நாட்டினபின் கீழாம்வீட்டில்
நன்றாக நவ்விட்டுப் பிங்கலையிற் கேளு
வேளப்பா மகாரமிட்டுக் கீழ்மூன்றில் தான்
வெகுசுருக்கு நடுவினிலே சிகாரம்போடு
ஆளப்பா அதுக்கிடையில் வகாரம் நாட்டு
அதினுடைய பிங்கலையில் யகாரம் போடே. (7)

போடுவாய் நடுவுடைய பிரகாரத்தில்
புகலுகிறேன் அங்கென்றும் உங்கென்றுந்தான்
ஆடுவாய் மங்கென்று மூட்டே இன்னம்
ஆச்சரியம் லாலீலூ என்று நாட்டு
ஈடுகிற நடுக்கோணத் தனக்குப் பின்பு
இயம்புகிறேன் ஐங்கோணந் தன்னைச் சுத்தி
ஆடுகின்ற திதில்நாட்டு கையிலாச மூர்த்தி
அடியேனுக்கு உரைத்தபடி அறைகிறேனே. (8)

அறைகிறேன் பானுவைப்போல் விருத்தம் இரண்டு
அப்பனே ஐம்பத்து ஒன்றையுந்தான்
வறைகிறேன் நாடிப்பின் நாலு வாசல்
வாகாக வாசல் இரு வீதியாக
நிறைகிறேன் முன்ரேகை சதுரமாக
நினைவாகக் கீறியபின் நீதான் கேளு
திறைகிறேன் நால்வாசல்முன்பதாகத்
தீர்க்கமாய் கொடிக்கம்பம் போலே நாட்டே (9)

நாட்டியே நுனியதனிற் சூலம்போட்டு
நலமாகச் சிங்கென்று மங்கென்றிட்டு
ஆட்டியே இன்னமொரு சேதி தன்னை
அப்போதே சொல்லிவிட மறந்து போனேன்
சூட்டியே அட்சரங்க இட்டதெல்லாம்
சுகமான இதன்கீழே சிகாரமிட்டு
மாட்டியே அட்சரத்தைச் சுத்தி வாங்கி
வளையத்தின் இடைதனிலே சிங்கு வங்கே. (10)

வங்கென்று இருபுறமும் வைத்த பின்பு
வாகாக இருமூலை நாலிற் கேளு
சிங்கென்று கணபதியும் வீரபத்திரன்
திறமான தெட்சணா மூர்த்தியோடு
வங்கென்று சுப்பிர மணியரோடும்
வாகாக உள்மூலை நாலிலேயும்
அங்கங்கே அவர்களையும் வைத்துப் பூசி
அப்பனே வெளிமூலை நாலிற் கேளே. (11)

கேளப்பா வயிரவனுஞ் சண்டிகேசன்
 கிருபையுள்ள இந்திரனும் கந்தனையுந்தான்
ஆளப்பா வைத்துப்பூ சித்த பின்பு
 நலமாக அட்டகெஜம் அட்டநாகம்
வாளப்பா அட்டசித்தி அட்டபாலாள்
 வரிசையுள் அட்டவக அட்டமூர்த்தி
நாளப்பா இவர்களுட பீசம் போட
 நவிலுகிறேன் என்னுடைய தீட்சை பாரே. (12)

பாரடா என்னைப்போ லாருஞ் சொல்லார்
 பரிவாகச் சொன்னதென்ன குருவே சொல்லும்
வீரடா காயத்திரிபிரா ணாயத்தோடு
 விதமாகக் கற்பங்கள் கொள்ளும் மார்க்கம்
தூரடா புவனையுட ஆட்டத்தோடு
 சுகமா தீட்சை யொன்று சொன்னேன் பாரு
ஆரடா இவ்வளவும் வெளியாய்ச் சொன்னார்
 ஆச்சரியஞ் சித்தர்சொல்ல வில்லைத்தானே. (13)

தானென்ற என்னூலைப் பார்த்து பீசம்
 தப்பாமற் போட்டுநடு கோணத்திற் கேள்
வேனென்ற உகாரமிட்டுச் சுழித்துக் கீழே
 விதமாகச் சுழித்துசுத்தி வளைத்துக்கொண்டு
ஊனென்ற சிங்குவங்கு நாட்டினாக்கால்
 உலகமெல்லாம் அப்பனே இதுவேயாச்சு
தோனென்ற சத்திசிவ மிகுவே யாச்சு
 பதிவாக இதுபோலே பகரலாச்சே. (14)

ஆச்சப்பா இன்னமுங்கேள் நடுக்கோணத்தில்
ஆதிசிவன் சாம்பவியைப் பதித்த பின்பு
பேச்சப்பா இனியேது ஒன்றுமில்லை
பெருமைமெத்த தாயையும் பூசை செய்ய
பாச்சப்பா தகடதுதான் கனகம் நன்று
பண்பாக இல்லாட்டால் செம்பால் செய்து
வீச்சப்பா ஆகாது எட்டுவிரல் நீளம்
விதமான அகலமது அளவுதானே. (15)

தானேதான் செய்துகொண்டு நடுக்கோணத்தில்
தயவாகப் பணவிடைதங் கத்தை வார்த்து
வேனேதான் அட்சரங்கள் வரைந்த பின்பு
விதமாகப் பூசைசெய்ய வித்தை கேளு
தேனேதான் பூசைமடம் முகம்வடக்குச்
செய்துகொண்டு மேற்கட்டும் விதானஞ் செய்து
மானேதான் நாற்காலிக் கட்டில் போட்டு
மவுனமுடன் மெத்தைவிரித்து ஒலுகு போடே (16)

ஒலுகிலே தாயைநீ பூசை செய்ய
ஓதுகிறேன் என் மகனே உறுதியாகச்
சிலுகிலே நாலுவித சாதியுண்டு
செப்புகிறேன் பதுமினிசித் தினியும் நன்றாய்
மலுகிலே சங்கினியத் தினிதானப்பா
வாகாகப் பத்மினியே மெத்த நன்று
குலுகிலே சித்தினிதான் இரண்டாம் பட்சம்
குறிப்பான சங்கினியத் தினித்தான் காணே. (17)

காணடா அத்தினிதான் சரியைக் காகும்
    கருவான நாலுவகை சாதிக் குள்ளே
பூணடா சங்கினிதான் கிரியைக் காகும்
    புதுமையுள்ள அத்தினிதான் சரியை பூசை
நாணடா சித்தினிதான் யோக பூசை
    நன்றாகப் பதுமினியே ஞான பூசை
ஆணடா கிடைத்தாலிப் படியே பண்ணு
    அரகரா கிடையாட்டால் ஒன்றென்றெண்ணே. (18)

எண்ணினால் ஒன்றாச்சு உலகமெல்லாம்
    இனிப்பூசை பண்ணுகிற வரிசை கேளு
அண்ணினால் நாலுவகைச் சாதிக்குள்ளே
    அகப்பட்ட பெண்களுக்கு முழுக்கு செய்து
நண்ணினால் தேகமெல்லாம் நீர்விட்டு ஆட்டி
    நன்றாகப் புனுகுசந் தனஞ் சவ்வாது
பன்னீரி னால் குளப்பித் தேகமெல்லாம்
    பண்பாகப் பூசியே பட்டுக் கட்டே. (19)

கட்டியபின் மெத்தையின்மேற் குனிய வைத்து
    கருத்திலே வேறுசிந்தை வையாமல் தான்
தட்டியபின் ஒருமனதாய் மவுனம் உன்னித்
    தனதான அம்பிகையே தாயே தேவி
நட்டியபின் சாம்பவியே உமையே என்றும்
    நன்றாகப் பூரணிகா ரணியே நீலி
வட்டியதோர் வல்லபையே பிரமன் பாரி
    வரிசையுள்ள சரசுபதிலட்சுமியை எண்ணே. (20)

எண்ணவே ருத்திரியே மாயோன் பாரி
என்தாயே மயேசுபரியே மனோமணியே
உண்ணவே லட்சுமியாம் தேவியம்மாள்
உரிமையுடன் துளபமதில் இருந்ததேவி
எண்ணவே வேணுமடா சிந்தை தன்னில்
இதமாக அவளிடத்திற் செலுத்தவேணும்
கண்ணவே நவரத்தின முடிகிரீடம்
காதில் குண்டலம் அணிந்து மஞ்சம் மேலே. (21)

மஞ்சத்தில் அரனிருக்கும் மஞ்சத்தின்கீழ்
மகத்தான தேவரொடு முனிவர் சூழத்
தஞ்சத்தில் அரன்மடியில் இருந்த தாயே
சச்சிதா னாதியருள் பெற்ற தாயே
கஞ்சத்தில் உமைமாதே ரணியே தேவி
கருணைபெருஞ் சச்சிதா னந்தத் தாயே
துஞ்சத்தில் ஆதார சத்தியென்றும்
சுருக்கமாக ஒருமனதாய்க் கூவு கூவே. (22)

சுருக்காகக் கூவியபின் சொல்லக் கேளு
சுகமான தேன்நெய்சக் கரையினோடு
மருக்காகக் கருப்பஞ்சாறுமாம் பழத்தினோடு
மைந்தனே வத்துஅரைப் படியும் விட்டு
பருக்காகப் பொரிக்காரச் சுண்ணம் போடு
பசுவின்பால் புழுகுடனே பூரஞ் சேர்த்து
உருக்காகத் தற்சனையிற் தோய்த்துக்கொண்டு
உத்தமனே திரிகோணத்து உரைக்கச் செய்யே. (23)

செய்யவே கரிகரணங் காமகளை ஊரும்
 தேனதனைப் பிடித்துவைத்துப்பீங் கானில் வாங்கு
வெய்யவே மடல்பழந் தாழம்பூத்தூள்
 விடத்தலைவேர் பிரண்டைகனி தேனால் ஆட்டி
பையவே உந்தியிலே தடவிக் கொண்டு
 பராபரைக்குக் கரிகரணஞ் செய்யும் போது
மையவே ஆரோடும் நாற்காலிக்குள்
 வாங்கிவைத்துத் தீபமுதல் தூபம் காட்டே (24)

காட்டியே அரவுயிடம் நீர்விட்டாடி
 கமலமென்ற சுகந்தபரி மளங்கள் தூவிக்
கூட்டியே துவாலையுட பட்டு வத்திரங்
 குணமாகக் கட்டியபின் பாத பூசை
நீட்டியே சொல்லுகிறேன் திறந்து நன்றாய்
 நினைவாக அவளுக்கு ஆபரணம் பூட்டி
ஆட்டியே ஆயிபெரு விரலம் தன்னில்
 அன்பாக மனம் வைத்து அப்பாற் கேளே. (25)

கேளடா சொல்லுகிறேன் நினைவாய் அப்பா
 கெடியான பீங்கானில் போதந் தன்னை
ஆடா நீஎடுத்துத் தாய் கை ஈய்ந்து
 அவள்கொங்கை நடுவேந்தச் சொல்லிப் பின்பு
நாளடா அத்துவுட சாபம் நீக்கி
 நன்றாக உன்கரத்தில் வாங்கிக் கொண்டு
மூளடா வாலைமந் திரத்தை உன்னி
 முன்குருவுக்கு ஈய்ந்தபின்பு வாலைக்கு ஈயே. (26)

ஈயடா அவள்தனக்கு உய்ந்த சேடம்
    என்மகனே மிச்சமெல்லாம் உண்டாயாகில்
தூயடா கயிலாச தேகமாச்சு
    சுகமாகப் பாங்குபெறக் கொண்டாளையா
வாயடா வாங்கென்று மிச்சம் உண்டால்
    மருவினதால் சதாசிவத்தின் பூசையாச்சு
மாயடா இனிவேறே பூசையில்லை
    மைந்தனே இப்பூசை ஆதியாமே. (27)

ஆமப்பா பூசைசெய்துஅவள் முன்பே நீயும்
    அன்னமொடு பலகாரம் வைத்த பின்பு
நாமப்பா சொன்னபடி ஒளித்தான்காண்
    நன்றாகப் புருவமையம் பார்க்கச் சொன்னேன்,
தாமப்பா நவகோணத் தகடு தன்னைத்
    தப்பாமற் கடிதடத்தில் வைத்துப் பூவால்
காமப்பா அர்ச்சித்துப் பின்பு நீயும்
    கலியாணி பெருவிரலில் மனத்தை வையே. (28)

வையடா பலநினைவைவிட்டு ஓர்நினைவாய்
    மந்திரத்தை ஓதிடவே வரிசை கேளு
பொய்யடா சொல்லவில்லை என்தாய் தீட்சை
    பூட்டினேன் தனியிருந்து லெட்சந் தீரு
மெய்யடா உருவேறு மட்டுங் கேளு
    விதமாக இடக்கண்ணில் உகாரம் நாட்டி
நெய்யடா வலக்கண்ணில் அகாரம் நாட்டி
    நீயடா புருவமத்தி நிலையை நாட்டே. (29)

நாட்டியே மவுனம் உன்னி தீட்சை மோதி
நன்றாகப் புருவமையம் பார்க்கப் பார்க்கக்
கூட்டியே உருவேறு மட்டும் நன்றாய்க்
கூர்ந்துபார் கோடி ரவி கோடி பானு
மாட்டியே ஒளிகாணும் ஒளியிற் சென்று
மைந்தனே ஈராறு தலமுங் காணும்
தாட்டியே தலங்கண்ட போதுதானே
சகலசித்தி யாகுமடா சார்ந்து பாரே. (30)

பாரப்பா யோகசித்தி குளிகை சித்தி
பண்பாக வாதசித்தி காயசித்தி
ஆரப்பா அட்டகன்மஞ் சித்தியாகும்.
ஆச்சரியம் தாயுடைய பெருமையாலே
கூரப்பா அவள்முன்வைத் திருந்த அன்னம்
கொடுமையுள்ள கறிபதார்த் தங்களெல்லாம்
வாரப்பா தள்ளிமுறைப் பிள்ளை கூட்டி
வயணமாய் ஒருமனதாய்ப் பொசித்திடாயே. (31)

பொசித்தல்லோ தகடதிலே மாளாச் சித்து
புதுமையுள்ள தூபமுதல் தீபங் காட்டி
வசித்தல்லோ வசியென்று தகடெடுத்து
மைந்தனே தினம்பூசை பண்ணக் கேளு
கசித்தல்லோ முன்செபித்த தீட்சை தன்னை
கருவாக நூற்றெட்டு உருச்செபித்துப்
பொசித்தல்லோ பூரணத்தில் அன்பு வைத்து
புதுமையுடன் என்மகனே பூசிப்பாயே. (32)

பூசிக்கும் போது ஒரு முறைமை கேளு
　　புதுமையுள்ள உலகமெல்லாம் அகன்றபோது
ஆசிக்கும் உபசாரஞ் செய்து நிற்பர்
　　அன்பாகப் பெண்கள்வந்து அணுக என்பார்
நாசிக்கும் அவர்களை நீ அணுக வேண்டா
　　நன்றாகத் தாய்சொன்ன படியே உனக்கு
வாசிக்கும் பூசைசெய்யா விட்டால் சொன்னேன்
　　வாயாது காயசித்தி வாயாது எண்ணே. (33)

வாயாது தேவருக்கும் இருடிகளுக்கும்
　　மைந்தனே மும்மூர்த்தி தனக்குங் கூட
வாயாது பூசையிது உனக்கு மைந்தா
　　வாங்கிவிட்ட குறையாலே வாய்த்தது அப்பா
வாயாது ஒருநாளும் மனிதற்கு ஐயா
　　மகத்தான பூசையிது கிரியை பூசை
வாயாது என்றுசொல்லி விட்டிடாதே
　　மறவாமற் சிவயோகி மருவிப்பாரே. (34)

மருவிப்பார் இப்பூசை முன்னே செய்து
　　வகையாகக் கிருபையையே காந்தம் பார்த்து
உருவிப்பார் இதுக்கெல்லா முன்னே செய்ய
　　ஒகோகோ சரியையுட விபரங் கேளு
கருவிப்பார் சித்தர்சொன்ன தீட்சை மார்க்கம்
　　கருணையுடன் உருச்செபித்தால் சரியையாகும்
தருவிப்பார் அதன்பிறகு கிரியை பூசை
　　தப்பாமற் செய்தபின்பு யோகம் பாரே. (35)

யோகத்தைப் பார்த்தபின்பு கற்பம் உண்ணு
ஒழுங்காக ஆறுசுவை அகற்றிப் போடு
வேதத்தைப் பார்த்துவிட்டு யோகம் பாரு
பொலிவான சோம்பல் நித்திரையே வேண்டா
பாகொத்த கொங்கணரும் என்றன் தந்தை
பாடினார் இருவரும் என்றும்போல
சேகொத்த அம்முறைக்குக் கற்பங் கொண்டு
செகசால மார்க்கமெல்லாம் சேரத் தள்ளே. (36)

தள்ளியே மலைகளிலே செல்வதற்குச்
சாரணைக்கு ஏத்ததொரு குளிகை பண்ணி
அள்ளியே மலைகளிலே நடந்து தெட்சு
ணாமூர்த்தி பொதிகைதனிற் கண்டு சேவி?
மள்ளியே நானிருந்தேன் மகேந்திரத்தில்
மைந்தனே வந்து என்னைக் கண்டு சேவி
வள்ளிதனை உனக்களிப்பேன் வாழ்வை ஈவேன்
மகத்தான நவகோணப் பூசை முற்றே. (37)

**சுந்தரானந்தர் பூசாவிதி 37.**

**முற்றிற்று.**

உ

பரமபதி துணை

திருமூலர் திருவாய் மலர்ந்தருளிய

# பூசா விதி 41

**வா**லை புவனை வடிவுள்ள நாயகி
ஆலை திரிபுரை அமைந்திடும் சாமளை
கோலைய மான கோமளை யாமளை
மேலயப் பஞ்ச தியாச்சரி பூசையே. 1

பூசையும் தீட்சையும் புகட்டுவார் சித்தர்கள்
ஓசைஉல கத்தோ ருறுபூசை பஞ்சமம்
ஆசையாய் வாலையை யடுக்குஞ் சமுசாரி
காசை புவனை கடுமந்திரந் தாக்கே. 2

கடுமந் திரம்விடு கண்ட திரிபுரை
கடுமந்திர யோகம் கண்டுசெபஞ் செய்வார்
நடுமந்திர ஞானி நாடுவான் மூன்றும்
ஒடுமந்தி ரத்தில் ஒடுங்கிய வாலையே. 3

வாலை தியானம் வடிவுபஞ் சாக்கரம்
வாலை தியானம் வடிவுள்ள மூலம்
வாலை தியானம் மகாசித்து மாடிடும்
வாலை தியானம் வந்த எழுத்தே. 4

எழுத்துடன் சக்கரம் இயம்பவே கேட்டிடு
அழுத்திய விந்து அதன்மேல் திரிகோணம்
அழுத்தி அதன்மேல் வளமாய் அறுகோணம்
அழுத்திய வட்டம் அதிலெட்டு இதழிடே. 5

இட்டிடு மூன்று வரையும்பின் வாசலும்
ஒட்டிடு சக்கரம் உறவுமுறை கேளு
வெட்டிடும் ஏமப் பலகையில் ஏயரை
ஒட்டு முறையிது உறவின்னங் கேட்டிடே. 6

கேட்டிடு தாம்பூரங் கெடியதக டாகும்
வாட்டிய பசுபம் வரையவே சக்கரம்
நீட்டிய விந்துவில் நிலைமாயா பூசமும்
ஓட்டிடு அங்கங்கே உறவாய் வரைந்திடே. 7

வரைந்திடும் மந்திரம் வகையறி வார்இலை
உரைந்திடு அய்யுங் கிலிசவ்வென்று ஓதிடும்
பரைந்திடு காமியம் பாளிப்பாள் மாமியும்
கரந்திட்ட மேனி கடுவாலை சித்தியே. 8

சித்திக்கு முன்னம் சேர்ந்த குணங் கேளு
அத்திக்கு ஆஆ பதினா றெழுத்துடன்
ஒத்திக்கக் கூட்டி உருமந் திரத்துடன்
சித்திக்கு இதைவிட்டால் தேசம்பொய் யாகுமே. 9

பொய்யாகும் மந்திரம் புகழ்சித்தி காரணம்
மெய்யாம் உடலும் உயிரெழுத்தும் சேரும்
கையாரக் கண்டது காரண மெத்துண்டு
ஐயாகேள் மூலம் அறியாது உலகமே. 10

அறியா நியாசம் ஆறுண்டு சொல்லக்கேள்
குறியாம் சடங்க நியாசமது ஒன் றுண்டு
மறியாச் செகம்புகழ் மாதுரு கரநியாசம்
வெறியாமல் குச்சுடர் வேதம் உரைத்ததே. 11

உரைத்திடுங் காமகளை நியாசமுன் னிட்டு
வரைத்திடுங் குங்கும நியாசம் அதின் உள்ளே
கரைத்திடும் ரோகணி நியாசம் அதின் பின்னே
உரைத்திடு மந்திர நியாசம் அறிந்திடே. 12

அறிந்திடு மூலர் அங்அங்அங் கென்று
பிறிந்திடும் மந்திரம் பேசா தெழுத்துடன்
அறிந்திடும் நூத்தெட்டு வைத்தே செபித்திடு
உறிந்திடு சடங்க நியாச முடியவே. 13

முடியவே ரேசக பூரகமுன் னிட்டு
அடியவே கும்பகம் அப்பா எழுத்துடன்
அடிமுடி வைத்து அமைக்கவல் லார்க்குப்
படிய முதுவே பரலோக சித்தரே. 14

சித்திக்கு இன்னங்கேள் சேர்ந்தமா துரு நியாசம்
ஒத்திசுவா திட்டானம் ஓங்கிய மந்திரம்
பத்தியாய் நங்நங்நங் பரவிச் செபஞ்செய
முத்திக்கு வித்து முன்னின்று பேசுமே. 15

பேசும் எழுத்துடன் பேசா எழுத்தும்
ஆசை எழுத்துடன் அந்தத்து எழுத்தும்
காசும் எழுத்துடன் கண்டது கும்பகம்
நேசித்து இருக்க நினைத்தது சித்தியே. 16

நினைக்கவே இன்னம் லகுகூடா நியாசங்கேள்
முனைக்கவே மந்திரம் முனைமங்மங் மங்கென்று
நினைக்கவே அந்தம் நேராய் வெளிப்படும்
கனைக்கவே காமியம் கைகண்ட முத்தியே. 17

முத்திக்கும் அங்கே மூர்க்கமாம் நியாசத்தை
பத்திக்குங் காமகளை பலநியாச மந்திரம்
ஒத்திக்கும் சிங்கென்று உள்ளே உருவேறில்
பத்திக்கு நூற்றெட்டு பஞ்சிபம் ஓதிட, 18

ஓதிடச் சித்தி ஒரு கோடி வேதையாம்
மாதிட ஞானம் வழியேறி மீண்டிடும்
காதிடச் சித்தியாம் கழன்றோடுங் கன்மமும்
மாதிட்ட மாக வளர்ந்தது யோகமே. 19

யோகமாங் காங்கு மந்திர நியா சத்தை
பாகமாய்க் கேளுங்கோ பதையாதே மாந்தரே
வ்ாகமாய் வங்கென்று வைத்துச் செபஞ்செய்ய
ஏகமாய்த் தானே எங்கும்பிர காசமே. 20

பிரகாசம் ஒன்றல்ல பேசும் எழுத்தது
மறவாமல் வங்கென்று வாசியிற் கூட்டிடு
இறவா ஒருநாளும் யேகாந்த யோகமாம்
திறமாய்ச் செபஞ்செய்ய சேர்மூன்றும் சித்தியே. 21

சித்திக்கு இதைவிட்டால் சேரவுங் கிட்டாது
பத்திக்கு இதைவிட்டாற் பராபரை முன்னிற்காள்
வெத்திக்கு இதைவிட்டால் வேதாந்தங் கெட்டுது
ஒத்திக்கு இதைவிட்டால் ஒன்றுக்கும் எட்டாதே. 22

எட்டாத ரோகணி நியாசமா மந்திரம்
முட்டாதே அங்கென்று முனைமூக்கைப் பார்த்திடு
அட்டமா சித்தி அடங்கலும் ஈவாள்
ஒட்டாத யோகம் ஒருநாழி கைக்குமே. 23

கைக்குமே நாதங் கலந்தோடி உன்னுளே
தைக்குமே மேலே சமத்தற்கு மேலேறும்
மொய்க்குமே சித்தி முன்னேயார் என்றிடும்
அய்க்குமே ஆசான் அருளை அறிந்திடே. 24

அறிந்திடு வத்துக்கு அப்பா நியாசங்கேள்
பிறிந்திடு ஓங்காரம் பேரான மூலத்தில்
செறிந்திட அகார உகார மகாரமும்
பிரிந்திட மண்டலம் பாங்குசொல் வோமே. 25

சொல்வது அக்கினி மண்டலமுன் னிட்டு
வெல்வது சுக்கிர சாப நமாவென்று
கல்வது கிலியும் கருமொசி அவ்வது
வெல்வது உம்படு சிவாவென்று ஓதே. 26

சுவாகா எனவே தொழுதிடு வத்துவை
அவாகா மாயி அறைந்திடு மந்திரம்
நிவாகா காவென்று நிரைந்திடு பாத்திரம்
உவாகா நாவென்று ஓங்கிநீ செய்திடே. 27

செய்திடு பாத்திரம் சேர்ந்திடு மந்திரம்
கைதிடச் சொல்லக்கேள் கசிந்தஞ்சு பாத்திரம்
அய்திடத் தானே அச்சதை மேற்போட்டுக்
கொய்திட மந்திரங் கொமட்டிநீ பார்த்திடே. 28

பார்திடு மன்மன் பட்சம்பல காரம்
கோர்த்திடு அண்டம் குக்குட மேசமும்
சாத்திடு புட்பம் சந்தனங் குங்குமம்
ஏத்திடு தீபம் ஏகச்சிறப்பே. 29

சிறப்பான சத்திக்குச் சீரா பரணமும்
மறப்பான புட்பமும் வரிசையும் சந்தனம்
நிறம்பாகக் குங்குமம் நேரான தாபமும்
உறப்பாய்ச் சூடமும் கொடுத்திடு பூசையே. 30

பூசை கடந்து புகட்டிடு பாத்திரம்
ஆசையுடனே ஐயுங்கிலிவா வென்று
ஓசை யுடனே உறவுகிலி யென்று
பாசிய சவ்வும் பரிச்சென்று ஈய்ந்திடே. 31

ஈய்ந்திடு பானம் உருஞ்சச் சடாதாரம்
வாய்ந்திடப் பூரிக்கில் மனோமணிக்கே என்றும்
சாய்ந்திடப் புத்தியும் தவறாமல் மேல்நோக்கும்
ஆய்ந்திட்ட மந்திரம் அப்பா செபஞ்செய்யே. 32

செபிக்கிலோர் மந்திரம் சிவவசி வாவென்று
அபிக்கிலோர் மந்திரம் அன்னஞ் செரிப்பிக்கக்
கபிக்கிலோர் கையால் கண்டநவ முத்திரை
நபிக்கிலோர் வயிரவன் நற்தாளைப் பூசிடே. 33

பூசிநீ ஈசானம் புகன்ற வயிரவன்
நேசிநீ அட்ட நிறைந்திடு பாலகர்
காசினி பஞ்ச கர்த்தர் வழியோடே
வாசிநீ வைத்து மறவாமற் பூசியே. 34

பூசிக்க இன்னம் புகன்ற முறைகேள்
வாசிக்க வாவென்று மைந்தனே மூலத்தில்
நாசிக்கு நேரே கண்ட தலமது
ஆசைக்குள் வைத்து அருள்மூலம் பார்த்திடே. 35

பார்த்திட முத்திரை பஞ்சவழி கேளு
கோத்திடு அண்டங் குலாவிய முத்திய
ஏத்திடு திரிகோண மெழுந்திடும் விந்துவால்
மாத்திடறு கோண வகையோனி முத்திரை. 36

முத்திரை தன்னால் முடிந்த பிறகுகேள்
உத்திய தீபம் உசர அடக்கிடு
பத்தில் நடனம் பதஞ்சலி பாத்தில்
தித்தியே ஆடுஞ் சிதம்பரங் கண்டிடே. 37

கண்டு சிதம்பரங் காணாச் சிதம்பரம்
கொண்டு சிதம்பரங் கொள்ளாச் சிதம்பரம்
ஒண்டுஞ் சிதம்பரம் யோக சிதம்பரம்
அண்டஞ் சிதம்பரம் ஆனந்த மானதே. 38

ஆனந்தி ஆயி அருளாயி அம்பரை
தானந்த மாயி சரணஞ் சரணம்
ஊனந்த மாயி உடலாய் என்னாயி
ஆனந்த மான பரமேட்டி மாயியே. 39

மாயி பிறந்த வகைஅறி வாரிலை
மாயி பிறந்த மார்க்கம் அறிகிலார்
மாயி நடந்த வழிதனைக் கண்டிலார்
மாயி இருந்த வகைபார்த்தால் முத்தியே. 40

முத்தி பிறந்தது முப்பாழ் வெளியிலே
சத்தி பிறந்தது சற்குரு பாதத்தில்
பத்தி பிறந்தது பராபர மானதில்
சித்தி பிறந்தது சிறுவாலை முத்தியே. 41.

**திருமூலர் பூசாவிதி**
**முற்றிற்று**

குருவே துணை

தெட்சணாமூர்த்தி திருவாய் மலர்ந்தருளிய

# ஞான பூசா விதி 10

கேளப்பா புலத்தியனே ரசத்தில் போதும்
கெடிபடா சிவனைப்போல் வார்த்துக் கொண்டு
தாளப்பா பூசைசெய்யக் கைலாச போதம்
தப்பாமற் சதாகோடி காலமாகும்
தேளப்பா கொட்டினதோர் விடத்தைப்போல
தேடரிது ரசத்தினுட குளிகை யோகம்
வாளப்பா புலத்தியனே நாவின் உள்ளே
வாயடக்கஞ் செய்துகொள்ள யோகமாச்சே. 1

ஆச்சப்பா புலத்தியனே சூதங் கட்ட
ஆராலும் முடியாது அறிவான் சித்தன்
பேச்சப்பா அக்கினியிற் செயித்து தானால்
பேரண்டங் கிழிந்தாடும் வேதை யாகும்
நீச்சப்பா இதைக்கட்ட வகையைக் கேளு
நீதியெவர் களுங்கூட வரிதாம் அப்பா
ஏச்சப்பா இதனுடைய வர்மம் சொல்வேன்
எந்தனுக்குப் பரையீசன் இதைத் தந்தானே. 2

## ரசக்கட்டு

தானென்ற புலத்தியனே வகையைக் கேளு
தயங்காமற் சொல்லுகிறேன் வகைதானப்பா
கோனென்ற அழலாடி எனக்குச் சொன்னார்
குறிப்பாக மனந்தேறிக் கூறிச் சென்றேன்
ஏனென்றால் புலத்தியனே உனக்கு யானும்
இன்பமுடன் சொல்லிட்டேன் கருத்தானப்பா
ஊனென்ற சூதமொன்று வெள்ளை ஒன்று
உத்தாமணிச் சாறுதனால் இதனை ஆட்டே 3

ஆட்டப்பா கருவினுட மத்தஞ் சாத்தில்
அது இரண்டு கடிகைபட ஆட்டிக் கொண்டு
நீட்டப்பா ரவியினுட கிண்ணி தானும்
நிலைக்கவே நாலுவிரல் அங்குலத்தால்
மூட்டப்பா ஒட்டிவிட்டுச் சீலை செய்து
மூதண்டக் குக்குடத்திற் புடத்தைப் போடு
கோட்டப்பா மேலேறிப் பதத்தைக் காணும்
குமுறவழி காலமிட்டு ஆக்கிக் கொள்ளே. 4

கொள்ளப்பா மணியதுபோல் உருகி ஆடும்
குருமுகம்போல் ஒளி உமிழுங் கறுப்பதாகும்
மெள்ளப்பா அதினுடைய வேதை மார்க்கம்
வெட்ட்வெளி குருடனுக்கு மெய்க்கோலப்பா
உள்ளப்பா கொண்டுசீவ னங்கள் செய்வர்
உலகத்துள் நரகத்தே கிடந்து மாய்வர்
தள்ளப்பா இதுவல்ல காய சித்தி
தாண்டவமே புரிவதற்குப் பூசை பண்ணே. 5

பண்ணப்பா ஓராண்டு செய்தாயானால்
பராபரமே உனக்குவந்து ஏவல்செய்யும்
விண்ணப்பா ஒருவருக்கும் மணிசொல்லாதே
வேதாந்த நரகத்தே கிடந்து மாய்வார்
கண்ணப்பா உனக்கேத்த பிள்ளையானால்
கைமுறையாய்ச் செய்து அவன் குணத்தைப் பாரு
ஒண்ணப்பா கருவைத்தான் ஒளிக்கவில்லை
உற்றுணர்ந்து மனந்தேறிப் பாரு பாரே. 6

பாரப்பா இதற்குக்கை லாசமுண்டாம்
பாரார்கள் சித்தரிதை மறைத்துப் போட்டார்
ஆரப்பா எனைப்போலே திறந்து சொல்வார்
ஆச்சரியம் இதனுடைய வேகமப்பா
ஓரப்பா இதனாலே யோகசித்தி
உத்தமனே சிவபூசை பண்ண நன்று
காரப்பா இதுதனக்குப் பூசைசெய்துக்
கருவாக அர்ச்சனைசெய் பதங்கஞ் செய்யே. 7

செய்யப்பா இப்படியே பூசைகொண்டு
திறமாகச் செய்யவல்லோ பலத்தைக் கேளு
மெய்யப்பா அவனுடைய பிதுர்க்களெல்லாம்
மிகக்கோடி நரசென்ம மல்லவல்ல
பொய்யப்பா சொல்லவில்லை தேர்ந்து பாரு
புலத்தியனே உன்றனக்குக் கருவைச் சொன்னேன்
வையப்பா பூசையிலே என்னை வைத்து
மவுனமாய்ச் சிவனைவைத்து நோக்கு நீயே. 8

நீயென்றும் நானென்றும் வேறுமில்லை
நிராகாரம் போலஉந்த னுக்குத்தோணும்
நாயென்றும் சென்மத்தால் தாண்டி ஏத்தும்
நற்சென்மம் அல்லவப்பா சித்தன் சித்தன்
பாயென்றார் கூடுவிட்டுக் கூடுகொள்ளும்
பதறாமல் இருந்துகொள்ளக் கெவுனம் சாடும்
நோயென்ற வறுமையெல்லாம் அகன்று போகும்
நுண்ணிமையாய்ச் சிவலிங்க போதந்தானே. 9

தானென்ற குளிகைசெப மாலை செய்து
தாக்கப்பா பதினாறு நடுத்தானொன்று
மானென்ற மதியாளை வட்டஞ் செய்ய
மகம்மேரு போலவுமே ஒளியுங் காணும்
கோனென்ற அவள்ரூபஞ் சொல்லப் போகா
கோடிரவி ரூபமவள் சொல்லக் கேளு
தேனென்ற மனோன்மணியாள் சிவனுமங்கே
சிந்தித்த போதமெல்லாம் தெளியுந் தானே. 10

**தெட்சணாமூர்த்தி ஞான பூஜாவிதி 10**
**முற்றிற்று**

குருவே துணை

## தேரையர் திருவாய் மலர்ந்தருளிய

# சிவ பூசா விதி

அருவாகி உருவாகி அகிலமாகி
ஆதிமூ லமதாகி அங்கு இங்காகித்
திருவாகிச் சுடர்மணியின் ஒளிவதாகித்
திகழ்கின்ற ஐம்பூதத் தோற்றமாக்கிக்
கருவாகி வித்தாகி வத்துமாகிக்
களங்கமில்லா தொளிர்கின்ற தீபமாகிக்
குருவாகி மெய்ஞ்ஞானப் போதனாகிக்
குலவுகின்ற சோதிபதங் காப்பதாமே. 1

ஆமப்பா மாயைபொய் கோபந் தள்ளு
அறிவில்லா மாந்தருடன் கூடிடாதே
தாமப்பா ஞானபூ ரணத்தைக் கண்டு
தற்பரையைப் பூசித்துப் பானஞ் செய்து
வாமப்பா ஆறுவரை யூதிசென்று
வளமான பொருளறிந்தே அதனிற் கூடு
நாமப்பா மூன்றெழுத்தின் குறியைக் கேளு
நங்கென்ன வாசியுள் அங்கும் பாரே. 2

பாரப்பா சிங்கென்ன சூட்சம் காணும்
　　பண்பாக மங்கென்ன யோகம் சித்தி
தேரப்பா மகாரத்தை வாங்கலாகும்
　　தெளிவான சிகாரத்தை விடுதலாகும்
நேரப்பா இங்கிதுரெண் டுக்குமாகும்
　　நிலையான தீட்சைஇது மவுன மாலை
சேரப்பா யாவருக்குஞ் சித்தியாகும்
　　தெரிந்தவர்க்குச் சாபமற்றுப் போகும் என்னே. 3

என்ன எழுத் தொன்றுமூன்று ஆன ஐந்தும்
　　இயல்முப்பா னீர்தீட்சை சர்வ சித்தி
நன்னமாய் மோகனதம் பனமும் ஈசன்
　　நாரணியின் பாதமலர் இதனுள்ளென்று
தன்மயமாய்க் காணாமல் கோடா கோடி
　　சற்குருவை அறிந்திடாது இறந்தார் அப்பா
அன்னவர்போல் ஆகாமல் உய்வதற்கு
　　அருளான வழியொன்று புகலக் கேளே. 4

கேளப்பா மகாரமங்கு மதுவில் வாங்கிக்
　　கெடியாக அதட்டித்தன் னுள்ளே வாங்கு
நாளப்பா சகாரசுழி சங்கென்றூணு
　　நாடியே புருவம்பார் பசுமை காணும்
வாளப்பா மெய்யாகும் வித்தையெல்லாம்
　　வளமாயோர் இதழுக்குள் அமுதங் கண்டு
நீளப்பா வாசிதனைப் பற்றிக்கொண்டு
　　நிலையான மூவெழுத்தைக் காண நன்றே. 5

நன்றான பேரின்ப வாசி சேர்க்கும்
நாடிகின்ற இருள்அகன்று சோதி காணும்
தன்மையுடன் நமசிவய தம்பனந்தான்
தானான யவசிமந வசியமாகும்
முன்னின்ற சிவயநம உச்சாடந்தான்
முயங்கிநீ வசியநம அழைப்பதாகும்
ஒன்றான நயவிசம மோகனந்தான்
உருவுவய நமசியும்வித் வேடமாமே. 6

வேடமெனும் மநயவசி பேதனந்தான்
வினையமுடன் மசிவயா மாரணந்தான்
நாடவே அட்டகர்மம் ஆடுதற்கு
நலமாக இவ் எழுத்தைத் தியானஞ் செய்யத்
தேடவே மூன்றெழுத்தைக் கூட்டி ஓதத்
திடமாக எட்டெட்டும் சித்தியாகும்
சூடவே கருமம் ஒன்றுக் குருலெட்சந்தான்
தீரமுடன் செய்திடவே சித்தி உண்டே. 7

உண்டாகும் ஓமென்ற அட்சரத்திற்கு
ஒளிவுடனே உமைபாதம் யோகங் காணுந்
தொண்டுசெயப் பிராணாயஞ் சித்தியாகும்
சுத்தஎழுத் தானன்ப மதியும் காணும்
மண்டலத்தில் பரவெளியின் அறிவிற் சேர்க்கும்
மைந்தாசி மென்றதற்குத் தெளிவு காணும்
பண்டான அட்சரங்கள் சிங்கு வங்கு
பண்பான வங்கென்னல் வகாரந்தானே. 8

தானான வகாரமல்லோ அழைப்பு வித்தை
சகலமுமே கைவசம்யங் காயி பீடம்
கோனான பதங்காணும் அறிவுண்டாகும்
கூறுகிறேன் றீங்கென்னு மிடத்தைக் கண்டால்
ஊனான விட்டகுறைக்கு அமுதம் உண்ணு
வல்லதொரு ஞானியென விருது வாங்கே. 9

வாங்கப்பா மாயையிலே சேர்ந்திடாதே
வாகாய வெளியறிந்தால் ஞானம் வாய்க்கும்
சோங்கான வெளிக்குள்ளே இருந்த மூலி
சூட்சமுடன் வேகாமற் தயிலம் வாங்கி
பாங்காகக் காசிடைதான் புசித்தாயானால்
பாலகனே நரைதிரையும் அண்டிடாது
ஓங்காரப் பொருளதனைக் கண்டு கொள்வாய்
உத்தமனென்றே சித்தர் அழைப்பார் பாரே. 10

பாரப்பா மெய்க்கண்ணால் மெய்யைக் காண
பராபரத்தின் மெய்ஞ்ஞானந் தோணும் தோணும்
சீரப்பா இன்னமொன்று வட்டம் போடு
தேவியுட முக்கோணம் நடுவே போடு
வீரப்பா சூலமிட்டு அதற்குள்ளாக
விளங்குகின்ற பிரணவ ஓம் எனவே நாட்டிக்
காரப்பா வடமுகமாய் இருந்துகொண்டு
கருத்தான யுத்திதர வேணும் என்னே. 11

என்னவே வலக்கரத்தில் கடத்தை வாங்கி
இயல்பான மோகனத்தின் சாபந் தீர்ந்து
நன்னமாய்த் தாய்பதத்தில் மலர்கள் தூவி
நாடியே அன்னமொடு அண்டஞ் சுத்தி
இன்னம்பல் பலகார வகையும் வைத்து
இயல்பாகப் பூசிப்பாய் தீபங் காட்டிச்
சின்மயமாஞ் சிற்பரையைக் கண்டாயானால்
சித்திபெற்று முத்தனென வாழ்வாய் பாரே. 12

பாரப்பா சிதம்பரத்தை இருபத்தைந்தால்
பரிவாகச் சிறுவீடாய்ப் பதிந்து கொண்டு
நேரப்பா வசியமென்ற வகாரத்தாலே
நிலையாக முதல்வரையில் வரிசை கொண்டு
கோரப்பா மறுவரையில் அகாரத்தாலே
கூட்டியல்லோ பதிந்து கொண்டு குணந்தான் பாரு
மூரப்பா மூவரையில் நகாரத்தாலே
முடிவாகப் பதிந்துகொண்டு முயற்சி பாரே. 13

பாரப்பா நால்வரையில் மகாரத்தாலே
பரிவாகப் பதிந்து கொண்டு பாரு பாரு
ஆரப்பா ஐவரையில் சிகாரத்தாலே
அப்பனே பதிந்துகொண்டு ஆட்டம் பாரு
நேரப்பா மேலரைஓம் ஓங்கார பீசம்
நிலையான றீங்காரம் ஐங்காரந்தான்
தேரப்பா இப்படியே பதிந்துகொண்டால்
தெளிவான சிதம்பரந்தான் சித்தியாமே. 14

சித்தியாம் வாலையுட நிட்டைவேணும்
சிதம்பரந்தான் அப்பவல்லோ வசியமாகும்
பத்தியாம் பரத்தினுட சோதி காணும்
பரிவான சிதம்பரந்தான் பழக்கமாகும்.
முத்தியாம் மோட்சவித்தின் குறிதான் காணும்
மோகனந்தான் கைவசியம் ஆகும் பாரு
சித்தியாஞ் சிவசக்தி சக்கரந்தான்
சகலசித்தும் ஆடுமடா சதுராய்ப் பாரே. 15

பார்க்கவென்றால் சும்மாதான் பார்க்கலாமோ
பாங்கான குருவின்னுக் கிரகம்வேணும்
தேர்க்கவென்றால் குருவுக்குக் கேட்டதெல்லாம்
தெளிவாக அவர்மனத்தைத் திருப்தி செய்து
ஊர்க்கவென்றால் ஒவ்வொன்றால்வாங்கிக் கொள்ளு
உத்தமனே ஒன்றுக்கு வருடம் பாரு
கோர்க்கவென்றால் அப்படியே கோர்க்க வேணும்
கோடிதனம் ஈந்தாலும் வாராதப்பா. 16

வாராது சிதம்பரத்தின் வகையைக் கேளு
வரிசையாய் அட்டவித்தை ஆடவென்றால்
தோராது சிதம்பரந்தான் தோணாது அப்பா
துரிதத்தைக் கடந்துநின்றால் தூக்கி ஆடும்
ஏராது சிதம்பரத்தை ஈந்தபேரை
எளிதாக நினைத்துவிட்டால் ஏறாதப்பா
பாராது சிதம்பரந்தான் பாராதப்பா
பாங்காக வந்தவித்தை எல்லாம்போமே. 17

போகுமடா அட்டாங்க யோகம் போகும்
பெரியபுகழ் வாசியுட யோகம் போகும்
வேகமடா குருவினுட வேகம் மெத்த
விதிமுறையாய்ச் சொன்னமுறை மறந்திட்டாக்கால்
காகமடா போலாகப் பறப்பார் பாரும்
காணாத பருந்ததுபோல் ஆவார் பாரும்
நாகமடா சிதம்பரந்தான் ஆகம் அப்பா
நல்நாகம் போலேயடா பழக்கம் பாரே. 18

பாரப்பா சிதம்பரத்தை எண்பத்தொன்றால்
பரிவாக நடுவீட்டில் வகாரம் மாட்டு
நேரப்பா வீடதுதான் எட்டுக் குள்ளே
நிலையான அகாரத்தை மாட்டு மாட்டு
வாரப்பா பதினாறு வீட்டுக்குள்ளே
வரிசையுடன் நகாரத்தை மாட்டிக் கொள்ளு
ஓரப்பா இருபத்து நாலு வீட்டில்
உத்தனே மகாரத்தை மாட்டிக் கொள்ளே. 19

கொள்ளப்பா முப்பத்தி ரண்டு வீட்டிற்
குறிப்பான சிகாரத்தை மாட்டிக் கொண்டு
நள்ளப்பா நடுவீட்டில் ஓங்காரந்தான்
நலமான ரீங்காரம் ஐங்காரந்தான்
விள்ளப்பா முப்பத்திரண்டு வீட்டில்
வெளியாகச் சூலமது இட்டுக் கொள்ளு
அள்ளப்பா அப்படியே ஆடுந் தோறும்
அப்பனே சிதம்பரந்தான் ஆடும் பாரே. 20

ஆடுமடா மோகனத்தை அறியக் கேளு
அப்பனே சிதம்பரத்தை இருபத்தைந்தால்
நாடுமடா முதல்வரையில் மகாரம் நாட்டு
நலமான வீடதுதான் மூன்றுக் குள்ளே
ஓடுமடா ஓங்காரம் ரீங்காரந்தான்
உத்தமனே ஐங்காரம் உயரப் போடு
வாடுமடா மறுவரையில் சிகாரம் மாட்டு
வரியான மூன்றுவரை வகாரம் மாட்டே 21

மாட்டப்பா வரைதானும் நாலுக் குள்ளே
வரிசையுடன் யகாரத்தை மாட்டிப் போடு
ஆட்டப்பா வரைதானும் அஞ்சுக் குள்ளே
அப்பனே நகாரத்தை மாட்டிக் கொண்டு
வீட்டப்பா முதல்வரையைத் தொட்டுக் கொண்டு
வெளியெல்லாஞ் சூலத்தை மாட்டிப் போடு
நாட்டப்பா உன்மனத்தைச் சக்ரத்துள்ளே
நலமாகப் பூரணத்தை நாட்டிப் பாரே. 22

பாரப்பா சிதம்பரத்தை எண்பத்தொன்றில்
பரிவான மோகனத்தைப் பார்க்கவென்றால்
நேரப்பா நடுவீட்டில் மகாரம் மாட்டு
நிலையான வீடதுதான் எட்டுக் குள்ளே
சீரப்பா சிகாரத்தை மாட்டிக்கொண்டு
சிறப்பான சோடசத்தில் வகாரம் மாட்டு
ஈரப்பா இருபத்து நாலுக் குள்ளே
இருப்பான அகாரத்தை மாட்டு மாட்டே. 23

மாட்டப்பா முப்பத்தி ரண்டுக்குள்ளே
மனம் வரவே நகாரத்தை மாற்றிப் போடு
வீட்டப்பா முப்பத்தி ரண்டுக் குள்ளே
வெளியாகச் சூலத்தை மாட்டிக் கொண்டு
நாட்டப்பா வரைதானும் நால்தான் போடு
நலமாக வாசலது நால்தான் காணும்
ஓட்டப்பா வரைக்குள்ளே சிருங்காரமிட்டு
உத்தமனே மோகனத்தின் உறுதி பாரே. 24

பாரப்பா மோகனத்தைப் பார்த்தபேர்கள்
பரிவான ரிடிகளிலே கோடா கோடி
நேரப்பா சித்தரிலே அனந்தம் கோடி
நிலையான ஞானிகளில் நிலைத்தபேர்கள்
ஊரப்பா அனந்தமுண்டு சொல்வேன் கேளு
உத்தமனே மோகனத்தின் பெருமை மெத்த
ஆரப்பா அறிந்து நன்றாய்ச் செய்தபேர்க்கு
அப்பனே மோகனந்தான் சித்தியாமே. 25

சித்தியாம் சித்தினுட வாலை கேளு
சிதம்பரத்தில் மோகனமும் வசியம் வேணும்
உத்தியாம் அகாரமது உள்ளே போடு
உத்தமனே ரீங்காரம் வளையம் போடு
பத்தியாய்க் கோணமது மூன்றேபோடு
பாங்கான கோணத்தில் சூலம்போடு
சத்தியா இடைப்பக்கம் ஐங்காரந்தான்
சதுரான சிரசில்கிலீங் காரந்தானே. 26

தானான வலப்பக்கஞ் சவுக்காரந்தான்
    தாக்கும் அதன் பேரில் பிரணவத்தைப் போடு
வானான வலப்புறம்வங் கென்று வாங்கு
    வகையிடது பக்கம் நங் கென்று மாட்டு
சீனான சிங்கென்று பக்கம் பூட்டு
    சிதையாமல் அதினெதிரே அங்கு என்று ஏத்து
நானான வாசலது நாலு காணும்
    நலமாக அதற்குள்ளே சூலம்போடே. 27

போடப்பா சூலமது எட்டுப் போடு
    பெரிதான சந்ததுதான் வைக்க வேண்டாம்
வேடப்பா சிதம்பரமும் சித்து வாலை
    வெளியில்லாச் சிவயோகம் காணவென்றால்
ஆடப்பா அறிந்தவரைக் கண்டு வாங்கு
    அப்பனே இவைகளைத்தான் வாங்கிக் கொண்டு
ஏடப்பா இப்படியே ஏற்றிவா நீ
    எளிதல்ல சிவயோகங் காணும் பாரே. 28

பாரப்பா மயேசுரன்தன் பூசை கேளு
    பரிவான தேவியைத்தான் நிறுத்திக் கொண்டு
நேரப்பா நால்வரைத்தான் காவல் வைத்து
    நிலையாக வத்துவுக்குஞ் சுத்திக்கப்பா
ஆரப்பா சாபமது இட்டதென்றால்
    அப்பனே அடவாகச் சொல்வேன் கேளு
ஏரப்பா என்னுடைய சாபமொன்று
    இயலான மகேசருட சாபம் ஒன்றே. 29

ஒன்றான சுக்கிரன்தன் சாபம் ஒன்று
    உத்தமனே நவசித்தர் சாபம் ஒன்று
அன்றான ஐவருட சாபங் கேளு
    அப்பனே ஐவரிலே பிரம சாபம்
நன்றான விட்ணுவிட சாபம் ஒன்று
    நலமான உருத்திரன்தன் சாபம் ஒன்று
மன்றான மயேசுரன் சாபமொன்று
    வகையான சதாசிவத்தின் சாபம் பாரே. 30

பாரப்பா சாபத்தை நிவர்த்தி பண்ண
    பரிவான கொங்கணர்தன் காண்டம் மூன்று
நேரப்பா கடைக்காண்டம் அஞ்ஞூறுள்ளே
    நிலையான சாபத்தை நிவர்த்தி செய்தார்
ஆரப்பா அப்படியே ஒவ்வொன்றாக
    அப்பனே ஆறிரண்டு ஆயிரந்தான்
ஓரப்பா ஒன்பதுபேர் சாபந் தீர்க்க
    உத்தமனே எடுத்ததெல்லாஞ் சித்தியாமே. 31

ஆகுமடா லட்சத்தெண் ணாயிரந்தான்
    அப்பனே உருப்போடு அப்பாற் கேளு,
வேகமடா தற்பனம்பன் னாயிரந்தான்
    விதிமுறையாய் எண்ணூறு வகுத்திட்டேனே
ஓகுமடா ஆயிரத்தி யெண்ணூறப்பா
    உத்தமனே நூற்றெட்டுப் பிராமணர்க்கு
ஏகமடா இப்படியே ஈந்தாயாகில்
    எடுத்ததெல்லாஞ் சாம்பிராணி வாடை காணும். 32

காணவே வத்துவுக்கு வடமாலை சூட்டு
கருத்தாக இருகையில் எடுத்துக்கொண்டு
பூணவே ஒன்பதுபேர் சாபந் தீர்த்து
புத்தியுள்ள மைந்தனே புகலுவேன் கேள்
தோணவே குடத்தைவைத்து துவாத சாந்தம்
தூக்காகப் பார்த்துநன்றாய்த் துரியம் பார்த்து
வாணவே காலதுதான் மூணுபேரில்
வகையாக வைத்துவிட்டு வரிசை கேளே. 33

கேளப்பா சுத்திக்கு பூமாலை சூட்டு
கெடியாகப் பாத்திரந்தான் ஆறு வைத்துத்
தேளப்பா வத்துவது நிரம்ப விட்டுத்
தெளிவாக வாலையைத்தான் அர்ச்சித் தப்பா
நாளப்பா இப்படியே நாள்தோறுந்தான்
நலமாக மயேசுரத்தில் அழுந்துவாய்நீ
ஆளப்பா ஆதிசக்தி பீடங் காணும்
அப்பனே கும்பதிகம் வேண்டாம் பாரே. 34

பாரப்பா ஆதாரம் ஆறுண்டப்பா
பரிவான தேவதைதான் ஆறே உண்டு
நேரப்பா இதற்கதிகம் வேண்டாம் பாரு
நிலையாக ஐவரைத்தான் நிறுத்தலாகும்
மூரப்பா மூவரவர் ஆகும் பாரு
முன்பாக இருவரவர் சிவமும் சத்தி
ஓரப்பா ஒருவர்நின்று செய்தாராகில்
உத்தமனே பலனதிகம் ஒன்றுண்டாமே. 35

ஒன்றாகப் பாத்திரந்தான் ஆறு வாங்கு
உத்தமனே இருவர்நின்றால் தேவை இல்லை
நன்றாக இருவர்நின்றால் உத்தமமாகும்
நலமாக ஆறுக்குள் நயந்து பாரு
ஒன்றொன்றுக் குப்பாத்தி ரந்தான் மூன்று
உத்தமனே இடக்கையில் கொடுத்துவிட்டு
வன்றாக வலக்கையிற் சுத்தி ஈந்து
வகையாகச் சாபத்தை நிவர்த்தி பண்ணே. 36

பண்ணப்பா வாரமது கேளு கேளு
பரிவாஞ்சுக் கிரவாரம் சோம வாரம்
அண்ணப்பா அமாவாசை பருவந் தானும்
அப்பனே கிராணவுச்ச காலந் தன்னில்
நண்ணப்பா நவராத்திரி காலந் தன்னில்
நல்லகல சத்திலாவா கனமும் பண்ணு
ஒண்ணப்பா ஓமமது ஆயிரந்தான்
உத்தமனே செய்துநன்றாய் உறுதி பாரே. 37

பாரப்பா ஓமத்தின் சமர்த்தைக் கேளு
பரிவான தாமரையின் பூவின் தண்டு
நேரப்பா ஒருசாண்தான் வைத்து நன்றாய்
நிலையான நூல்களெல்லாஞ் சுற்றிக் கொண்டு
ஆரப்பா ஆயிரம் குதியும் பண்ண
அப்பனே பலன் அதிகங் கோடா கோடி
வேரப்பா நூலைத்தான் திரியாய்ச் செய்து
விளக்கிலிட்டு நெய்விட்டு வெளியாய்க் காணும். 38

காணுமடா சிதம்பரர்க்கு வில்வத்தாலே
காணவே ஆயிரத்து எட்டும் ஈயத்
தோணுமடா யோகம் அட் டாங்கந் தோன்றும்
துரிதத்தில் ஆத்தாள்தான் தெரிசிப்பாள் காண்.
பூணுமடா உன்மனத்தை அதிலே ஊணு
புகழான மோகனமும் வசியமாகும்
நாணுமடா புத்திரனுஞ் சம்பத்தாகும்
நலமாக லோகமெல்லாம் நாட்டமாமே. 39

நாட்டமாம் இங்குசிதம் பரந்தான் கோடி
நலமான வாலையடா கோடி பண்ணு
வாட்டமாம் வாலைக்கு வாலை பீசம்
வகையான சிதம்பரர்க்குச் சிவ பீசந்தான்
ஓட்டமாம் உருப்போட்டுக் கணக்கை எண்ணு
உத்தமனே கேட்டதெல்லாம் ஈவார் பாரு
ஆட்டமாம் ஆகாய சித்தர் வந்து
அப்பனே குளிகையது ஈவார் பாரே. 40

பாரப்பா சிவயோகம் பண்ணும்பேர்க்குப்
பரிவாக நித்திரைதான் வேண்டாம் அப்பா
நேரப்பா இரவில்நித் தரைதான் பண்ண
நிலையாகச் சூட்சமொன்று நிகழ்த்துவேன்கேள்
வாரப்பா வரிசையாய்க் கால்தான் நீட்டி
வகையாக நித்திரைதான் பண்ண வேண்டாம்
ஓரப்பா ஒருபக்க மாகச் சாய்ந்து
உத்தமனே மேற்கையை மேற்கொள்வாயே. 41

கொள்ளப்பா ஒன்றின்மேற் சாய்ந்து கொண்டு
குறிப்பாக நித்திரையும் செய்து நீங்க
அள்ளப்பா அட்டாங்க யோகம் பாரு
அப்பனே சிவயோகம் வாசி யோகம்
நள்ளப்பா பிராணாய மவுன யோகம்
நலமான மவுனத்தின் யோகம் பாரு
வள்ளப்பா வாசியது கீழ்நோக்காது
வகையாக மேல் நோக்கி ஏறும் பாரே. 42

ஏறுமடா சுவாசமது ஏறிப் பாயும்
இகபரமாய் அமுதமது சொரியும் பாரு
வாறுமடா வண்டில்போல் சுழன்று காணும்
வகையாக நித்திரைதான் வேண்டாம் அப்பா
தாறுமடா தமர்வாசல் திறந்ததானால்
தாக்கான தேவியவள் தெரிசிப்பாளே
ஆறுமடா ஆறுதல் அறியக் காணும்
அப்பனே தேவதைதான் ஆறுங் காணும். 43

காணுமடா அட்டாங்க யோகங் காணும்
கடிதான சிவயோகங் காணும் பாரு
பூணுமடா பிராணாயம் வாசி யோகம்
பெரிதான கவனத்தின் யோகங் காணும்
தோணுமடா மவுனத்தின் யோகங் காணும்
தூக்கான சிதம்பரத்தின் நடனங் காணும்
ஆணுமடா ஆதிசத்தி நடனங் காணும்
அப்பனே நித்திரையை அறிந்து பண்ணே. 44

பண்ணப்பா நவநாட்டுச் சித்தர் கேளு
பாங்கான உயரமடா மனைதானாகும்
துண்ணப்பா நூற்றிலொன்று தென்னை போலத்
தூக்கான நிற்பார்கள் திறத்தைக் கேளு
அண்ணப்பா அருணைநிறம் போலே பாரு
அப்பனே தங்கநிறம் போலே பாரு
பொண்ணப்பா பொற்சிலைபோல் கோடா கோடி
பெரிதான வச்ரமடா தேகம் பாரே. 45

பாரப்பா அவர்களுட பெருமைகேளு
பாங்காகச் சித்ததுதான் அதிகம் அப்பா
நேரப்பா அவர்கள் கண்ட யுகந்தான் கேளு
நிகழ்த்துகிறேன் கோடியுகங் கண்டபேர்கள்
ஆரப்பா அவர்களுட பெருமை கண்டோர்
அப்பனே கொங்கணர்தான் அறிவார் பாரு
ஏரப்பா எழுநூறு கோடிசித்தர்
இயலாக மலைதோறும் இருப்பார் பாரே. 46

இருப்பார்கள் ரவிகுளிகை வாயில் தாக்கி
இயலாக நாள்தோறும் வளர்வார் அப்பா
நெருப்பாகச் சோதியது காணும் பாரு
நிலையாகக் கண்டவர்க்குப்பயந்தான் தோன்றும்
மருப்பாக மலைதோறும் நிற்பார் பாரு
வகையான அமுதமது எந்நேரந்தான்
அரிப்பாகச் சொரிக்குமடா அவர்களுக்கு
அப்பனே அமுதமது பாயும் பாரே. 47

பாரப்பா திருமூலர் மடந்தான் அஞ்சு
　　பாங்கான தேவதையை உபதேசித்து
ஏரப்பா எழுநூறு ஆயிரந்தான்
　　இயல்பாக வருடமது உண்டாச்சப்பா
ஆரப்பா அவர்களுக்குக் குளிகை ஈந்தோர்
　　அப்பனே திருமூலர் பயந்தார் பாரு
பேரப்பா அவர்களுட கணக்கைக் கேளு
　　பெரிதான ஆயிரந்தான் கோடியாச்சே. 48

ஆச்சப்பா திருமூல வர்க்கம் மெத்த
　　அங்கங்கே மூலகுரு வர்க்கங் கோடி
நாச்சப்பா நடுமூலங் கண்டபேர்கள்
　　நலமாகச் சித்திக்கும் பாரு பாரு
வாச்சப்பா அவர்களுக்கு கணக்கோ இல்லை
　　வகையாக அவர்களுட அடையாளந்தான்
கோச்சப்பா கொஞ்சியென்ற சடைதான் ஒற்றைக்
　　குறியெல்லாம் மைந்தரைப்போம் இருப்பார் பாரே. 49

இருப்பார்கள் பாதுகையும் படிக மாலை
　　இடதுகையிற் பிரம்பொன்று இருக்கும் பாரு
வருப்பாக வலதுகையிற் தண்டு கோலும்
　　வகையான மாத்திரைக்கோல் புத்தகந்தான்
நெருப்பாக யோகத்தில் இருப்பார் பாரு
　　நிலையாக அட்டாங்கம் ஆடுவார்கள்
அருப்பாக அப்படியே கோடா கோடி
　　அப்பனே திருமூலர் வர்க்கம் பாரே. 50

பாரப்பா மாந்தரிலே சித்தராகப்
பாரிவாகச் சிவயோகி யாகவென்றால்
நேரப்பா ரிடிகள் ஆவராகவென்றால்
நிலையாக ஞானிகள்தாம் ஆகவென்றால்
ஆரப்பா கணபதியால் அயந்தான் கட்டு
அப்பனே அவர்களுக்குப் பூசை செய்ய
சீரப்பா பசுபதியால் அயந்தான் கட்டு
சிறப்பாகத் தருமத்தைச் செய்துவாயே 51

வருகையிலே நாள்தோறும் வளரும் பாரு
வகையான தர்மமது கோடியாகும்
பெருகையிலே கணபதியின் அருளினாலே
பெரியோர்கள் வந்துநன்றாய் உபதேசிப்பார்
அருகையிலே சிதம்பரமுஞ் சித்தி யாகும்
அப்பனே வாலையது சித்தியாகும்
உருகையிலே சிவயோகம் பிராணாயாமம்
உத்தமனே குளிகையது காணும் பாரே. 52

பாரப்பா ஒருகாலம் கல்லாம் அண்டம்
பரிவாக ஒருகாலம் மண்ணாம் அண்டம்
நேரப்பா ஒருகாலம் விருட்சம் ஆகும்
நிலையாகப் பரவெளியாய் நிற்கும் பாரு
ஊரப்பா ஒருகாலம் சலமாம் அண்டம்
உத்தமனே ஒருகாலந் தீயுமாகும்
வேரப்பா வொருகாலம் மனிதராவார்
வித்தகரே வித்ததுதான் ஆவார் பாரே. 53

பாரப்பா ஒருகாலம் அண்டங் கேளு
    பார்க்கையிலே தேவதைதான் ஆவார் பாரு
நேரப்பா ஒருகாலம் அண்டங் கேளு
    நிலையாக ராட்சதர்கள் நிகழ்த்துவார்கள்
ஊரப்பா ஒருகாலம் அண்டங் கேளு
    உத்தமனே புட்பமது ஆகும் பாரு
காரப்பா ஒருகாலம் அண்டங் கேளு
    காடதுதான் ஆகுமென்று காட்டினாரே. 54

வந்தார்தான் இப்படியே இருக்கிறேனே
    வகையாக எழுநூறு யுகந்தான் கோடி
பந்தாக அண்டமெல்லாம் ஆட்டுகிறார்கள்
    பாங்கான போதாதுதான் அசையும் என்று
கந்தாகக் காகத்தின் வடிவைப் போல
    காண்கவே பார்த்து நன்றாய் இருந்தேனப்பா
எந்தாக எந்தனுக்குக் கடிகை கேளு
    இகபரமாய்க் கடிகையொன்றே முக்காலாச்சே. 56

ஆச்சப்பா இப்படியே தாண்டச் சொன்னார்
    அப்படியே நாதாக்கள் அனந்தங் கோடி
வாச்சப்பா தேவிக்கு இந்த நாள்கள்
    வகையாகச் சிலம்பொலியின் ஆட்டமொன்று
ஏச்சப்பா என்றனுக்கு இந்த நாள்கள்
    இகபரமாய் வருடமது பத்துமாச்சு
மூச்சப்பா கொங்கணர்க்கு வருடம் நூறு
    மூவருக்கு வருடமடா ஐம்பதாமே. 57

ஆகுமடா சட்டைமுனி வருடங் கேளு
அப்பனே வருடமது ஐம்பதாச்சு
போகுமடா போகருக்கு அறுபதாச்சு
புகலும் அகப் பேய்சித்தர் ஐந்நூறப்பா
பாகுமடா பாம்பாட்டிச் சித்தர்க்கப்பா
பாங்கான வருடமது எழுநூறாச்சு
வேகமடா கருவூரார் நொண்டிக்கப்பா
வித்தகனே வருடமது எண்ணூறு ஆச்சே. 58

ஆச்சப்பா அழுகண்ணி சித்தர் கேளு
அப்பனே வருடமது ஆயிரந்தான்
பேச்சப்பா புலத்தியர்க்கு ஆயிரந்தான்
பெரிதான புண்ணாக்கு ஈசர்க்கு அப்பா
வாச்சப்பா வருடம்ஆயி ரத்தோடெட்டு
வகையான சொருபானந்தர் வருடங் கேளு
ஏச்சப்பா ஆயிரத்தின் எழுபதாகும்
இயல்பான மவுனருக்குக் கடிகை ஏழே. 59

ஏழப்பா இப்படியே எடுத்துச் சொன்னார்
இயலான புசுண்டருக்கு ஒன்றே முக்கால்
வாழப்பா அவரவர்க்கு உயர்ந்ததென்ன?
வகையாக மற்றவர்க்குத் தாழ்ந்ததென்ன?
காழப்பா கெவுனருக்குத் தாழ்ந்த தப்பா
கடிதான மவுனருக்குத் தாழ்ந்த தப்பா
பாழப்பா சமுசார வாழ்க்கையாலே
பாங்காக மனிதரெல்லா மாளுவாரே. 60

மாளுவார் இப்படியே கோடா கோடி
 மனிதருக்குஞ் சமுசார வாழ்க்கை மெத்த
ஆளுவார் பெண்மயக்க நாட்டத்தாலே
 அப்பனே வயதுமெத்தக் கொஞ்சமப்பா
நாளுவார் நாள்தோறும் அலைந்து நன்றாய்
 நரகத்துக் கேதுவாய் நாடிப் போறார்
தாளுவார் தவமெல்லா மட்டையாகத்
 தாக்கான சிவயோகங் காணார் பாரே. 61

பாரப்பா பிள்ளையது சித்தராகப்
 பரிவாக வாசியுடன் யோகங் காண
நேரப்பா அட்டாங்க யோகசிவயோகம்
 நிலையான பிராணாய் மவுன யோகம்
வாரப்பா வாலையுட நிட்டை செய்ய
 வகையாகச் சிதம்பரத்தின் பூசை செய்ய
சாரப்பா சன்னாசம் துறவதாகச்
 சதுராகப் பெற்றவர்க்குக் கேளுகேளே. 62

கேளப்பா தகப்பனுக்குந் தாய்தனக்கும்
 கெடியாகத் தாரமென்று வந்தவர்க்கும்
வாளப்பா பெண்ணென்ற பிறவி இல்லை
 வகையாக இருவருவருக்கும் புருட ரூபம்
ஆளப்பா தந்தைபிரா மணனும் ஆவன்
 அப்பனே அவனுக்கு மோட்சமுண்டு
நாளப்பா இவர்களுக்குக் கேளுகேளு
 நலமாக மோட்சமென்று நவின்றிட்டாரே. 63

நவின்றிட்டார் இப்படியே வந்தபேர்கள்
    நலமாக அடைந்தவர்கள் கோடா கோடி
விள்ளின்றிட்டார் இப்படியே ஆன சித்தர்
    விதம்விதமாய் வந்தவர்கள் விரித்துச் சொன்னேன்
கவின்றிட்டார் கவனத்தில் சித்தராகக்
    கண்டுவிட்டார் குளிகையெல்லாங் கண்டாரப்பா
அவின்றிட்டார் இப்படியே ரிடகளானோர்
    அப்பனே அனந்தமுண்டு அறிந்து பாரே. 64

பாரப்பா இராவணன்தான் ஒருநாள் கேளு
    பரிவாக வேதமது நாலுந் தூக்கி
நேரப்பா வேதமென்ற நாலையுந்தான்
    நிலையாகச் சீர்தூக்கிப் பார்க்கும்போது
ஆரப்பா ஆயிரத்தோடு எட்டுவேதம்
    அப்பனே சிக்கறுத்துக்கோர்த்து விட்டான்
ஊரப்பா ஊர்தோறும் பரவவில்லை
    உத்தமனே அப்பவல்லோ தெலுங்கு உண்டாச்சே. 65

ஆச்சப்பா தமிழினுட பெருமை கேளு
    அப்பனே அகத்தியன்தான் நின்றார் அப்பா
வாச்சப்பா வடுகருக்கும் ஆகும் பாரு
    வகையான பிராமணர்க்கும் ஆகும் பாரு
காச்சப்பா கன்னடியர்க் காகும் பாரு
    கலையான குச்சிலியர்க் காகும் பாரு
மாச்சப்பா மராட்டகருக் காகும் பாரு
    மறையான மிலேச்சருக் காகும் பாரே. 66

பாரப்பா அனைவருக்கும்வேணும் வேணும்
பாங்கான சத்திரியர்க்கு வேணும் வேணும்
நேரப்பா வைசியர்க்கு வேணும் வேணும்
நிலையான சூத்திரர்க்கு வேணும் வேணும்
தேரப்பா துலக்கருக்கு வேணும் வேணும்
தெளிவான கலிங்கருக்கு வேணும் வேணும்
ஏரப்பா எடுத்திருக்கும் அண்டத்தோர்க்கும்
இயலான தமிழது தான் வேணும் பாரே. 67

பாரப்பா அதலமென்றும் விதலமென்றும்
பரிவான நிதலமென்றும் ஏழுலோகம்
மேரப்பா மேலேழு லோகம் உண்டு
மெய்யான லோகமடா சத்யலோகம்
ஏரப்பா இப்படியே கூடி நின்றால்
இயலான அண்டமடா ஒன்றுமாகும்
ஆரப்பா ஆயிரத்து எட்டு அண்டம்
அப்பனே அவர்களுக்குந் தமிழேவேணும். 68

வேணுமடா சிதம்பரத்தைப் பார்க்கவென்றால்
விரிவான தமிழதுதான் வேணும் வேணும்
பூணுமடா வாலையைத்தான் பூணவென்றால்
புகழாகத் தமிழதுதான் வேணும்வேணும்
தோணுமடா சிவயோகம் வாசி யோகம்
தூக்கவென்றால் தமிழதுதான் வேணும் வேணும்
ஆணுமடா அனைவருக்கும் வேணும்வேணும்
அப்பனே அனைவருந்தான் அறிந்து பாரே. 69

பாரப்பா கிரேதயுகஞ் சித்தரப்பா
பல்மான பெருக்கினுட கணக்கைக் கேளு
நேரப்பா கோடியடா ரண்டு லட்சம்
நிலையான திரேதயுகம் லட்சங் கோடி
தூரப்பா துவாபரத்திற் கோடிகேளு
தூக்கான ஐம்பதென்ற ஆயிரந்தான்
காரப்பா கலியுகத்திற் கோடிகேளு
கணக்கு இருபத்தையாயி ரந்தான் பாரே. 70

பாரப்பா யுகந்தோறும் வாசி கேளு
பரிவாக இப்படியே பெருகும் பாரு
வேரப்பா சித்தரென்ற பேரே எங்கும்
விதவிதமாய்ச் சித்தருட பெருக்கம் மெத்த
நேரப்பா இப்படி ஆயிரந்தான்கோடி
நிலையான லட்சமடா கலியுமானால்
காரப்பா கணக்கெல்லாஞ் சரியே ஆச்சு
காணாத பரவெளியில் அடங்கும் பாரே. 71

அடங்குவார் சித்தரெல்லாம் மடங்கிப் போவார்
அப்பனே சோதியிலே கலப்பார் பாரு
கடங்குவார் கண்டுநன்றாய்க் களிகூர்வார்கள்
காணாத காட்சியெல்லாங் காணுவார்கள்
சடங்குவார் சிலம்பொலியின் சத்தங் காண்பார்
சாத்திரத்தை அறிந்துநன்றாய்ச் சத்தங் கேளு
ஒடுங்குவார் நடனசத்தி பாதந் தன்னில்
உத்தமனே ஒடுங்கிநன்றாய் உருகுவாரே. 72

உருகுவார் இப்படியே சித்தரப்பா
    உத்தமனே சித்தருட பெருமைகேளு
வருகுவார் உகந்தோறும் வளர்ந்து நிற்பார்
    வானென்ற அண்டத்தில் ஆடுவார்கள்
சருகுவார் சமாதியிலே அடங்கி நிற்பார்
    சரமான வாசியைத்தான் உட்கொள்வார்கள்
பெருகுவார் இப்படியே பெருகி நிற்பார்
    பேசாத மவுனத்தின் பெருமை பாரே. 73

பாரப்பா கணபதியின் நாட்டத்தாலும்
    பாங்கான சிதம்பரத்தின் ஆட்டத்தாலும்
நேரப்பா வாலையுட ஆட்டத்தாலும்
    நிலையான சிவயோக நிட்டையாலும்
வாரப்பா பிராணாயம் வாசி யோகம்
    வகையாக மவுனத்தின் யோகத்தாலும்
ஏரப்பா எடுத்ததெல்லாஞ் சித்தி பெற்று
    இருப்பார்கள் முத்தருந்தான் இந்நூல் பாரே. 74.

**தேரையர் சிவ பூசா வீதி**

**முற்றிற்று**

உ

குருவே துணை

புலிப்பாணி முனிவர் திருவாய் மலர்ந்தருளிய

# பூசா விதி 52

அத்திமுகன் தனையளித்த அரனே காப்பு
அகிலமெங்கும் நிறைந்து நின்ற அருளே காப்பு
முத்திதரும் வேதாந்த முதலே காப்பு
முப்புரத்தைத் தகித்தெரித்த பரனே காப்பு
சத்தியொரு பாகம்வைத்த அரசே காப்பு
சங்கரனே அம்பரனே ஞான மூர்த்தி
வெத்தியாம் சிதம்பரத்தின் பூசை மார்க்கம்
விளம்புகிறேன் கணேசனுட பாதம் காப்பே. 1

காப்பென்ற பிருதிவியில் ஒன்பதாகும்
கனமான அப்புதனிற் பதினொன்றாகும்
வாப்பென்ற தேய்வுதனில் நாலதாகும்
வளருகின்ற வாய்வுதனிற் பதினைந்தாகும்
தாப்பென்ற ஆகாயந் தனக்கு மைந்தா
தன்மையுடன் ஈராறு தானேயாகும்
நாப்பென்ற நடனமிடுஞ் சிதம்பரத்தின்
நல்லதொகை ஐம்பத்தொன் றாகத் தானே. 2

ஆகமாய்ப் பாடுமுன்னே நவசித்தாதி
அதன்பிறகு நவகோடி கோடா கோடி
பாகமாய் ஆச்சுதென்று பேசிக்கொண்டு
பரமசிவன் சாபமிட பாலித்தார்காண்
ஏகமாய்ச் சாபமிட்டோம் வாமத்துக்கு
இயல்பான அட்சரங்கள் தீட்சை மார்க்கம்
போகமாய் உயிர்களைத்தான் வாங்கிப் போட்டோம்
போட்டதனால் நூல்களெல்லாம் பொய்யாய்ப் போச்சே 3

போச்சுதென்று அலையாமல் சிவன் உத்தாரம்
பூட்டியே கேட்டுநான் இந்த நூலில்
ஆச்சுதென்று மறைத்ததெல்லாம் அருளிச் செய்தேன்
அரகரா சாபங்கள் நிவர்த்தி செய்தேன்
மூச்சுதென்று போகாமல் முறைதப்பாமல்
முன்னேதோ பின்னேதோ என்றெண்ணாமல்
காச்சுதென்று காச்சிவிட்டேன் உலகத்துள்ளே
கண்டவருக்கு இந்நூல்தான் சித்தி முத்தி. 4

முத்தியிது மோட்சமிது சித்தி கோடி
மூடருக்கும் வீணருக்குங் காட்டொணாது
சத்தியிது சம்புவிது ஒன்றாய்ச் சொன்னேன்
சகலநூற்கு எல்லாந்தான் குருநூல் அப்பா
எத்தினார் சாபத்தை நிவர்த்திசெய்து
ஏத்தினாற் தீட்சைதான் எளிதிலாகும்
புத்தியுடன் இந்நூல்தான் ஆர்க்குங் கிட்டாப்
புண்ணியருக்கு இதுகிட்டும் பொருளைப் பாரே. 5

பொருளான சாபங்கள் நிவர்த்தி செய்யப்
புகட்டினேன் சாபமது பொய்யாய்ப் போக
அருளான சிவயநம அம்-உம்-என்று
அப்பனே சிம்-கிலீம் ஶ்ரீம்-ஓம்-என்றே
மருளாமல் ரம்-பம்-யம் ஓம்-என்றேதான்
மாட்டுவாய் லட்சமுரு வேற்றினாக்கால்
இருளான சாபங்கள் நிவர்த்தியாகும்
ஏகமாய்ச் சொல்லிவிட்டேன் இயம்பக் காணே. 6

காணப்பா ஆறுவரை குறுக்கே கீறி
களங்கமில்லா தூறுவரை நேரே கீறி
ஆணப்பா இருபத்தஞ் சரையுமாச்சு
அடைவான முனைதோறும் சூலம் போடு
தாணப்பா முதலறையில் நாலு கோணம்
தயவான நகராமொடு அகாரங் கூட
வாணப்பா ஐயோடு உகாரந் தோணும்
வளமான லக்கமது ஒன்பதாமே. 7

ஆமப்பா அடுத்தறையிற் பிறைதான் தோணும்
அடைவான மகாரமொடு இகாரங் கூடத்
தாமப்பா கிலியோடு வகாரந் தானும்
தயவான லக்கமது பதினொன்றாகும்
வாமப்பா அடுத்தறையில் முக்கோணந்தான்
வளமான சிகாரமொடு உகாரந் தானும்
நாமப்பா சவ்வுடனே நகாரந் தொட்டு
நலமான லக்கமது நாலும் ஆமே. 8

ஆமடா இதனருகே அறுகோணந்தான்
அடைவான வகாரமொடு எகாரந் தானும்
தாமடா ஸ்ரீமுடனே யகாரங் கூடத்
தயவான லக்கமது பதினைந்தாகும்
வாமடா இதனருகே வட்டம்போடு
வளமான யகாரமொடு ஒகாரந் தானும்
நாமமடா ஹரிஓம் என்று நாட்டி
நலமான அகாரலெக்கம் ஈராறாமே. 9

ஆரப்பா தம்பனத்தின் மகிமை மெத்த
அப்பனே தம்பனம்போல் உண்டோ வித்தை
வாரப்பா அஞ்செழுத்தின் பீசஞ் சொல்வேன்
வளமான சிகாரத்தில் நகாரம் வை நீ
நாரப்பா யகாரத்தில் மகாரம் வை நீ
நலமான வகாரத்தில் சிகாரம் மாட்டு
காரப்பா மகாரத்தில் வகாரம் மாட்டு
கணக்காக நகாரத்தில் யகார மாட்டே. 10

மாட்டடா அஞ்செழுத்துக் காணும் பெண்ணும்
வரைதோறும் பீசத்தை அணுக மாட்டு
வாட்டடா பீசமில்லா விட்டால் மைந்தா
வளமாகப் பலியாது பீசம் விட்டால்
ஆட்டடா அஞ்செழுத்தின் தொகைதான் கேளு
அகரமுதல் நகரம்வரை ஒன்பதாச்சு
கூட்டடா மகாரமென்ற மால்தனக்குக்
கொள்அகர முதல்மகரம் பதினொன்றாச்சே. 11

ஏச்சப்பா சிகாரமென்ற உருத்திரற்கு
இகரமுதல் சிகரம்வரை நாலதாகும்
ப்பாச்சப்பா வகாரமென்ற மகேசனுக்குப்
பதிஅகர முதல்வகரம் பதினைந்தாச்சு
வீச்சப்பா யகாரமென்ற சதாசிவற்கு
மேல்அகரம் முதல்யகரம் ஈராறாகும்
காச்சப்பா ஐம்பத்தோர் எழுத்துந் தானாய்க்
கருதிநின்ற சிதம்பரற்குக் கண்தான் மூன்றே. 12

மூன்றான நடுவணையை எடுத்து மாறி
முன்வரைந்த சக்கரமோர் இருபத்து அஞ்சில்
நான்றான சூலத்தின் இடைகள் தோறும்
நாயகனே ரீயும்ஸ்ரீயும் என்று மாட்டு
பான்றான சூலமுனை ஸ்ரீமம் போடு
பண்பான திரிவட்டம் பாங்காய்ச் சூட்டு
ஊன்றான உள்வட்ட அமிழ்தான் மூன்று
உத்தமனே இருவட்டம் இதஈட்டே 13

எட்டான திரிவட்டம் எண்நான்கு அகப்பா
இதமாக நடுவட்ட முதலாம் ஆதி
கட்டான அகாரமுதல் ஒகார மட்டும்
கனிவாக ஐம்பத்து ஒன்றுமாச்சு
கிட்டான உபரேகை வாசல் நாலு
கீழ்வாசல் கணபதிக்குக் கங்கு நாட்டு
நட்டான மேல்வாசல் வடுகன் பீசம்
நாயகனே வங்கென்று நாட்டிடாயே. 14

நாட்டியே தென்வாசல் பிரிதி பீசம்
நலமாக இம்மென்று நாட்டு நாட்டு
கூட்டியே வடவாசல் மதியின் பீசம்
குணமாகச் சம்மென்று குறித்துப் போடு
ஆட்டியே உபரேகை வீதிக்குள்ளே
அடைவாக இந்திரன் லம்மாம் பாரு
வாட்டியே அக்கினியில் ரம்மென்றப்பா
வளமாக எமனிற்சம் மென்று போடே. 15

போடவே நிருதியிலே உம்மே யாகும்
பொலிவான வருணனிலே வம்மே பாரு
சாடவே வாய்வதனில் பம்மே போடு
சார்வான குபேரனில் ஏளம்மே நாட்டு
வீடவே ஈசான்யம் சம்மே சேரு
விதமான அட்டதிக்குப் பாலராச்சு
ஆடவே போகருட கடாட்சத்தாலே
அப்பனே புலிப்பாணி பாடினேனே. 16

பாடினேன் தமிழெழுத்தில் அகாரம் தொட்டு
பண்பான பிரணவத்தின் வரைக்கும் போடு
கூடியே தமிழெழுத்தில் அகாரந் தொட்டு
கொற்றவனே ஔவரையில் உயிராய்ப் பாரு
ஆடியே தசாங்கமென்ற எழுத்தோ பத்து
அப்பனே சக்கரத்திற் சுத்திப்போடு
நாடியே சக்கரத்தில் சுத்திப் போட
நலமாக ஈரஞ்சு எழுத்தும் ஆச்சே. 17

ஆச்சப்பா அசபையுட எழுத்து அச்சம்அம்
அடைவாக மேல்வாசல் கீழே போடு
பாச்சப்பா வலமங்கி சத்தி பீசம்
பண்பாக அம்மென்று பதித்துப் போடு
வாச்சப்பா இடம்பரா சத்தி பீசம்
வளமாகக் கிறோமென்று குறித்துப் போடு
வீச்சப்பா வலப்பாகம் இடப்பாகந்தான்
விதமான ஐயும்கிலியும் சவ்வுமாமே. 18

ஆமடா அம்இம்உம் எம்ஒம்மென்றே
அய்யபஞ்ச பட்சிஇரு புறமும்போடு
வாமடா அம்-சம் ஸ்ரீயும்மென்று
வளமாக மங்குடனே நசியென்றோது
தாமடா கிறீம்முடனே ரீமுங் கூட்டித்
தயவான விம்முடனே அங்கியென்று
நாமடா நவக்கிரக பீசம் ஆச்சு
நலமான சக்கரத்திற் சுத்திப் போடே. 19

போடப்பா சொரூபியென்ற எழுத்தும் அப்பா
புகழ்தருவம் கிலியல்லோ மதன பீசம்
நாடப்பா கீழ்வாசல் மேலே அப்பா
நலமாக ஈதிரண்டும் பதித்துப் போடு
கூடப்பா சிதம்பரத்தின் பூசை செய்யக்
கூத்தாடுங் கணங்கள்முதல் எல்லாம் ஆடும்
ஆடப்பா போகருட கடாட்சத்தாலே
அடைவாகப் புலிப்பாணி பாடினேனே. 20

பாடியே அகாரத்தில் உகாரம் இட்டுப்
பண்பான ஓங்காரங் கொண்டு கட்டி
நாடியே அதன்கீழே மகாரம் இட்டு
நலமாக அதின்மேலே ரீங்காரந்தான்
கூடியே அரியெழுத்து மேலே தூக்கிக்
குணமாகச் சூலமிட்டு ஸ்ரீமம் நாட்டு
ஆடியே சிங்குவங்கு என்று நாட்டு
அடைவாயே காட்சரத்தைப்பதித்துப் போடே 21

போடுசிந்தா மணிக்குச்சி காரமிட்டு
பொங்கமுடன் மகாரமொடு யகாரம்போடு
ஆடவே அகாரமுடன் விந்தை போட்டு
அடைவாஞ்சக் கரத்தில்திரு வாசி சூட்டுக்
கூடச்சிந் தாமணிக்குப் பீசம் ஆச்சு
குணமான சக்கரத்திற் பதித்துப் போடு
நாடியே போகருட கடாட்சத்தாலே
நலமாகப் புலிப்பாணி பாடினேனே. 22

பாடியே வலப்புருவம் அகாரம் போடு
பண்பான இடப்புருவம் ஆகாரந்தான்
நாடியே வலக்கண்ணு இகாரம் போடு
நலமான இடக்கண்ணு ஈகாரந்தான்
சாடியே வலக்காது உகாரம் போடு
சமத்தான இக்காது ஊகாரந்தான்
வாடியே வலக்கன்னம் இரோம்நீ போடு
வடிவான இடக்கன்னம் ஈரோம் நாட்டே 23

நாட்டடா வலமூக்கு இல்லாவென்று
நாயகனே இடமூக்கு இல்லாவாகும்
ஆட்டடா மேலுதடு ஏயைப் போடு
அடைவான கீழுதடு ஐயைப் போடு
கூட்டடா மேற்றந்தம் ஓவ்வைப் போடு
குணமான கீழ்த்தந்தம் ஔவை நாட்டு
மாட்டடா நாவதிலே அம்மென்றப்பா
மணியான கண்டத்தில் அகாரம் எண்ணே. 24

எண்ணவே சக்கரத்திற் பதித்த பின்பு
இதமான சாபங்கள் நிவிர்த்தி செய்து
நண்ணவே பிராணபிர திட்டை செய்து
நவிலுவோம் பூசைசோ டசமும்செய்து
அண்ணவே சுகந்தபரி மளங்கள் புட்பம்
அடைவாக அர்ச்சித்துக் கனிகளோடு
தண்ணவே பலகாரம் பரமானந்தம்
தாம்பூலம் இளநீரும் பாலுந் தேனே. 25

தேனான பானக்கம் அன்னத்தோடு
தெளிவாகும் ஆறுசுவை வத்து சுத்தி
தானான சருவமும் சுத்தி வைத்துத்
தயவாகப் பூசித்துத் தியானம் ஓது
வானான கற்பூரத் தீபம் ஏற்றி
வணங்கவே அட்டசித்தும் சித்தியாகும்
மானான அட்டசத்தி நடனஞ் செய்வாள்
வானவரும் லோகமெல்லாம் வசியமாமே. 26

ஆமேதான் யநமசிவ வசிய மாகும்
 வளமான நமசிவய தம்பனந்தான்
தாமேதான் மசிவயந மோகனந்தான்
 தன்மைபெற சிவயநம மாரணந்தான்
நாமேதான் வயநமசி உச்சாடானம்
 நலமான யவசிமந பேதனந்தான்
பாமேதான் நமவசிய வித்து வேடம்
 பண்பாக வசிமநய அழைப்பும் ஆமே. 27

ஆமடா காரீயம் வசியமாகும்
 அப்பனே பித்தளைமோ கனமே சித்தி
தாமடா பசும்பொன்தான் அழைப்பதாகும்
 தயவான செம்புதம் பனமே செய்யும்
வாமடா வெள்ளீயம் உச்சாடிக்கும்
 வளமாம்வெங் கலம்வித்து வேடணந்தான்
போமடா இரும்புபே தனமேயாகும்
 பொங்கமுடன் வெள்ளி மாரணந்தான் ஆமே. 28

தானென்ற தலைமஞ்சள் கொடியு மாவும்
 தயவாகத் தான்பூசி உலரப் போடு
ஊனென்ற முப்புரவி மதியின் பீசம்
 உத்தமனே உடன்கூட்டித் தயிலம் வாங்கி
ஆனென்ற அட்டகர்ம எட்டெட்டுக்கும்
 அடைவான தொழில்முறைக்கும் எல்லாமாகும்
நானென்ற போகருட கடாட்சத்தாலே
 நலமாகப் புலிப்பாணி பாடினேனே. 29

பாடியே மோகனதம் பன வசியம்
பண்பான அழைப்புமுத லிவை நாலுக்கும்
வாடியே ஆள்காட்டி விரலே் நீளம்
வளமாகப் பெருவிரலின் அகலம் அப்பா
சாடியே மாரண பேதன வித்வேடம்
சார்ந்திடும் உச் சாடனங்கங் இவை நாலுக்கும்
கூடியே பவுத்திர விரல் நீளமப்பா
குணமான சிறுவிரலின் அகலமாமே. 30

ஆமடா ஈரையாறு வீசமாகும்
அப்பனே பன்னிரண்டு ஆரைருக்காலாகும்
தாமடா மூவெட்டுக்காலேயாகும்
தயவாக இதிலிரட்டி அரையேயாகும்
வாமடா இதிலிரட்டி முழுதென்பார்கள்
வளமான கனமப்பா நெற்கனந்தான்
நாமடா வீசமது ஒருநெல்லாகும்
நலமான சிதம்பரத்தின் பூசை காணே. 31

**வாசம்**

காணப்பா ஞாயிறதில் வசியமாகும்
கண்மணியே செவ்வாய் மோ கனமும் ஆகும்
தாணப்பா வியாழனும் உச் சாடனந்தான்
தகமைபெரும் திங்கள் தம் பனமாம் பாரு
வாணப்பா புதனில்மா ரணமதாகும்
வண்மைவெள்ளி வாரமதில் அழைப்பதாகும்
நாணப்பா சனியில்வித்து வேடணந்தான்
நலமான ஞாயிறு பேதனந்தான் ஆமே. 32

## திக்கு

நாமேதான் ஈசான்யம் வசியமாகும்
நலமான அக்கினிமோ கனமாம் பாரு
தாமேதான் நிருதியில் சாடனந்தான்
தலைமைபெரும் இந்திரன் தம்பனமதாகும்
வாமேதான் ஏமன்மா ரணம் ஆகும்
வளமான வருணனது அழைப்பாம் பாரு
காமேதான் வாயுவித்து வேடணந்தான்
கனமான குபேரன்பே தனமாம் செய்யே. 33

செய்யவே ருத்திராட்சம் வசியமாகும்
செயலான மிளகுமணி மோகனந்தான்
அய்யவே துளசிமணி உச்சாடானம்
அப்பனே தாமரைதம் பனமாம் பாரு
நையவே நாகமணி மாரணந்தான்
நலமான சங்குமணி அழைப்பதாகும்
வையவே எட்டிமணி வித்துவேடம்
வளமான பேதனம்வெண் முத்துத் தானே 34

## பலகை ஆசனம்

தான்என்ற பலாப்பலகை தம்பனந்தான்
தன்மைபெரும் மாம்பலகை மோகனந்தான்
நான்என்ற வில்வமது விசயமாகும்
நல்லபேய்த் தேத்தான்பே தனமதாகும்
கானென்ற எட்டிவித்து வேடணந்தான்
கண்மணியே அத்தியும் மாரணமதாகும்
வானென்ற அழைப்புவெண் நாவலாகும்
வளமாம்வெப் பாலைஉச்சா டனமாம் பாரே. 35

பாரப்பா மல்லிகைதான் வசியமாகும்
பகரரிய முல்லைமோ கனமும் ஆகும்
ஆரப்பா தும்பையதுஉச்சாடனந்தான்
அப்பனே அரளியா கிருட்டிணந்தான்
வாரப்பா காக்கணத்தி பிரிவும் ஆகும்
வளமான பேதனம் ஊமத்தம் பூவு
நாரப்பா கடலைப்பூ மாரணந்தான்
நலமான தாமரை தம்பனந்தான் ஆமே. 36

## பட்டு வத்திரம்

ஆமப்பா செம்பட்டு வசியமாகும்
அப்பனே மஞ்சளது மோகனந்தான்
நாமப்பா பச்சையுந் தம்பனமதாகும்
நலமான வெள்ளையது பேதனந்தான்
காமப்பா கழுதைநிறம் வேடணந்தான்
கண்மணிஉச் சாடனந்தான் பஞ்ச வர்ணம்
வாமப்பா ஆந்தைவர்ணம் அழைப்பதாகும்
வளமான கறுப்பு மாரணமாம் கேளே. 37

## ஓம குண்டம்

கேளப்பா மணலில்நவ கோணமாகக்
கீழ்ப்போட்டு மணலாலே கட்டிக் கொண்டு
வாளப்பா கிழக்குமுகம் பார்வையாக
வளமான மணலாலே பரப்பிக் கொண்டு
ஆளப்பா நவகோணம் நடுவே மைந்தா
அப்பனே சாண்நிகளஞ் சதுரந் தோண்டி
நாளப்பா சமுத்துவகை சொல்லக் கேளு
நலமான அரசினொடு மாவின் சுப்பி 38

சுப்பென்ற புங்கினொடு அத்திக் கொம்பு
சொலவெட்டி வேர்விலா மிச்சியோடு
அப்பென்ற ஆலுடன்மல் லிகையின் சுப்பி
அப்பனே நெல்லிசுப்பி நவ்வல் சுப்பி
கப்பென்ற ஆத்திசுப்பி இலுப்பை சுப்பி
கண்மணியே பேய்அத்திச் சுப்பிலோடு
நப்பென்ற கடுக்கு ரோகணியுங் கூட
நலான எருக்கினொடு கள்ளிக் கொம்பே. 39

கொம்பானம்பன் னாறுமா ரணத்துக்காகும்
கொடிதாம்வேப் பெண்ணெய்மா ரணத்துக்காகும்
நம்பான என்னூலிற் சமித்தும் எண்ணெய்
நம்பவொளிப் பில்லாமல் திறந்து சொன்னேன்
அம்பான சிதம்பரத்தின் நடனங் காண
அப்பனே பூசைவிதி நன்றாய்ச் சொன்னேன்
வம்பான போகருட கிருபை தன்னால்
வளமாக சிதம்பரத்தின் பூசை பாரே. 40

## மூலமந்திரம்

வசியம்-ஓம் யநமசிவ அரிஓம் ஐயும்கிலியும் சுவாகா
தம்பனம்-ஓம்நமசிவய ஐயும் கிலியும் சவ்வும் சுவாகா
மோகனம்-ஓம் மசிவயநகிலியும் சவ்வும்ஸ்ரீயும்சுவாகா
மாரணம்-ஓம் சிவயநம சவ்வும்ஸ்ரீயும் அரிஓம்சுவாகா
உச்சாடனம்-ஓம் வயநமசிஸ்ரீயும்அரிஓம் ஐயும்சுவாகா
பேதனம்-ஓம் யவசிமநஅரிஓம் ஸ்ரீயும் சவ்வும் சுவாகா
வித்துவேஷணம்-ஓம் நமசிவய ஐயும் கிலியும் ஸ்ரீயும் சுவாகா
அழைப்பு-ஓம் வசிமநயஸ்ரீயும்சவ்வும் கிலியும் சுவாகா.

## பகவதி தியானம்

பாரப்பா இன்னமொரு தீட்சை மார்க்கம்
பத்தியுள்ள பாலகனே சொல்லக் கேளு
நேரப்பா பகவ்தியாள் தியானந் தன்னை
நேர்மையுடன் சொல்லுகிறேன் நிசமதாகச்
சாரப்பா தன்சார்பு நிலையில் நின்று
சங்கையுடன் ஓம்றீங்அங் உங்கென்றேதான்
காரப்பா புருவநடுக் கமலத்தேகி
கருணையுடன் ஆயிரத்தெண் உருவே செய்யே. 41

செய்யடா மானதமாய் உருவே செய்யத்
திருவுருவாய் நின்றபக வதியாள் தானும்
மெய்யடா உனதிடமாய் நடனஞ் செய்வாள்
மெய்ஞ்ஞானக் கருணைவிழிக் கண்ணாற் பார்த்துக்
கையடா கூப்பிஅடி பணிந்து கொண்டு
கருணைபர தேவதா பகவதி வாவென்று
வையடா அமுதரச பானம் வைத்து
மார்க்கமுள்ள ராசராசேஸ் வரியே என்னே. 42

என்னம்மா ராஜராஜேஸ் பரியே என்று
ஏகநிரா மயமாகத் தியானம் பண்ணிக்
கன்னம்மா கமலாயி மந்திர ரூபி
கமலசித்து ரூபிசிவ சோதித் தாயே
முன்னம்மா நீயிருந்து என்னைக் காத்து
முத்தியுடன் நினைத்தபடி சுத்தமாகப்
பன்னம்மா இதுசமயம் என்று நீயும்
பதிவாக விபூதியைநீ தரித்துக் கொள்ளே. 43

கொள்ளடா விபூதியை தியானம் பண்ணிக்
கூசாமல் நெற்றியிலே அணிந்துகொண்டு
நில்லடா உன்சமுகம் கண்டோர்க்கெல்லாம்
நீங்காத பாவமெல்லாம் நீங்கிப் போகும்
சொல்லடா உன்வசனம் நன்மையாகும்
சோதிதிரு பகவதியாள் சுருக்கினாலே
அல்லடா உன்மனத்தை நோகப் பண்ணும்
அவர்கள்குடி செந்தியிலே அழுந்தும் பாரே. 44

பாரப்பா பகவதிசென் றிருக்கும் நாடு
பாதாள மலையாளம் நடுநாடாகும்
காரப்பா மலையாள நடுநாடையா
கண்மூக்கு மத்திஎன்ற உச்சி வட்டம்
நேரப்பா உச்சிவட்ட மலையாளத்தில்
நிலையான பகவதியை யார்தான் காண்பார்
ஆரப்பா அறிவார்கள் ஆரும் இல்லை
அந்தமலை உச்சிஅடி வாரம் பாரே 45

பாரப்பா உச்சிஅடி வாரமான
பதிவான மலையாள பகவதிதன் பீசம்
நேரப்பா சொல்லுகிறேன் ஸ்ரீம்-றீங்-கென்று
நிலையான மலையாளத் துருவம் மீதிற்
சாரப்பா சார்ந்துமந்த அடிவாரத்திற்
சந்திரனைச் சூரியனிற் சாரப் பண்ணிக்
காரப்பா அக்கினிகொண்டு உயர ஏறிக்
கண்ணாரியக் கண்ணாரத் தியானம் பண்ணே. 46

பண்ணப்பா பகவதியைத் தியானம் பண்ணப்
பரஞான் கேசரியிற் பளிரென்றேதான்
உண்ணப்பா நிறைந்ததிருக் கண்ணில் தோணும்
உத்திதரும் அவ்வொளியில் நின்று பாரு
மண்ணப்பா குவிந்தமலை யாளந் தன்னில்
மக்களே வெகுநிதிகள் காணலாகும்
எண்ணப்பா அதனில்வெகு சேதி காணும்
எங்கினும்நன் றாகவேநீ நின்று பாரே. 47

நின்றுமிகப் பார்க்கையிலே மைந்தா மைந்தா
நிசமாக அருளோடு பொருளுங் கண்டேன்
அண்டரொடு முனிவர்களும் இரிடிகள் சித்தர்
அநேகவிதம் விதவிதமாய் அங்கே கண்டேன்
பண்டுடைய வேதமொடு சாத்திரங்கள்
பலவிதமாய் நின்றுவிளையாடல் கண்டேன்
கண்டதொரு காட்சியெல்லாம் அங்கே கண்டேன்
கலந்துவெளி வெளியான கருக் கண்டேனே. 48

கருக்கண்டு கருவறிந்து உண்ணும் போது
கருவுருவாய் நின்றதொரு நாதங் கண்டேன்
உருக்கொண்டு நின்றதொரு நாதந்தானும்
ஓமுடிந்து நின்றவிடம் பார்க்கும் போது
திருக்கண்டு ஆடியது முடிந்ததப்பா
சிவசிவா வென்னசொல்வேன் வெளிதா ஆச்சு
மருக்கொண்டு நின்றவெளி தன்னைக் கேளு
மகத்தான அண்டவெளி உச்சி தானே. 49

உச்சியென்ற மூலமடா ஆர்தான் காண்பார்
உண்மையென்ற ரகசியத்தை வெளிவிடாதே
பட்சியென்ற பட்சியடா அண்டரண்டம்
பாய்ந்துநின்ற மத்தியடா புருவ மத்தி
குச்சியென்ற கோலதனால் அளந்து பார்க்கக்
கொடிமுடிக்கும் அடிப்படைக்கும் மிச்சமாச்சு
உச்சமென்ற மாளிகையில் நின்று பார்த்தால்
ஓங்காரக் கம்பநுனி மிச்சமாச்சே. 50

ஆச்சப்பா மிச்சமதாய் நின்ற மிச்சம்
அண்டமென்ற சுழினையிலே நின்று பார்த்தேன்
காச்சப்பா கம்பநுனி மிச்சம் பார்த்தால்
கம்பநுனி கற்பூர தீபம்போலே
பேச்சப்பா பேசாத சோதியாச்சு
பிரணவமாய் நின்றதொரு சோதித் தாயே
மூச்சப்பா நிறைந்ததிரு வாசியாலே
முனைகண்டு கம்பமதில் ஏறினேனே. 51

ஏறினேன் கவுதகிரி வட்டமேறி
ஏகாந்த வெளியொளியைப் பார்த்து மைந்தா
மீறினேன் அகாரமதிற் செயல்தன்னாலே
மின்னொளியின் அமுர்தரச பானங் கொண்டு
தேறினேன் சாகாத கால்மேல் நின்று
தெளிந்துகொண்டு போகாத புனலைக் கண்டு
ஆறினேன் வேகாத தலையைக் கொண்டு
அடங்கினேன் அப்பொழுது அடங்கினேனே. 52

உ

கடவுள் துணை

போக மகாரிஷி திருவாய் மலர்ந்தருளிய

# ஞான பூசா விதி 13

பாரப்பா வாலைதனைத் தியானஞ் செய்யப்
பாங்கான நவகோணம் இட்டுச் சூழச்
சேரப்பா இருவளையம் வாசல் நாலு
சிகாரமுதல் ரீங்கார மிட்டு நன்றாய்க்
காரப்பா கீழ்வாசல் கணபதியுங் கந்தன்
கருணையுள்ள செயவீர வாகு தேவர்
ஆரப்பா அரைகள்முதல் கிழக்குத்தொட்டு
அகாரமுடன் உகாரசவ் வகாரம்போடே. 1

சவ்வோடே ஓங்கிலீங் காரமிட்டுத்
தடுத்துநின்ற மயேசுவரியை நடுவே வைத்து
செவ்வேதான் மும்மூலச் சூலம் போட்டுச்
சிகாரமுடன் வகாரமதிற் சிறக்கப் போட்டு
லவ்யவ்வும் உகாரமடி கீழே இட்டு
லாலீலூ வென்றுமுடி மேலே போட்டு
வவ்வோடே இருபுறமக் கரமும்போட்டு
வாலைதனை நடுவீட்டில் மதித்திடாயே. 2

மதித்திருந்த வாலையுட வலப்பாகத்தில்
மயேசுரனாம் விந்துவதில் வளையம் போட்டு
விதித்திருந்த மூலஓங் காரந் தன்னை
வீறாக இடப்புறத்தே மேவிப் போட்டு
சதித்திருந்த வடுகனொடு துர்க்கை காளி
சாமுண்டி மாலினியும் வராகி தானும்
விதித்திருந்த உன்மனையும் புவனை தானும்
வீறாக வாசலிலே வைத்துப் போற்றே. 3

போற்றென்றார் எந்தைக்கு நந்தி ஈசர்
புகழாக இந்தமுறை எனக்குச் சொன்னார்
ஆற்றென்றுங் கொங்கணர்க்கு யானுஞ் சொன்னேன்
அப்படியே கண்டவர்க்கு அவருஞ் சொன்னார்
ஏற்றென்று பூரணத்தின் விசாலம்போல
இயல்பாகச் சித்தரும்அப் படியே செய்வார்
காற்றென்று வாலைதனை நித்த நித்தம்
கருணைமற வாமல்நீ பூசை செய்யே. 4

பூசையது செய்வதற்கு வாதஞ் சித்தி
பூண்டிருந்தால் காயசித்தி யோக சித்தி
ஆசையென்ற பேரின்ப ஞானம் எய்தும்
அண்டபகி ரண்டமெல்லாம் அடியிற் போற்று
மாசையென்ற பலவிதங்கள் எல்லாம் வீழும்
மாறுவிதம் அறியாமல் மாண்டார் சுவாமி
காசையென்றுந் தேடுகின்ற சண்டாளர்க்குக்
காணாது கெதியில்லை கடினந்தானே. 5

காணாது நின்றுரைத்த வாலை தன்னைக்
கண்மூக்கு மத்தியிலே கருதிப் பாரு
தோணாது மற்றொன்று குருக்கள் பேதம்
சொற்பேதம் பொருட்பேதம் துறையோ பேதம்
பூணாது வேதமொடு சாத்திர பேதம்
பொற்பதுமை போலிருக்கும் பொறிகள் வாடி
கோணாது நின்றவரே குருவைக் காண்பார்
குருகாணார் ஆனைகண்ட குருடர் ஆமே. 6

ஆமப்பா இதுவல்லோ தீட்சையென்று
அறிவுடைய பெரியோர்கள் அறிவிப்பார்காண்
ஓமப்பா மூலமந் திரத்தைக் கேளு
ஒருமொழியாய் மூலகுரு உபதேசித்தார்
வேமப்பா ஐயென்றுங் கிலியும் என்றும்
வீறுடைய சவ்வென்றும் மூலம் மூன்றுஞ்
சாமப்பா சஞ்சிதம் பிரார்த்வ காம்யந்
தலைமாறி ஓலையிலே வரைந்திடாயே. 7

வரைந்திந்த மூன்றெழுத்துந் தலைதூக்காக
வாள்கடுகு வெந்தயமும் ஓமங் கூட
இரைந்துள்ளிக் காயமிவை ஐந்தும்நேராய்
இருசாமம் அரைத்ததனைத் தகட்டிற் பூசி
நிரைந்தபகை யாரென்று நாமஞ் சொல்லி
நிமிடத்திற் தணல்காட்ட நீறிப்போகும்
பரைந்தபரை சிவனாலும் வெல்லப் போகா
பருத்திதனிற் பொரிபோலே பத்துந்தானே. 8


தானென்ற பொருளைவிஞ்சை என்றுசொல்வார்
தவமாகும் அவமாகும் சராசரங்கள்
தேனென்ற மதுவாகும் ஆறுதலங் காணும்
சித்தியுடன் குளிகைநன்றாய்ச் சிக்கிக் கொள்ளும்
கோனென்ற புவனையைநீ பூசை பண்ணக்
குறிப்பாகச் சொல்லுகிறேன் குவிந்துகேளும்
பாலென்ற மதுவோர்பால் பலகாரங்கள்
பாங்கான சித்தியென்று புடைத்திடாயே. 9

படைத்தல்லோ புதியவொரு சாட்சி கூட்டிப்
பராபரமாங் கடத்தைமுன்னே சுத்தி செய்து
அடைத்தல்லோ பாத்திரங்கள் ஐந்து வைத்து
அப்பனே தூபமொடு தீபம் ஏத்தி
முடைத்தல்லோ புட்பஅர்ச் சனையுஞ் செய்து
முறையோடே சித்தருட சாபந் தீர்த்து
விடைத்தல்லோ போகாமல் மனத்திடத்தால்
வீறாகப் பூசித்துப் பொசித்திடாயே. 10


பொசித்தவுடன் சொக்கியிடும் பூரணத்தில் அன்பு
பொல்லாத பாவியென்றால் மாயை மூடும்
பசித்தல்லோ செத்தார்கள் உலகத்தோர்கள்
பசியாது வாலைதனைப் பணிவோர்க்கு என்றும்
நிசத்தல்லோ ஈராறு சமையத்தோர்கள்
நிதியத்தார் கெதியத்தார் மூடமானார்
கசிந்தார்கால் கனிந்தாக்கால் எல்லாஞ் சித்தி
கனியாட்டால் ஒன்றுமில்லை கண்டு பாரே. 11

கண்டுகண்டு மனந்தேறி நிலையில் நிற்கக்
காரணமும் பூரணமுங் கலந்துபோகும்
மொண்டுமொண்டு இளைப்பாறி அனைத்தும் விட்டு
மூலமுதல் நடுவுரைக்கும் முடிவில் ஏறித்
தண்டுமுண்டு செய்யாமூன் றெழுத்தைப்போற்றிச்
சச்சிதா னந்தமென்ற அறிவில் நின்று
தொண்டுசெய்யப் பரையுனது வசமே ஆவாள்
துரியம்விட்டு அதீதமதில் தொடர்ந்து கூடே. 12

கூடியங்கே அவரவரைக் கண்டு பேச
கூசாமல் அனவாதங் குமுறியாடு
தேடிஎங்கும் இந்தமுறை கிட்டாதப்பா
தேவிமுதற் சிவனங்கே நடனஞ் செய்வார்
நாடிநின்று வாடாதே என்தாய் பூசை
நல்லவர்க்கும் எய்துமடா கன்மிக்கில்லை
பாடி இந்தப் பதின்மூன்று பாட்டுக்குள்ளே
பரபூசை சிவபூசை பகர்ந்தேன் முற்றே. 13



திருநீறு அணியுமிடம்
( முன் பக்கம் )



திருநீறு அணியுமிடம்
( பின் பக்கம் )

# சங்கர் பதிப்பகம்

21, ஆசிரியர் சங்கக் குடியிருப்பு,
இராஜாஜி நகர் விரிவு, வில்லிவாக்கம்,
சென்னை - 600 049.
தொலைபேசி எண் 6502086